
உ
திருமுருகன் துணை
ஸ்ரீ பாலசித்தர் பதமலர் போற்றி!
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க!

மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்
மயிலம் & பொம்மையபாளையம்

வீரசைவ நோக்கில் நால்வர் நான்மணி மாலை



விளக்கவுரை ஆசிரியர்
சித்தாந்த செம்மணி
முனைவர் பழ. முத்தப்பன்

மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு
2022

உ
திருமுருகன் துணை
ஸ்ரீ பாலசித்தர் பதமலர் போற்றி
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க

மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்
மயிலம் & பொம்மையபாளையம்
வெளியீடு - 2022

வீரசைவ நோக்கில் நால்வர் நான்மணி மாலை

விளக்கவுரை ஆசிரியர்
சித்தாந்த செம்மணி
முனைவர் **பழ. முத்தப்பன்**
மேனாள் முதல்வர்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி


பதிப்பாசிரியர்
நல்லாவூர்
முனைவர் **ச. திருநாவுக்கரசு**
முதல்வர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்,
கலை, அறிவியல் கல்லூரி மயிலம்

நூல் குறிப்பு

தலைப்பு	:	வீரசைவ நோக்கில் நால்வர் நான்மணி மாலை
மூலநூல் ஆசிரியர்	:	கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்
விளக்கவுரை ஆசிரியர்	:	சித்தாந்த செம்மணி முனைவர் பழ. முத்தப்பன்
பதிப்பாசிரியர்	:	நல்லாவூர் முனைவர் ச. திருநாவுக்கரசு
பதிப்பு	:	முதற்பதிப்பு 2022
உரிமை & வெளியீடு	:	மயிலம் பொம்மபுர ஆதீனம் மயிலம்- 604 304 தொலைபேசி எண்: 04147-241223 பொம்மையபாளையம் தொலைபேசி எண்: 0413-655188
பொருள்	:	இலக்கியம்
தாள்	:	மேப்லித்தோ வெள்ளை
அளவு	:	டெம்மி
எழுத்து	:	12 புள்ளி
பக்கங்கள்	:	146
விலை	:	ரூ. 100/-
படிகள்	:	1000
அச்சிட்டோர்	:	ஸ்ரீ ராஜீ பிரிண்டர்ஸ், 70, தில்லை சிதம்பரம் தெரு, சிவகாசி, 9442521883
ISBN எண்	:	978-93-85508-11-0



மயிலம் - பொம்மபுர ஆதீனம்
மயிலம் திருமடத்தில் அமைந்துள்ள
ஸ்ரீவள்ளி தெய்வானையர் உடனுறை
ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி



திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்
பதினெட்டாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
கல்லூரி நிறுவனர்



திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்
பத்தொன்பதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
மேனாள் செயலர், மேனாள் முகமைத் தலைவர்



திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்
இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
செயலர், முகமைத் தலைவர்

குருமரபு வாழ்த்து

பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்
வீரசைவ பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த
சங்குகன்னப் பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன்
வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற்
குருமரபு சிறந்து வாழி.

பிலவ ஆண்டு பங்குனித் திங்கள் 20ஆம் நாள் (03.04.2022) ஞாயிற்றுக் கிழமை அன்று திருச்சி உறையூரில் வாகீச பக்த ஜனசபை சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் சார்பாக நடைபெற்ற "மயிலம் பொம்மபுர ஆதீனம் நூல் வெளியீட்டு விழா, வாகீச பக்த ஜனசபை 104 ஆவது ஆண்டு வாகீச பக்த ஜனசபை சமரச சுத்த சன்மார்க்க சங்கம் 66 ஆவது ஆண்டு விழாவில்" 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்களின் திருக்கரங்களால் இந்நூலை வெளியிடப் பட்டது.



உ
சிவா முருகா
சிவமயம்
ஸ்ரீ பாலசித்த குருவே நம:

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்
மயிலம் & பொம்மையபாளையம், விழுப்புரம் மாவட்டம்
மயிலம் பொம்மபுர ஆதீனம் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம்

சீர்வளர்சீர் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

அருளிய

ஆசியுரை

அம்மா சிவஞானி அடிக்கமலம்
மும்மாயை கடந்து முயங்கும் அது
சும்மா தலைமீது சுமத்தினால்
கைம்மாறு உளதோ கடையேன் இடையே

இறைவனை வழிபாடு செய்வதில் பல வழிமுறைகளை நமது முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். அந்த வழிமுறைகளில் சென்று இறைவனை வழிபடுதல் நலம் பயக்கும். அப்போது இறைவனை வெகுவிரைவில் நாம் சென்றடைய முடியும். அப்படி முன்னோர்கள் சொல்லிய வழிமுறைகளில் ஒன்று கேட்டல் ஆகும். "கற்றிலன் ஆயினும் கேட்க" என்றும் "செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்" என்றும் திருவள்ளுவர் கூறுவதைப் பின்பற்றினாலே போதுமானது.

இறைவனைப் பற்றிய பெருமைகளையும் புகழையும் கேட்டு வழிபாடு செய்தல் நல்லது. ஆகையால் இறைவனைப் பற்றிப் பலவற்றையும் அறிந்தவர்கள் சொல்வதைக் கேட்டால் போதும். கேட்பது என்பது ஒருவர் சொல்வதைப் பொறுமையாகத் தெளிவாகக் கேட்டு அறிந்து கொள்வதற்கும் மனம் ஒத்துழைக்க வேண்டும்.

மனம் என்பது உடலில் இருந்து வேறுபட்டதல்ல. நமது எண்ணங்கள், சிந்தனைகள், உள்வாங்கப்பட்ட கருத்துகள் எல்லாமுமாகச் சேர்ந்து நம் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு வகையான பேராற்றலை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. ஒரு மனிதன் வாழ்வது, வீழ்வது, வெற்றி பெறுவது, தோல்வி பெறுவது

எல்லாமே மனம் என்னும் ஆற்றலால் தான். அத்தகைய மனதில் நல்ல சிந்தனைகளை, கருத்துகளைக் கொண்டு நிறைத்துக் கொள்ள வேண்டும். வள்ளுவரும் "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன், ஆகுல நீர பிற" என்கிறார். நம்மைப் பேதமைப்படுத்துவதும் மயக்குவதும் மனம் என்பதை,

மனமாயை மாயை; இம்மாயை மயக்க
மனமாயை தான்மாய மற்றொன்றும் இல்லை
பினைமாய்வது இல்லை பிதற்றவும் வேண்டா
தனை ஆய்ந்து இருப்பது தத்துவம் தானே.

என்பார் திருமூலர்.

கெடுக்க வல்லதும் கெட்டவர் தங்களை
எடுக்க வல்லதும் இம்மனம் என்றதை
அடக்கி வல்லவன் ஐய பவக்கடல்
கடக்க வல்லவன் ஆவன் கடிதரோ (பிரபுலிங்கலீலை. 873)

ஒரு மனிதனுடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவனது மனமே காரணம் என்பதை மேற்கண்ட பாடலில் கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் சுட்டியுள்ளார்.

நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெருமானைச் செம்பொன் அம்பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே

என்பார் பட்டினத்தடிகள்.

மனம் எனும் தோணிபற்றி, மதி எனும் கோலை ஊன்றி
சினம் எனும் சரக்கை ஏற்றி செறிகடல் ஓடும்போது
மதன் எனும் பாறை தாக்கி மறியும் போது அறிய ஒண்ணாது
உனை உனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே.

என்பது அப்பர் தேவாரம். இறைவனைப் பாடி வழிபடும் முறையும் வழிபாட்டு நெறிமுறைகளுள் ஒன்றாகும். குறைவான ஆசை உள்ளவர்கள் இறைவனிடம் காசு, பணம், வீடு கேட்பார்கள். பேராசை கொண்டவர்கள் சுவர்க்கம், மறுபிறப்பு இன்மை என்று பெரிதாகக் கேட்பார்கள். ஆனால் குமரகுருபரர் தனக்கு என்று எதையும் வேண்டாமல் இறைவனைப் பாடும் பணியே வேண்டுகிறார்.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்கயாசனத்திற்

கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகலகலா வல்லியே.

என்கிறார் குமரகுருபரர்.

"பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

என்பார் அருணகிரிநாதர். இறைவனைத் தமிழால் பாட தமக்குப் பிறவி வேண்டுமெனத் தாம் இயற்றிய முதல் நூலான சோணசைலமாலையில்,

"மதுரம் பெருகுறு தமிழ்ச்சொல் மலர்நினக்கு அணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்"

எனப் பாடுகிறார் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள். முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்னும் நால்வகை மணிகளை முறையே கோக்கப்பெற்ற மாலை போன்று வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நால்வகைப் பாக்களை நிறுத்தி; திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் மேல் அந்தாதித் தொடை இலக்கணம் பொருந்த நால்வர் நான்மணிமாலை எனும் சிறந்த நூலைச் சிவப்பிரகாச சுவாமிகள் அருளியுள்ளார்கள். சமய அடியார்கள் மீது சுவாமிகள் கொண்டிருந்த அளப்பரிய பற்றை இந்நூல் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்நூலுக்குக் காலந்தோறும் பல்வேறு உரைகள் வெளிவந்திருந்தாலும், நல்லாற்றூர் சிவப்பிரகாசர் ஆதி சிவஞானியின் மீது கொண்ட குருபக்தியைப் போல, முனைவர் பழ.முத்தப்பன் அவர்கள் சிவஞானியின் மீது கொண்ட பெரும் அவாவினால் வீரசைவ நோக்கில் விளக்கவுரை எழுதியுள்ளமை சிறப்புக்குரியதாக அமைந்துள்ளது.

சமயக்குரவர் நால்வரின் அற்புதச் செயல்கள் எளிய முறையில் விளக்கப் பெற்றுள்ளன. சமயத்துறையில் ஆழங்கால்பட்ட முனைவர் பழ.முத்தப்பன் அவர்கள் நால்வர் நான்மணிமாலையில் ஆய்வும் தோய்வும் கொண்டு வீரசைவ நோக்கில் ஒவ்வொரு பாடலுக்கும் விளக்கம் தந்து வெளிப்படுத்தியுள்ளமை பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியது.

உ—— சிவஜெயஜோதி.

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
20ஆம் பட்டம்
மயிலம் பொம்மபுர ஆதீனம்



பதிப்புரை

தமிழகத்திலுள்ள வீரசைவத் திருமடங்களுள் முதன்மை யானது மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடமாகும். இத்திருமடத்தின் முதற்குரவர் பாலசித்தர். ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் (ஆதி சிவஞானி) மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் இரண்டாம் பட்டம் குருமகா சந்நிதானங்களாக விளங்கியவர். கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாசர், ஆதி சிவஞானியிடம் ஞான உபதேசம் பெற்று அப்பெருமானுக்குச் சீடரானார். நெஞ்சுவிடுதூது, தாலாட்டு, கலம்பகம், பிள்ளைத் தமிழ், பள்ளியெழுச்சி எனும் ஐந்து நூல்களைத் தமது குருநாதரின் மேல் சிவப்பிரகாசர் பாடியுள்ளார்.

நால்வர் நான்மணிமாலை

சிவபெருமான் மீதும், சிவனடியார்கள் மீதும் தமக்கிருந்த அளப்பரிய அன்பினைப் புலப்படுத்தும் வகையில், சமயக்குரவர் நால்வரைப் போற்றி நால்வர் நான்மணி மாலை எனும் சிறந்த நூலை இயற்றியுள்ளார். சைவ சமய வளர்ச்சியில் நால்வரின் பங்களிப்பை இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் இந்நூல் படைக்கப்பெற்றுள்ளது. ஒரு அடியாருக்குப் பத்துப் பாடல்கள் வீதம் நான்கு அடியாருக்கும் சேர்த்து 40 பாடல்களையும், ஒரு காப்புச் செய்யுளையும் அமைத்துப் பாடியுள்ளார்.

எப்போ தகத்தும் நினைவார்க்கு இடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

என்ற காப்புச் செய்யுளோடு தொடங்கும், நால்வர் நான்மணிமாலை பூ எனத் தொடங்கி, பூவே என முடிவது சிறப்புக்குரியதாகும். அந்தாதித் தொடையில் அமைந்த இந்நூலில் சமயக்குரவர் நால்வரின் அற்புதச் செயல்கள் புராணக் கருத்துகளின்வழி விளக்கப்பெற்றுள்ளன. சமயக்குரவர் நால்வர் மட்டுமின்றி கணம்புல்லர், இயற்பகையார், மானக்கஞ்சாறர், இளையான்குடி மாறன் முதலிய இறையடியார்களைப் பற்றியும் இந்நூல்

விளக்குகிறது. சமயக்குரவரது வாழ்வியல் அனுபவங்களை, இறைவனிடம் பெற்ற அருள்திறத்தை, தேவார திருவாசகத்தைப் படிப்பதால் ஏற்படும் நன்மைகளை, நால்வரது திருவடிகளைப் போற்றி வணங்குவதால் உண்டாகும் மேன்மைகளைச் சிவப்பிரகாசர் பாடியுள்ளார். நால்வர் செய்த அற்புதங்கள் பலவும், சிவப்பிரகாசரால் இந்நூலில் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

திருஞானசம்பந்தர்

1. உமையம்மையிடம் ஞானப்பால் உண்ட நிகழ்வு.
2. படிக்காசு பெற்ற வரலாறு.
3. திருமறைக்காட்டில் கதவு திறக்கப் பாடியது.
4. எலும்பைப் பெண்ணாக்கிய நிகழ்வு.
5. அனல் வாதம், புனல் வாதம்.
6. ஆண் பனையைப் பெண் பனையாக்கியது.

திருநாவுக்கரசர்

1. சூலைநோய் தந்து தடுத்தாட் கொள்ளப்பெற்றது.
2. அப்பூதியடிகள் தொடர்பு
3. திருமறைக்காட்டில் கோயில் கதவினைத் திறத்தல்.
4. கல்லைத் தெப்பமாக்கி கரையேறிய நிகழ்வு.
5. பாம்பு தீண்டிய அப்பூதியடிகள் மகனை உயிர்ப்பித்தது.

சுந்தரர்

1. திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தாட் கொள்ளப் பெற்றது.
2. குண்டையூரில் நெல்மலை பெற்றது.
3. முதலை உண்ட பாலகனை மீட்டது.
4. சுந்தரருக்காக இறைவன் பரவை நாச்சியாரிடம் தூது சென்றது.
5. சுந்தரர் வெள்ளையானை மீதேறி கயிலை செல்லும் காட்சி.

மாணிக்கவாசகர்

1. வேதத்தை விடத் திருவாசகம் உயர்ந்தது.
2. திருவாசகத்தை இறைவனே எழுதியது.
3. மாணிக்கவாசகருக்காகச் சிவபெருமான் நரிகளைப் பரிகளாக்கியது.
4. திருப்பெருந்துறையில் இறைவன் குருவாக வந்து மாணிக்கவாசகரைத் தடுத்தாட் கொண்டது.

5. மாணிக்கவாசகரைப் பற்றிப் பாடும்போது ஏனைய அடியார் பெருமக்கள் சிலரைக் கூறி, மாணிக்கவாசகரின் தனித்தன்மையை உணர்த்துவது.

இத்தனை சிறப்புகள் பலவும் நிரம்பப்பெற்ற நால்வர் நான்மணிமாலையில் வீரசைவக் கோட்பாடுகளை எடுத்தியம்பும் வகையில் முனைவர் பழ.முத்தப்பன் அவர்களால், பாலசித்தர் இதழில் தொடர்ந்து எழுதப்பெற்ற கட்டுரை "வீரசைவ நோக்கில் நால்வர் நான்மணிமாலை" எனும் புத்தகமாகத் தற்போது வெளிவருகிறது.

கண்ணுதல் ஒருவற் சார்ந்த கற்புடைச் சைவம் வாழ்க!
மேன்மைகொள் வீரசைவம் விளங்குக உலகமெல்லாம்

சைவக் கருத்துகளைப் புரட்சியுடையனவாக ஆக்கி வீரம் நிறைந்த சைவக் கொள்கை "வீரசைவம்" எனும் பெயரில் தோன்றியது. சமூகத்தில் நிலவிய மூடப்பழக்க வழக்கங்களை எதிர்த்து சாதி வேறுபாடு நீக்கம், ஆண் பெண் சமத்துவம் பிறப்பு இறப்பு முதலிய தீட்டுகள் இன்மை எனும் சமரச நெறியினை இவ்வுலகிற்கு அளித்த பெருமையுடையது வீரசைவம்.

அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே

எனும் சமுதாயத் தொண்டுதான் வீரசைவத்தின் உயிர்நாடியாகும். உயிரிடத்திலுள்ள அறியாமை எனும் ஆணவ இருளைப் போக்கி மெய்ஞ்ஞானம் எனும் அறிவொளியைத் தருவது இட்டலிங்க வழிபாடு.

ஆவுறு பிணிகெட ஆவின்பால் கறந்து
ஆவினை ஊட்டல்போல் ஆணவம்கெட
ஆவியுள் அமலனை அங்கை தந்துபின்
ஆவியுள் அமைவுற ஆக்கும் ஆரியன். (பிரபுலிங்கலீலை.810)

பசுவின் நோய்தீர அப்பசுவின் பாலையே கறந்து அந்நோய்க்கு மருந்தாகப் பசுவுக்கே ஊட்டுவதைப் போல உயிரிடமுள்ள அறியாமை எனும் நோய்கெட உயிருக்குள் உயிராக விளங்கும் இறைவனை இட்டலிங்க வடிவில் உள்ளங்கையில் அளித்து, பின்பு அவ்விட்ட லிங்கத்தை உயிரிடத்துப் பொருந்துமாறு செய்பவர் இட்டலிங்க தாரணம் செய்விக்கும் ஞானகுரு. இக்காலத்தில் ஞானாசிரியரால் செய்து வைக்கப்பெறும்

தீட்சைகளை ஏற்றுக்கொண்டு அகமுகமாக உணர்ந்து தெளிந்து கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் தத்துவ நோக்கில் மூன்றாக விளக்கப்படுகின்றன. அவை ஐவகை ஒழுக்கம், எண்வகைக் காப்பு, அறுவகை இணைப்பு எனப் பெறுகின்றன.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் லிங்காதாரணம் செய்து வைத்து சமத்துவம் நிறைந்த வீரசைவக் கொள்கைகளைப் பல்வேறு மக்களும் பயன்படும் வகையில் எடுத்துரைத்து வரும் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் மீது கொண்ட மிகுதியான பற்றின் காரணமாக, முனைவர் பழ.முத்தப்பன் அவர்கள் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் எழுதிய நால்வர் நான்மணிமாலைக்கு இதுவரை வெளிவந்துள்ள பல உரைகளை அலசி ஆராய்ந்து வீரசைவ நோக்கில் விளக்கவுரை எழுதியுள்ளமை சிறப்புக்குரியதாகும்.

பன்முகச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்ட வீரசைவ நெறியின் மெய்ம்மைகளை உணர்த்தும் விதமாக, நால்வர் பெருமக்களைப் போற்றிப் பாடிய நால்வர் நான்மணிமாலையில் வீரசைவக் கருத்துகள் ஆராய்ந்து இந்நூலில் விளக்கப்பெற்றுள்ளன. பக்தியும் ஞானமும் பரவிடும் மார்க்கங்களுள் சமயப்பனுவல்களின் பங்களிப்பு அளவிடற்கரியது. அவ்வகையில் வீரசைவ நோக்கில் நால்வர் நான்மணிமாலை எனும் நூல் அடியார்களின் பெருமையை வீரசைவ நெறியை முதன்மையாகக் கொண்டு மயிலம் திருமடத்தில் ஒவ்வொரு மாதமும் கிருத்திகைத் திருநாளன்று சொற்பொழிவாக நடத்தப்பெற்றது. மயிலம் பொம்மபுர ஆதீனம் 20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் பெருங்கருணையால் தற்போது இப்பொழிவுகளின் தொகுப்பு நூல்வடிவம் பெறுகிறது. ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே எனும் அப்பர் பெருமானின் வாக்கிற்கேற்ப 20 ஆம் பட்டம் சுவாமிகளே, சொற்பொழிவுக்கும் நூலகத்திற்கும் வழிவகுத்து சமயப்பணியோடு சமூக ஈடேற்றத்திற்கும் வழிவகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் மிக்க புலவர் பெருமக்களைப் புரந்து தமிழ்ப்பணியும் சமயப்பணியும் ஆற்றிவரும் குருமகா சந்நிதானங்களின் அருளைத் தலைமேல் தாங்கி பணிந்து வணங்குகிறேன்.

நல்லாவூர், முனைவர் ச. திருநாவுக்கரசு
முதல்வர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி, மயிலம்



முன்னுரை

சிவப்பிரகாச சுவாமிகள் படைத்தருளிய நால்வர் நான்மணிமாலை என்ற நூல்தான் சமயக் குரவர்கள் நால்வரையும் ஒருசேர நால்வர் என்று குறிப்பிட்டுப் போற்றிப் புகழுகின்ற முதல் நூலாகும். நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாசர் வீரசைவ நெறிப்படிக் குருவைச் சார்ந்து, இறையருளை முழுமையாகப் பெறவேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவர் என்பது அவர் படைத்த நூல்களின்வழி அறிய முடிகிறது. சிவஞான பாலய சுவாமிகளைத் தன்னுடைய ஞான குருவாக ஏற்றுக் கொள்வதன் முன் சைவசமயக் குரவர்கள் நால்வரையும் தம்முடைய ஞானாசிரியர்களாகக் கொண்டு போற்றியிருக்கிறார்.

அவருடைய முதல் நூலான சோணசைலமாலையில் சமயக்குரவர்கள் நால்வரையும் இயன்ற இடங்களில் எல்லாம் போற்றிப் புகழ்ந்திருக்கிறார். ஞானசம்பந்தருக்கு அளித்த ஆடகப் பொற்கிண்ணத்தின் கழுவு நீரைத் தனக்குத் தரவேண்டும் (பா. 45) என்றும், நாவுக்கரசருக்கு அளித்த சூலை நோயையாவது தனக்குத் தரவேண்டும் (பா. 32) என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தலையில் இறைவன் வைத்த பூங்கழலைத் தனக்குச் சூட்ட வேண்டும் (பா. 47) என்றும், வாதவூரரைப் போன்ற அன்பினை யான் கொண்டிலை என்றாலும், என்னை ஏற்று மெய்ப்பொருளை அருளவேண்டும் (பா.6) என்றும் குறிப்பிட்டுச் சமயக் குரவர் நால்வரையும் போற்றியிருப்பதை நினைவு கொள்ளலாம்.
அவ்வாறு முதல் நூலில் நால்வரைப் போற்றிய சிவப்பிரகாசர், நால்வரையும் போற்ற வேண்டும் என்பதற்கு நால்வர் நான்மணிமாலை என்ற தனிநூலைப் பாடியுள்ளார்.

சைவ சமயம் சார்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்தும் எந்த ஒரு அறிஞரும் நால்வர் நான்மணிமாலையை மேற்கோளாகக் காட்டாமல் சிந்தனைகளை வெளிப்படுத்த இயலாது. அந்த அளவிற்கு வீரசைவ சமயம் சார்ந்த சிவப்பிரகாசரின் நால்வர் நான்மணிமாலை சைவ உலகில் தனியிடம் பெற்று விளங்குகிறது.

இந்நூலை ஒரு துதிகல் என்றும் , புகழ்நூல் என்றும் கொள்வார் பலர். சிவப்பிரகாச சுவாமிகள் இந்நூலை ஓர் ஆராய்ச்சி என்றே அமைத்துள்ளார்கள். “என் பாட்டிற் நீயும் அவனும் ஒப்பீர எப்படியினுமே“ என்ற அடியில் தமது கருத்தை வெளிப்படுத்திறார்கள். மேலும், சுந்தரர் பற்றி பாடலில் நம்பி அரிது நன்று எனக்கியம்ப வேண்டுமே என வினாத்தொடுத்து விடை கேட்கும் பாங்கில் அமைத்துள்ளார்கள். சமயக்குரவர் நால்வர் பெருமக்களைப் போற்றும் இந்நூலில், பெரிய புராண அடியார்கள் பலரையும் பதிவு செய்துள்ளார்கள். அடியார் வழிபாடே ஆண்டவன் வழிபாடு என்பதை மெய்ப்பிக்கும் நூலான பெரியபுராணம் பூக்காடு எனில், நால்வர் நான்மணிமாலை தேன்கூடு எனும் வகையில் அமைந்து சிறக்கின்றது.

அடியார் பெருமக்களின் வரலாறுகளில் காணப்படும் சிக்கல்கள், தத்துவ உண்மையில் கொள்ள வேண்டிய கருத்துகள், அறவழியும் அருள்வழியும் மோதும் நிலையில் எழுகின்ற மாறுபாடுகள் போன்றவற்றை எடுத்துக்கூறி விளக்கம் செய்து சிக்கல்களை நீக்கித் தெளிவுபடுத்தும் பாங்கினை இந்நூலில் காணமுடிகிறது. தெளிந்த நீரோடை போல உள்ளத்தைப் பண்படுத்தும் இச்சமயப் பனுவலை வீரசைவச் சிந்தனைகளோடு ஒப்பிட்டுக் காணும் வகையில் உரையாற்றப் பணித்த சுவாமிகளின் பெருங்கருணையை வணங்கிப் பணிகின்றேன்.

மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடத்தில் மாதந்தோறும் நடைபெற்று வரும் **சமுதாயப் பணியே சமயப் பணி** என்ற பொதுத் தலைப்புக் கருத்தரங்கில் குருமகா சந்நிதானம் அவர்கள் நால்வர் நான்மணிமாலையின் சொற் பொருளையும், பொருள் நயத்தையும் மாணவர்கள் உணரச் செய்ய வேண்டும் என்று பணித்ததினால் வீரசைவ சமயத் தத்துவத்தோடு, நால்வர் நான்மணி மாலை நூலைப் புதிய நோக்கில் காண்பதற்குரிய வாய்ப்புக் கிடைத்தது. கருத்தரங்கு உரை இப்பொழுது எழுத்து வடிவம் பெறுகிறது. இச்சிந்தனையை ஏற்படுத்திய மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் இருபதாம் பட்டத்தில் எழுந்தருளி நல்லாட்சி புரிந்து வரும் சீர்வளர்சீர் குருமகா சந்நிதானத்தின் திருவடிகளை நன்றியோடு நினைவு கூர்வது எமக்கு இன்றியமையாததாகும்.

வீரசைவ நோக்கில் நால்வர் நான்மணி மாலை

காப்புச் செய்யுள்

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

காப்புச் செய்யுள் என்பது, மானிட வடிவத்தினின்று நூல் ஒன்றினைப் படைக்க நினைக்கும் கவிஞர் தன்னுடைய நூற் பணிக்கு இறையருள் துணை நிற்க வேண்டும் என்ற அடிப்படையில் தன்னுடைய வழிபடு கடவுளையோ, அல்லது ஏற்புடைக் கடவுளையோ போற்றிக் காப்புச் செய்யுள் பாடுவது என்பது மரபாகும். இக்காப்புச் செய்யுளுக்கு உரையெழுதிய உரை யாசிரியர்களின் உரை, "துதிக்கையினை உடைய ஞான வடிவாம் விநாயகப் பெருமானின் திருவடிகளை நினைப்பவர்களுக்கு எத்தகைய காலத்தும் துன்பம் இல்லை" என்பதாகும்.

எனவே இக்காப்புச் செய்யுள் வழிபடு கடவுள் என்ற அடிப்படையில் விநாயகப் பெருமானுக்குரிய காப்புச் செய்யுளாக உரையாசிரியர்களால் ஏற்றுக் கொள்ளப் பெற்றிருக்கிறது எனலாம். என்றாலும் ஏற்புடைக் கடவுளை வாழ்த்துதல் என்ற முறையில் இக்காப்புச் செய்யுளுக்குப் பொருளை எண்ணுங்கால் வீரசைவ மரபுக்குரிய கருத்து வெளிப்படுகிறது. அதாவது கைப்போதகம் என்பதற்கு ஏனைய உரையாசிரியர்கள் துதிக்கையினை உடைய விநாயகப் பெருமான் என்று பொருள் கொண்டது இயல்பாகும். போதகம் என்ற தமிழ்ச் சொல்லிற்கு யானை என்ற பொருளோடு, ஞானஉரை என்ற பொருளும் உண்டு. போதம் என்ற சொல் உரை என்ற பொருளையும் தரும். எடுத்துக்காட்டாகச் சிவஞானபோதம் என்ற தொடரைச் சிவஞானத்தைத் தருகின்ற ஞானஉரை என்று பொருள் கொள்ளுவதை இங்கு நினைவு கொள்ளலாம். போதம் என்ற சொல் அகம் என்ற விகுதியைப் பெற்றுப் போதகம் என்று ஆயிற்று. செயல்அகம் - செயலகம் என்பதைப் போல. வீரசைவ மரபைச் சார்ந்த சிவப்பிரகாசர், இக்காப்புச் செய்யுளைத் தன்னுடைய சமயநெறிக்கு ஏற்புடைய காப்புச் செய்யுளாகச் செய்திருக்கலாம்.

வீரசைவ மரபில் அட்டாவரணம் என்பது குறிப்பிடத்தக்க தத்துவமாகும்.

> "வீரசைவத் துறையில் ஐவகை ஒழுக்கம் முதற்படி. எண்வகைக் காப்பு என்னும் அட்டாவரணம் இரண்டாம் படி. ஐவகை ஒழுக்கம் என்ற முதற் படியில் நின்று வெற்றி எய்தியமையால் சீவன் ஆத்மன் ஆனான். எண்வகைக் காப்பினால் ஆத்மன் அங்கன் ஆகும் நிலை பெறுகின்றான்" (வீரசைவம் சுருக்க வடிவமைப்பு - மயிலம் பொம்மபுர ஆதின வெளியீடு, 2014- ப.39)

என்ற கருத்தின்படி அட்டாவரணக் காப்பு மிக இன்றியமையாத தாகும். எண்வகைக் காப்பாவன - திருநீறு, உருத்திராக்கம், மந்திரம், குரு, இலிங்கம், சங்கமம், பாதோதகம், பிரசாதம் என்பன அவை. இதில் நான்காவதாக அமைந்திருப்பது குரு என்பதாகும். ஒருஆன்மாவிற்குக் காப்பாக அமைவது குருவினுடைய போத உரையாகும். காப்புச் செய்யுளில் கைப்போதகம் என்ற சொல் அமைந்துள்ளது. இதனைக் குருவிற்குரிய சொல்லாகக் கொள்ளும் பொழுது, கை என்பது அபய முத்திரையோடு கூடிய கையினைக் குறிக்கும். போதகம் என்பது ஞான உரையைத் தருகின்ற ஆச்சாரியனைக் குறிக்க, அகம் என்ற விகுதி பெற்று, அபய முத்திரை மூலமாக ஆன்மாக்களுக்கு உபதேசம் செய்கின்ற ஞானாசிரியர் என்ற பொருள் பெற்று, அவரின் திருவடிகளை நினைந்தால் நினைப்பவருக்கு எக்காலத்தும் துன்பம் ஏற்படுவதில்லை என்று இக்காப்புச் செய்யுளுக்குப் பொருள் கொண்டால், வீரசைவத் தத்துவம் இடம்பெறும். நால்வர் நான்மணி மாலை என்ற நூல் சமயக்குரவர் நால்வராகிய ஆசிரியர்களைப் போற்றுகின்ற நூல் என்பதால், ஏற்புடைக் கடவுளாகிய ஞானாசிரியரை வணங்குகின்ற காப்புச் செய்யுளாக இச்செய்யுளைக் கொள்ளலாம்.

அருஞ்சொற் பொருள்

எப்போது - எப்பொழுதும், அகத்து - நெஞ்சத்தில் நினைவார்க்கு - முன்பு நிகழ்ந்த ஒரு நிகழ்வை மீண்டும் நினைத்தல், இங்கு இறைவனின் திருவருள் பெற்றவர்கள் அந்தத் திருவருளை நினைந்து, இப்பொழுது அந்தத் திருவருள் ஞானாசிரியராகக் காட்சியளிக்கிறது என்று நினைவு கொள்ளுதல் எனக் கொள்ளலாம். இடரில்லை - துன்பமில்லை, கைப்போதகம் - குரு, கழல் - திருவடி.

பாடல் – 1

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு - நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு.

என்பது ஞானசம்பந்தரைப் போற்றிய முதல் பாடலாகும். இப்பாடல் வெண்பா யாப்பில் அமைந்தது.

முன்னை உரையாசிரியர் உரை

மணம் உடைமை, தூய்மை உடைமை, நிறைதல் உடைமை, அழகு உடைமை என்னும் நால்வகை இலக்கணங்களையும், பொருந்திய நீரையுடைய பொய்கைக் கரையில், பொருளின் இலக்கணத்தைப் பாட்டுக்களால் மொழிவதற்குக் காரணமாக விளங்கும் ஞானப்பாலை உண்டு விழுங்காமல், அதனை நாக்கினால் நன்றாகத் திரளுமாறு செய்து, எளியவர்களாகிய எங்களுடைய செவிகளுக்குரிய இனிமை நிறைந்த அமுதமாக வார்த்த பெருமானுடைய தண்டை அணியப் பெற்ற குளிர்ச்சி அமைந்த திருவடிகளாம் தாமரைகளே முத்தி தருவதாகும்.

பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

(இப்பகுதியில் பாடலின் பொருள் நயமும், சொல்லாட்சித் திறனும் விளக்கப் பெறுகின்றன. முன்னை உரையாசிரியர்களின் உரையை மறுத்து உரைப்பது நோக்கமல்ல. கேட்போர் மனங்கொள்ளச் செய்யுள் நயம் கூறும் பகுதியாகும்.)

சீர்காழிக் குளக்கரையினைச் சிவப்பிரகாசர் குறிப்பிடும் பொழுது பூவான் மலிந்த பொய்கைக் கரை என்று குறிப்பிடுகிறார். ஞானசம்பந்தர் அமுத பொய்கைக் கரையைச் சேக்கிழார் குறிப்பிடும் பொழுது,

கடையுகத்தில் தனிவெள்ளம் பலவிரிக்குங் கருப்பம்போல்
இடையறாப் பெருந்தீர்த்தம் எவற்றினுக்கும் பிறப்பிடமாய்
விடையுயர்த்தார் திருத்தோணிப் பற்றுவிடா மேன்மையதாம்
தடமதனில் துறையணைந்தார் தருமத்தின் தலைநின்றார்
(திருஞானசம்பந்தர் பா.58)

இப்பாடலின் மூன்றாவது வரி எருதுவாகனத்தைக் கொண்ட இறைவனாம் திருத்தோணி புரத்தானின் பற்றினை விடாத

மேன்மையுடையது சீர்காழிக் குளக்கரை என்று குறிக்கப் பெற்றுள்ளது. எனவே சீர்காழித் தீர்த்தம் இறையருளைக் கொண்டு விளங்கும் பிரம்மதீர்த்தம் எனப்படும். அந்த தீர்த்தம் பூவால் நிறைந்து காணப்பெறுகிறது என்பதைச் சிவப்பிரகாசர் பூவான்மலி என்று குறிப்பிடுகிறார்.

அதாவது பொய்கைநீர் பூவினாலே மறைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல ஆன்மாக்களின் உடம்பினுள் இறையருள் மறைத்தல் என்ற தொழிலுக்கு ஏற்ப மறைந்து நிற்கிறது. வீரசைவ மரபுப்படி வீரசைவனாம் ஆத்மா இறைவன் மறைந்திருக்கும் அங்கமாக அதாவது உடலே இறைவனாகக் கொள்வதாகும். அந்த அடிப்படையில் வீரசைவத் தத்துவத்திற்கு ஏற்ப இறைவன் மறைந்திருக்கின்ற உடம்பைக் கொண்ட ஞானசம்பந்தப் பெருமான் , மணி போல் ஒளிவிளங்கும் பூக்களால் மறைக்கப் பட்டிருக்கும் நீரைக் கொண்ட பொய்கைக் கரையில் பாலுண்டார் என்று பொருள் கொள்ளலாம். அக்கரையில் ஞானப்பால் என்பது நேரடியாகப் பாலைக் குறித்தாலும், இறைவன் இறைவியின் மூலமாக ஞானத்தை அளித்தார் என்று உட்கிடக்கையாகக் கொள்ளலாம்.

பெரியபுராணச் சேக்கிழார் பெருமான், ''எண்ணரிய சிவஞானத்தின் இன்னமுதம் குழைத்து அருளி, உண்ணடிசில் என்று ஊட்ட" என்று குறிப்பிடுவார். (பா. 68) ஆனால் சிவப்பிரகாசர் அம்மை ஊட்டியதைச் சொல்லாமல் ஞானசம்பந்தர் உண்டதைச் சொல்வது சிறப்புடைத்தாகும். ஞானசம்பந்தப்பெருமான் அம்மை ஊட்டிட உண்டார் என்றாலும், சிவப்பிரகாசரின் நோக்கத்தின்படி ஞானத்தைப் பெறுவதற்கு ஞானசம்பந்தர் முன்பிறவிகளில் சரியை, கிரியை, யோகம் செய்திருந்தபடியால், இப்பிறவியில் சிவபாத இருதயருக்கு மகனாகப் பிறந்து மூன்று வயதில் ஞானம் பெற முடிந்திருக்கிறது என்ற செய்தியை வெளிப்படுத்துகிறார்.

வீரசைவ மரபுப்படி இலிங்கதாரணம் செய்துகொள்ள வேண்டுமானால் அந்த ஆன்மா முன்வினைப்பயன் கொண்டதாக இருக்கவேண்டும். எனவேதான் சிவப்பிரகாசர் அம்மை ஊட்டியதைச் சொல்லாமல், ஞானசம்பந்தர் உண்டதைக் கூறி முன்வினைப் பயனை நினைவு படுத்துகிறார். மேலும் பாடலில் சிவப்பிரகாசர் அமுதாய் என்று சொல்லியிருப்பதும் எண்வகைக்

காப்பில் எட்டாவதாகிய பிரசாதம் என்பது குருவினுடைய திருக்கரங்களால் தொடப்பெற்று, உண்ணப்பெற்ற எஞ்சிய எச்சிலைக் குறிக்கும். அதுபோலத்தான் இங்கு ஞானாசிரியராகிய ஞானசம்பந்தர் உண்ட பால் எச்சில் பிரசாதமாக, அமுதமாக அடியவர்களின் காதுகளுக்கு வந்து சேர்ந்தது. எனவே சிவப்பிரகாசர் காப்புப் பாடலில் குருவணக்கத்தைக் கூறி, இப்பாடலில் குருவாகிய ஞானசம்பந்தரின் எச்சில்பால் தேவாரப் பிரசாதமாகக் கிடைத்தது என்றதைக் குறிப்பிடுகிறார் எனலாம். இத்தகைய பிரசாதத்தைத் தந்த குழந்தையின் திருவடிகள் வயது முதிர்ந்த ஆன்மாக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் முத்திப் பேற்றினைத் தரும்.

அதாவது வீரசைவ மரபுப்படி ஏழை பணக்காரன் என்றோ, கீழ்சாதி மேல்சாதி என்றோ, இளையவர் முதியவர் என்றோ கருதாது இலிங்கதாரணம் செய்த அனைத்து ஆன்மாக்களும் சங்கமர்களே. வேற்றுமை கருதாது அவர்களை வழிபடுவதே சமய ஒழுக்கமாகும் என்ற வீரசைவ மரபுப்படி மூன்று வயதுப் பாலகராம் ஞானசம்பந்தரின் திருவடி அனைத்து ஆன்மாக்களுக்கும் முத்தி தரும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே முதற் பாடல் வீரசைவ மரபுக்கு ஏற்ப எண்வகைக் காப்புப் பிரசாதத்தையும், ஏற்றத் தாழ்வற்ற வீரசைவ சமய ஒழுக்கத்தையும் குறிப்பிடுகிறது எனலாம்.

அருஞ்சொற் பொருள்

பூவான் மலி - பூவால் நிறைந்த, மணி நீர் - ஒளி பொருந்திய தண்ணீர், இயற்பா - இயலாக, மறித்து - மீட்டு, தண்டை - குழந்தைக் காலணி, வெறி - மணம், தண் - குளிர்ச்சி, கமலம் - தாமரை, வீடு - முத்திப்பேறு.

பாடல் - 2

வீட்டிற்கு வாயில் எனுந்தொடை சாத்துசொல் வேந்த பொது
ஆட்டிற்கு வல்லன் ஒருவற்கு ஞான அமுதுதவி
நாட்டிற்கு இலாத குடர்நோய் நினக்குமுன் நல்கினுமென்
பாட்டிற்கு நீயும் அவனும்ஒப் பீரெப் படியினுமே.

இப்பாடல் திருநாவுக்கரசரைப் போற்றிய கட்டளைக் கலித்துறைப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

முத்தியை அடைவதற்குரிய வாயில் என்று சொல்லப் பெறும் தேவாரப் பாக்களைப் பதிகம் என்னும் மாலையாக இணைத்துத் சாத்தும் நிறைமொழி அரசே, பொது மன்றங்களில் நாட்டியம் ஆடுதலில் வல்லவனாகிய சிவபெருமான், ஒப்பற்ற பிள்ளை எனப்பெறும் திருஞான சம்பந்தருக்கு ஞானப்பாலை உதவி செய்தும், தங்களுக்கு நாட்டிலே என்றும் காணப்பெறுதல் இல்லாத சூலைநோய் என்னும் வயிற்று நோயைத் தானே முன்வந்து கொடுத்தும் வேறுபடுத்தி ஆட்கொண்டான் ஆயினும், யான் தங்களையும் திருஞானசம்பந்தப் பெருமானையும் இணைத்துப் பாடப் புகும் என் பாட்டிற்குத் தாங்கள் இருவரும் எவ்வாற்றானும் ஒத்தநிலை உடையவர்களே.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

வீட்டிற்கு - வீரசைவ மரபில் இட்டலிங்கப் பூசை செய்வதன் நோக்கம் மீண்டும் பிறவியில் அழுந்தாது இறைவனோடு ஐக்கியம் ஆவதாகும். 'இந்த ஐக்கியம் என்பது சீவனுக்குள்ள குறை நீக்கம் பெற்றுச் சிவனும் சீவனும் எல்லாவற்றானும் ஒன்றாக நிற்கும் நிலையே" (வீரசைவம் - முனைவர். வை. இரத்தினசபாபதி, சென்னைப் பல்கலைக்கழகம், 1990,ப. 371) எனவே இந்த ஐக்கியம் , வீடு என்று சைவ சித்தாந்தத்தில் கூறப்படுகிறது. இதனை வலியுறுத்த சிவப்பிரகாசர் பாடலில் வீட்டுப் பேற்றினை அழுத்தமாகக் குறிப்பிட்டு, அதற்கு வாயிலாக அமைந்த தேவாரப் பதிகங்களை நினைவுபடுத்துகிறார். வீட்டிற்கு வாயில் என்பது ஏழாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, வீட்டின்கண் வாயில் என்று கூறுவார் உண்டு. ஆயின் அதனைத் தொகையாகக் கொள்ளாமல் நான்காம் வேற்றுமை உருபு நிலையில் கொள்ளுதலே பொருத்தம் உடையதாகும். ஏனென்றால் வீரசைவத்தில் அங்கத்தில் லிங்கத்தை ஏற்று, எண்வகைக் காப்பினால் ஐக்கியமாகிற வீட்டினை அடைதல் நிறைவுப் படியாகும்.

அந்த ஐக்கிய நிலையைக் குறிப்பிடுவதுதான் இந்த வீடு என்னும் சொல். அங்கத்தில் லிங்கம் அணிந்து, லிங்கத்தின் வழிபாட்டால் முடிவில் இன்பத்தைத் தான் அடைதல் வீரசைவ மரபாகும். அத்தகைய ஐக்கிய நிலையை அடைவதற்கு வாயிலாக அமைந்திருப்பது தேவாரப் பாடல்களே என்று பொருள்

கொள்ளும்படி வீட்டிற்கு வாயில் என்னுந்தொடை என்ற தொடரைச் சிவப்பிரகாசர் அமைத்துள்ளார் எனலாம்.

திருக்குறள் அறத்துப்பாலின் தொடக்கத்தில் 'அறம், பொருள், இன்பம்,வீடு என்ற நான்கில், வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆதலின் துறவறமாகிய காரண வகையால் கூறப்படுவது அல்லது, இலக்கண வகையால் கூறப்படாமையின், நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமே ஆகும் " எனப் பரிமேலழகர் உரையெழுதுவார். எனவே வீடு என்பது பற்றற்ற வாழ்வால், பெறுவதற்குரிய நெறியாகும். இதனையே வீரசைவ ஆய்வாளர்கள் 'வேண்டாமை என்னும் விழுச்செல்வ நெறி என்று குறிப்பிடுவர். இந்நெறி வீரசைவத்தில் வலியுறுத்தப்பெறும் முதன்மை நெறியாகும். சுருங்கக் கூறின் வீர என்ற அடைமொழியைத் தன்னோடு இணைத்துக் கொள்வதற்கு உரிய காரணங்களுள் முதன்மையாய் விளங்கும் நெறி இதுவே யாகும்." (மேற்படி, ப. 35) என்று கூறுவதற்கு ஏற்ப, முதன்மை நெறியான வீட்டு நெறியை வீரசைவத்திற்கே உரிய இத்தகைய ஐக்கிய நெறியை முதற்பாடலின் இறுதிச் சொல்லாகவும், இரண்டாம் பாடலின் முதற்சொல்லாகவும் சிவப்பிரகாசர் குறிப்பிட்டிருக்கிறார் எனலாம்.

> தொடை என்பதற்குப் பாட்டு என்ற பொருள் உண்டு. பெரிய புராணத்தில் சோழநாட்டுச் சிறப்பைக் குறிப்பிடு கின்ற பொழுது சேக்கிழார் 'பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்" (திருநாட்டுச் சிறப்பு, பா.1)

என்று குறிப்பிடுவார். எனவே தமிழாக விளங்கும் தேவாரப் பாடல்களைத் தந்த சொல் வேந்தராக நாவுக்கரசரைப் பாடலில் குறிப்பிடுகிறார்.

சேக்கிழார் பெரிய புராணத்தில் திருநாவுக்கரசர் காஞ்சிபுரம் சென்ற பொழுது, அவரை அந்நகர் மக்கள் வரவேற்றனர் என்பதைக் குறிப்பிடும் பொழுது, 'தொண்டர் ஈண்டு எதிர்கொள்ள எழுந்து சொல்லுக்கு அரசர் பால்" (பா. 320) என்று குறிப்பிடுகிறார். சேக்கிழார் சொல்லுக்கு அரசர் என்று குறிப்பிட்டது போல, இங்கும் சிவப்பிரகாசர் சொல் வேந்தே என்று குறிப்பிட்டிருப்பதை ஒப்பு நோக்கலாம்.

பொது ஆட்டிற்கு வல்லான் என்ற தொடர், சிவபெருமானின் ஆடல் வல்லமையைக் குறிப்பதாகும். ஆடல் கலை ஏதேனும் ஒரு அரங்கில் வெளிப்படுத்தப் பெறும். ஆடத் தெரியாதவனுக்கு மேடை கோணல் என்ற பழமொழியும் உண்டு. எனவே ஆடுதல் ஒரு மன்றத்தில்தான் நடைபெறும். உலகத்தவர் சிவபெருமானுக் குரிய ஆடல் மன்றங்களை அமைத்து வழிபட்டாலும், இறைவன் உண்மையில் அந்த மன்றங்களில் ஆடாது பொதுவாக இருக்கும் மண்டபமாம் துவாதசாந்தப் பெருவெளியில் அதாவது வெட்ட வெளியில் தாம் ஆடி (இயங்கி), உலகப் பொருள்களை இயக்குகின்ற காரணத்தால் (அரங்கமே இல்லாத பொது இடத்தில் இறைவன் ஆடுவதால்) சிவப்பிரகாசர் ஆட்டிற்கு வல்லான் எனக் குறிப்பிடுகிறார் போலும்.

ஒருவற்கு - திருஞானசம்பந்தருக்கு. ஒருவர் என்று குறிப்பிட்ட சிவப்பிரகாசர், பின் வரியில் அவனும் என்று சுட்டுச் சொல்லால் திருஞானசம்பந்தரைக் குறிப்பிடுவதை உணரவேண்டும். அவன் என்ற பொதுச்சொல் சமய நோக்கில் இறைவனை உணர்த்துவ தாகும். ஞானப்பால் உண்ட பிறகு ஞானசம்பந்தப் பெருமான் இறைவனாகவே காட்சிதந்தார் என்ற எண்ணம் ஏற்படும் வண்ணம், ஞானப்பால் உண்பதற்கு முன்னால் ஒருவற்கு என்று குறிப்பிட்ட சிவப்பிரகாசர் ஞானப்பால் உண்டவுடன், அவரை இறைவன் என்ற நோக்கில் அவனுக்கு என்று குறிப்பிட்டிருப்பாரோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. நாட்டிற்கு இலாத குடல்நோய் - சூலை நோய். சிவபெருமான் தன்பால் அன்புடைய அடியவர்களை ஏற்றுக் கொள்ள எண்ணு கின்ற பொழுதெல்லாம், சூலைநோய் கொடுத்து ஆட்கொள்வது வழக்கம். திருநாவுக்கரசரோடு ஏயர்கோன் கலிக்காமர், கூன் பாண்டியன் ஆகியோருக்கும் சூலைநோய் கொடுத்த வரலாற்றை நினைவு கொள்ளலாம்.

வீரசைவ நோக்கில் பாடல்

இப்பாடலில் வீரசைவ அமைப்பில் பொருள் கொள்ளுவதற்கு உரியதாக அமைந்த சொல் ஒப்பில் என்பதாகும்.

ஒப்பீர் - ஒருவருக்கு ஞான அமுது என்ற இன்பநிலையும், மற்றவருக்குச் சூலை நோயான துன்ப நிலையும் கொடுக்கப் பெற்றுள்ளது. இதனைச் சிலர் ஞானசம்பந்தர் முதல் வருணமாகிய

அந்தணர் என்பதால் ஞானப்பால் கொடுத்தார் என்றும், நாவுக்கரசர் நான்காம் வருணமாகிய வேளாளர் வருணத்தைச் சேர்ந்தவர் என்பதால் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டார் என்றும் ஏற்றத் தாழ்வுகளைக் குறிப்பிடுவர். அவ்வாறு பொருள் கொள்வது ஏற்புடையதன்று.

வீரசைவ மரபுக்குரிய சிவப்பிரகாசர் வீரசைவத் தத்துவத்தை இப்பாடலில் பதிவு செய்துள்ளார் என்பதை மறுக்க இயலாது. வீரசைவத்தில் ஏழை - செல்வந்தர், உயர்ந்தவர் - தாழ்ந்தவர், சாதி வேறுபாடு, இன வேறுபாடு என்ற ஏற்றத் தாழ்வுகள் என்றைக்கும் காணப்பெறுவதில்லை. லிங்க தாரணம் செய்து கொள்வதால் அனைவரும் சமமே என்பதுதான் அடிப்படை நெறியாகும். அதிலும் சிவனடியார்களிடத்தில் ஏற்றத் தாழ்வு பார்ப்பது மிகுந்த குற்றமாகும் என்பது வீரசைவ நெறியாகும். இதனைக் கீழ்வரும் பிரபுலிங்கலீலைப் பாடல் வலியுறுத்தும்.

'பெரியவர் சிறியவர் என்னும் பெற்றிமை
அரவணி கடவுள்தன் அடியர் தம்முளே
தெரிபவன் எவன்அவன் சிறிய னேஎன
விரிவுறு மறையெலாம் விளம்பும் என்பவே" (பா. 1062)

இதன் அடிப்படையில்தான் சிவப்பிரகாசர் தாம் படைத்து அருளிய நிரஞ்சனமாலை என்ற நூலில்,

'ஓடும் தனமும் புகழும் பழியும் உயர்வுஇழிவும்
கேடும் திருவும் அமுதமும் புற்கையும் கேள்பகையும்
வீடும் குடிலும் மகளிரும் அன்னையும் வேறுஅறவே
நாடும் கருத்து வருமோ எனக்குஎன் கைந்நாயகமே" (பா. 19)

என்று ஏற்றத்தாழ்வு இல்லாமல் கருதுகிற மனம் எனக்கு வேண்டும் என்று வேண்டுகிறார். எனவே இப்பாடல் வீரசைவத்தின் அடிப்படைக் கொள்கையை வலியுறுத்துகின்ற நிலையில் திருஞானசம்பந்தரையும், திருநாவுக்கரசரையும் ஒத்த நிலையில் எண்ணி, இருவரையும் தம் பாட்டிற்கு ஒத்தவர்கள் என்று குறிப்பிடுகிறார் என்று பொருள் கொள்ளுவதில் தவறில்லை.

அருஞ்சொற் பொருள்

வீடு - ஐக்கியம் (தன் உண்மை ஆனந்த நிலையில் தான் இருத்தல்), தொடை - பாடல், வேந்து - அரசர், பொது -

துவாதசாந்தப் பெருவெளி, ஒருவர் - ஞானசம்பந்தர், சூலைநோய் - மூலாதாரப்பிணி, ஒப்பீர் - சமம் (ஏற்றத் தாழ்வற்ற நிலை).

பாடல் - 3

படியிலா நின்பாட்டில் ஆரூர
நனிவிருப்பன் பரமன் என்பது
அடியனேன் அறிந்தனன்வான் தொழுமீசன்
நினைத்தடுத்தாட் கொண்டும் அன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பால்
நினக்காகத் தூது சென்றும்
மிடியிலா மனைகள்தொறும் இரந்திட்டும்
உழன்றமையால் விளங்கு மாறே.

இப்பாடல் சுந்தரரைப் போற்றிய விருத்தப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

நம்பியாரூரரே, தேவர்களால் வணங்கப்பெறும் சிவபெருமான், திருமணக் காலத்தில் உன்னை வந்து தடுத்து ஆட்கொண்டதே அன்றி, தொடி என்னும் அணியானது உலவுகின்ற மென்மையான கைகளை உடைய பரவையா ரிடத்துத் தங்களுக்காகத் தூது சென்றும், வறுமையில்லாத வீடுகள் தோறும் பிச்சையெடுத்துக் கொண்டு வந்து உமக்கு உணவிட்டும் வருந்தித் திரிந்தமையால், ஒப்புமை சொல்ல இயலாத தங்களது பாட்டில் அப்பரமன் மிக விருப்பம் உடையவன் என்பதை அடியேன் தெள்ளத் தெளிய அறிந்தேன்.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடலில் சுந்தரரின் தேவாரத்தை ஒப்புமையற்ற பாடல் என்பதற்குப் படியிலா நின்பாட்டு என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார். மற்ற இருவரைக் காட்டிலும் சுந்தரர்தான் இல்லறத்தில் வாழ்ந்து பூத உடம்போடு சிவப்பேறு பெற்றவர். வீரசைவ மரபு இன்றைக்கும் இல்லறத்தை வெறுப்பதில்லை. இல்லறத்தில் வாழ்ந்து லிங்கத்தை அங்கமாக்கி இறைவனோடு ஐக்கியமாவதுதான் வீரசைவ மரபாகும். எனவேதான் சுந்தரரின் பாடலைச் சிவப்பிரகாசர், படியிலா நின்பாட்டு எனக் குறிப்பிட்டிருக்கின்றாரோ என எண்ணத் தோன்றுகிறது.

நனிவிருப்பன் - என்பது நனி என்ற உரிச்சொல்லை அடையாகக் கொண்ட சொல்லாகும்.

'உறு தவ நனி என வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள் என்ப" (தொல் உரியியல் சூ.3)

என்ற இலக்கணப்படி நனி என்பது மிகுதி என்ற பொருளைத் தரும். இறைவனுக்கு இருக்கும் இவ்விருப்பத்தைச் சேக்கிழார் குறிப்பிடும் பொழுது,

'மன்றி னிடைநங் கூத்தாடல் வந்து வணங்கி வன்றொண்டன்
ஒன்றும் உணர்வால் நமைப்போற்றி உரைசேர் பதிகம் பாடுதலால்
நின்று கேட்டு வரத் தாழ்த்தோம்" (கழறிறிற் பா. 44)

என்று கூறியுள்ளார். இக்காலத்திலும் வீரசைவப் பெருமக்கள் இட்டலிங்கத்தை வணங்கும் பொழுது, இறைவன் விரும்புமாறு திருமுறைப் பாடல்களைப் பாடிப் போற்றுவதை நினைவு கூரலாம். திருமடத்தின் வெளியீடான இட்டலிங்கப் பூசை முறைகள் என்ற நூலில் பல தேவாரத், திருவாசகப் பாடல்கள் இடம்பெற்றருப்பதை அறியலாம்.

பரமன் - என்ற சொல் மேன்மையானவன் என்ற பொருளைத் தரும். வீரசைவ மரபுப்படி எந்தச் சிறுதெய்வத்தையும் வணங்காது, அனைத்திற்கும் மேலாக விளங்கும் சிவலிங்கத்தை வழிபடுவதே குறிக்கோளாகும். பரமன் என்ற சொல் வீரசைவத்தில் முழுமையாகப் பயன்படும் சொல்லாகும்.

பரமனை இகழ்ந்து நெறியலா நெறிபோம்
பரமத யானையை அடக்க (பிரபுலிங்கலீலை, பா. 511)

பரம சிவமெனவும் பண்டைமறை போற்றும்
பிரமமென வும்பேர் பெறுமிலிங்கம் என்றானோ
(சிவஞான பாலய சுவாமிகள் தாலாட்டு, கண்ணி 77)

என்றும் சிவப்பிரகாசர் பிற இடங்களில் குறிப்பிடுவதால் , வீரசைவத்தில் சிவபெருமானைக் குறிக்கும்போது பரமன் என்ற சொல்லால் குறிப்பிடப்பெறும்.

அடியனேன் அறிந்தனன் - சிவஞான பாலய சுவாமிகளைத் தனது ஞானாசிரியராக ஏற்றுக் கொள்வதன் முன், நால்வர் உள்ளிட்ட பெரியபுராணச் சிவனடியார்களை ஞானாசிரியர்களாகக்

கொண்டு போற்றியவர் சிவப்பிரகாசர். எனவேதான் இதே நூலில் பன்னிரண்டாவது பாடலில் பதினான்கு அடியவர்களைக் குறிப்பிட்டுப் போற்றுகிறார். எனவே பெரியபுராண அடியார்களைச் சிவப்பிரகாசர் நன்கு அறிந்தவர் என்பது புலப்படுகிறது. மேலும் எத்தகைய பெரிய கவிஞராக இருந்தாலும் பணிவுடைமை ஒழுக்கத்தால் தங்களை அடியவராகக் கூறிக் கொள்ளுகின்ற மரபுப்படியும், எல்லார்க்கும் நன்றாம் பணிதல் என்ற வள்ளுவப் பேராசான் வாக்குப்படியும் சிவப்பிரகாசர் தம்மை அடியனேன் என்று குறிப்பிட்டுக் கொள்ளுகிறார்.

வான்தொழும் ஈசன் - வான் என்பது இங்கு இட ஆகு பெயராகத் தேவர்களைக் குறித்து நின்றது. தொழும் என்பது ஈசனைத் தொழுகின்ற தொழிலைக் குறித்தது. வீரசைவ மரபில் தேவர்களும் சிவனடியார்களே என்பதால், வான்தொழும் என்று குறிப்பிட்டுத் தேவர்களாகிய அடியவர்கள் தங்களைப் போல் ஈசனைத் தொழுகிறார்கள் என்ற நிலையில் சிவப்பிரகாசர் சிவபெருமானைப் பெருமைப் படுத்துவது அறியத் தக்கதாகும்.

தொடி - தோள்வளை, சங்க இலக்கியச் சொல்.

'தொடி நெகிழ்ந்தனவே தோள் சாயினவே
விடு நாணுண்டோ தோழி" (குறுந்தொகை பா.239)

என்பது போன்ற தொடர்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. இங்கு தொடியணிந்த மாதர் என்று பரவையார் குறிக்கப்படுவதால் இளமை பொருந்திய மாதர் என்ற பொருள் பெறப்படுகிறது. எனவே சுந்தரர் பரவையாரையும் சங்கிலியாரையும் மணந்து கொண்டது சிற்றின்ப வேட்கையால் அல்ல, இறைவனுடைய சாலோகத்தில் நிகழ்ந்த கமலினியார், அநிந்திதையார் தொடர்பு, அதாவது முன்வினைத் தொடர்பாகும். எனவேதான் திருமணம் என்ற இன்பத்துறையில் சடங்கவி சிவாசாரியார் மகளைப் புத்தூரில் சுந்தரர் திருமணம் செய்து கொள்ள முயன்ற பொழுது தடுக்கப் பெறுகிறார். அதனால் இல்லற இன்பத் திருமணம் தடுக்கப் பெற்றது. அதன்பின் கயிலாயத்தில் சந்தித்த கயிலாயப் பெண்கள் இருவர் பூவுலகில் பிறந்து , யோக நெறியில் அமைந்த சுந்தரருக்கு வாழ்க்கைத் துணையாக அமைகிறார்கள். இதனைக் குறிப்பிடவே, தவம் செய்த மாதரார் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார் எனக் கொள்ளலாம்.

வீரசைவ நோக்கில் பாடல்

இப்பாடலை வீரசைவ நோக்கில் பொருள் காணும் பொழுது பெருமிதம் ஏற்படுகிறது. தமிழகத்தில் வீரசைவம் பரவிய காலத்தில், பெண்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அதிலும் சமணம் உள்ளிட்ட புறச்சமயங்கள் பெண்மைக்கு வீடுபேறே இல்லை என்று கூறிவந்தன. ஆனால் வீரசைவமோ அக்கருத்தினை எதிர்த்துப் பெண்மைக்கு ஏற்றம் தந்தது. பிரபுலிங்கலீலையில் மாதேவி என்ற பாத்திரம் துறவு மேற்கொண்டு பெருமை பெற்றது எனக் கொள்ளலாம். எனவேதான் சிவப்பிரகாசர் இந்தப் பாடலில், சுந்தரர் வாழ்வில் ஏற்றம் கொண்ட தடுத்தாட் கொண்ட நிலையோடு, இறைவன் சுந்தரரின் பாடலில் பெருவிருப்பம் கொள்வதற்கு ஒரு காரணமாகப் பரவையாரிடத்துச் சென்ற தூதினைக் குறிப்பிட்டு இறைவனால் பெண்மை ஏற்றம் பெற்றதைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

அத்துடன் வீரசைவர் இல்லங்களில் இறைவன் இலிங்க வடிவாக அமைந்து இலிங்க தாரணமாகக் காட்சி தருகிறான். அதாவது திருக்கோயில்களில் மட்டும் இலிங்க வடிவமாக இல்லாது வீரசைவ இல்லங்களிலும் லிங்கவடிவில் எழுந்தருளி காட்சி தருகிறான். எனவேதான் இப்பாடலில் சிவப்பிரகாசர் மிடியிலா மனைகள் தோறும் சென்றார் என்று குறிப்பிடுகிறார். அத்தகைய இல்லங்களில் சென்று இறைவன் இரந்து உணவு பெற்றதையும் குறிப்பிடுகிறார். எனவே இப்பாடலில் சுந்தரரின் தடுத்தாட் கொண்டதை விட, தூது சென்றதையும், வீடுகளில் இரந்து உணவு பெற்றதையும் , சுந்தரர் பாடலை விருப்பத்துடன் இறைவன் கேட்பதற்குரிய காரணங்களாக அமைத்திருப்பது வீரசைவ மரபைப் பதிவு செய்வது எனக் கொள்ளலாம்.

பெண்களுக்கு ஏற்றம் தருவது வீரசைவம் என்பதைச் சிவப்பிரகாசரின் படைப்புகளில் பலவாறாகக் காணமுடிகிறது.

'கற்றார் அறிகுவர் மக்கள்தம் பேறுஎனக் கட்டுரைத்த
சொல்தான் ஒருபெண் ஒழித்ததுஎன் பாரொடு தொல்உலகில்
நற்றாண் மகற்பெறுக என்றுஆசி சொல்பவர் நாணஉனைப்
பெற்றான் மலையரை யன்குன்றை வாழும் பெரியம்மையே.

(பெரிய நாயகியம்மை கலித்துறை, பா.12)

என்றும்,

'பெண்காட் டியவொரு பங்குடை யாருதிர் பிட்டினுக்கா
மண்காட் டியபொன் முடியார் திருவெங்கை வாணர்"
(திருவெங்கைக் கோவை,பா. 184)

என்றும், பெண்பிள்ளை பிறப்பது சிறப்பு என்பதையும், ஒரு பெண்ணின் பிட்டிற்காக இறைவன் மண் சுமந்தார் என்பதையும் சிவப்பிரகாசர் குறிப்பிட்டிருப்பது வீரசைவ மரபில் பெண்களுக்கு ஏற்றம் தருவதைக் குறிப்பிடுவதாகும்.

அதுபோலத் திருக்கச்சூரில் , மிடியிலா மனைகள் - அதாவது வறுமையில்லாத மனைகள் தோறும் சென்று உணவை யாசித்து, சுந்தரராகிய அடியவருக்கு இறைவன் பிரசாதமாக அளித்தான். இதனை, இரண்டாவது காரணமாகச் சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார். வீரசைவ மரபில் எண்வகைக் காப்பில், பிரசாதம் என்பது ஒன்றாகும்.

'குருவினாலும் சங்கமர்களாலும் ஏற்றுக் கொள்ளவும், கொடுக்கவும் பெற்ற எல்லாம் பிரசாதமே. அவர்தம் திருக்கரங்களால் தொடப் பெற்றவை யாவும் பிரசாதமே" (வீரசைவச் சுருக்க வடிவமைப்பு, திருமட வெளியீடு, 2014, ப. 53)

என்றபடி உணவைப் பெற்றுக் கொள்வது பிரசாதமாகும். எனவே இறைவன் சங்கமர்களாகிய வறுமையில்லா வீடுகளில் வாழுகின்ற இல்லங்களில் பெற்ற உணவை, குருவாகிய தன் கையினால் தொட்டுச் சுந்தரருக்கு அளித்தான். எனவேதான் அதைக் குறிப்பிடச் சிவப்பிரகாசர் இரந்து இட்டு எனக் குறிக்கிறார்.

பிரபுலிங்க லீலையில் அல்லம தேவருக்குச் சென்ன வசவரின் வழிகாட்டுதலின்படி வசவதேவர் உணவு அளித்ததைக் குறிப்பிடும் பொழுது,

'உலகில் ஒருவன் சிவயோகி
உண்டது அம்ம சராசரமாம்
அலகில் உயிர்கள் எல்லாம்உண்டது
ஆகும் என்ன மறைகூறும்" (பா. 1106)

என்று சிவப்பிரகாசர் குறிப்பிட்டு, யோக நெறியில் நின்ற சுந்தரருக்கு இறைவன் அளித்த உணவு பிரசாதமாகி, எல்லா உயிர்களுக்கும் உரியது ஆயிற்று என்று குறிப்பிடுவதும் சிந்திக்கத்

தக்கதாகும். இவ்வாறு இப்பாடல் பெண்மையின் ஏற்றத்தையும், வீரசைவ அன்பர்கள் வாழும் வீடுகளில் லிங்கதாரண நிலையில் இறைவன் எழுந்தருளிருப்பதையும் குறிப்பிடுகின்ற பாடலாக அமைந்து, வீரசைவ நோக்கில் பொருள் கொள்ள வைக்கிறது.

அருஞ்சொற் பொருள் விளக்கம்

படி - ஒப்புமை, நனி - மிக்க, பரமன் - மேலானவன், வான் - தேவர்கள், துடி - தோள்வளை, மாதர் - பரவையார், மிடி - வறுமையில்லாத, இரந்து - யாசித்து, இட்டு - தொட்டளித்து, உழந்து - துன்பப்படல்.

பாடல் - 4

**விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது என்குவீ ராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணல் கேணியின் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.**

இப்பாடல் மாணிக்கவாசகரைப் போற்றிய நேரிசை ஆசிரியப்பா பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

விளங்குகின்ற அணிகலன்களை உடைய உமையம்மையைப் பங்கிட்டு எடுத்துக்கொண்ட திருமேனியை உடையவனும், மூன்று கண்களை உடையவனும், உலகிற்கு மூலகாரணன் என்று சொல்லப் பெறுபவனும் ஆகிய சிவபெருமானுடைய வாக்கு என்று சொல்லப் பெறும் வேதமோ, உலகிற்கு ஆதி எனப்பெற்ற அச்சிவ பெருமானுடைய சிறப்புக்களையே நினைந்து துதிக்கின்றவராய்த் திருவாதவூரில் அவதாரம் செய்து அருளிய மாணிக்களவாசகப்

பெருமானுடைய மலர் போன்ற திருவாயிலிருந்து வெளிப்பட்ட திருவாசகமாகிய தேனோ? மேன்மை உடையது யாது? என்று கேட்பீர்களானால் வேதத்தைப் பலமுறை ஓதினாலும் அது கேட்டுக் கண்களில் நீரைப் பெருக்கி, மனம் குழைந்து உருகி நிற்பவர்களை யாம் இவ்வுலகத்தில் எப்பகுதியிலும் கண்டதில்லை. திருவாசகத்தை இங்கு யாரேனும் ஒருமுறை ஓதினாலும் கருங்கல்லைப் போன்ற மனமும் கரைந்து, தோண்டப் பெற்ற மணற்கேணியிலிருந்து நீர் சுரப்பது போன்று, கண்களில் இருந்து ஆனந்த நீர் பெருகியோட, உடலில் உள்ள மயிர்கள் குத்திட்டு நிற்க ஆனந்த நடுக்கத்தால் உடல் துளும்ப, அன்பராகும் நிலை பெறுவாரே அன்றி, இவ்வுலகில் அன்பர் ஆகாதவர் இல்லை.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

விளங்கிழை - கண்ணுக்குப் புலனாகின்ற அணிகலன்கள் என்றும் உமையவளிடத்தில் நிலைத்திருக்கின்ற தன்மையைக் குறிக்க விளங்கும் என்ற சொல் கையாளப் பெற்றிருக்கின்றது. முக்கண் காரணன் மூன்று கண்களை உடையவனாய், உலகிற்குக் காரணமாக விளங்குகின்ற சிவபெருமான்.

"காரணத்தர் கருத்தர் கபாலியார்
வாரணத்து உரிபோர்த்த மணாளனார்
ஆரணப் பொருள் அன்பிலான் துறை
நாரணற்கு அரியான் ஒருநம்பியை " (அப்பர், 5 80 2)

என்று திருநாவுக்கரசர் சிவபெருமானைக் காரணர் என்று குறிப்பிடுவதோடு ஒப்பிடலாம். உரை எனும் ஆரண மொழியோ - உரை என்பது சிவபெருமானுடைய திருவாக்கினைக் குறிக்கும்.

"வேதம் ஓதும் விரிசடை அண்ணலார்
பூதம் பாட நின்றாடும் புனிதனார்" (அப்பர் 5 64 6)

என்ற நாவுக்கரசரின் பாடலோடு ஒப்பிட்டுக் காணலாம். ஆதி - அனைத்திற்கும் ஆதியாக விளங்கும் சிவபெருமான், வாதவூர் - மாணிக்கவாசகர் பிறந்த ஊர், வாதவூரின் சிறப்பைப் பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தில்,

"உடுத்த கடல் ஒருவருக்கும் உதவாத உவரியென
மடுத்தறியா புனல் வையைக் கரையுளது வாதவூர்" (பா. 2713)

என்று குறிப்பிடுவார். அதாவது கடல்நீர் யாருக்கும் உதவாத உப்புச்சுவையுடைய நீரைக்கொண்டது என்று கருதி, அக்கடலில் கலக்காத வையைக் கரையில் உள்ளது வாதவூர் என்று கூறுவார். நெஞ்சம் நெக்குருகி நிற்பவர் காண்கிலேம் - சிவப்பிரகாசர் தன்னுடைய காலத்தில் திருக்கோயில் வழிபாடுகளில் வேதங்களை வடமொழி உச்சரிப்பில் குருமார்கள் பாடுகின்ற பொழுது, அவர்கள் கண்ணீர் சொரியாத நிலையைக் கண்டதைத் தன்னுணர்ச்சியாகக் காண்கிலேம் எனப் பாடியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். கருங்கல் மனம் - இறை நம்பிக்கை அற்றவர் நெஞ்சம்.

இங்கு கருமை உடைய கல் என்று குறிக்கப் பெறுவதால் இறையருளை நம்பாது தங்களையே பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கும் ஆணவம் மிக்கவர்களை நினைவுபடுத்தச் சிவப்பிரகாசர் கரு என்ற அடைமொழியைக் கொடுத்து கல்லைப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கரைந்துக - திருவாசகத்தை ஒருமுறை படித்தவர்கள் மனம் கரைதல்., கிருத்துவ மதத்தைச் சார்ந்த ஜி.யு. போப். என்ற சான்றோர் , இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என்ற திருவாசகத் தொடரை நினைந்து, தான் எழுதும் கடிதங்களில் பதிவு செய்யும் பொழுது, தன் கண்களில் இருந்து கண்ணீர் சிந்திய நிலையை இங்கு நினைவு கொள்ளலாம். தொடுமணற் கேணி - தொட்டனைத்து ஊறும் மணற்கேணி என்று திருவள்ளுவப் பேராசான் குறிப்பிடுவதை இங்கு ஒப்பிடலாம். மெய்ம்மயிர் பொடிப்ப - உடலில் உள்ள மயிர்கள் குத்திட்டு நிற்க (உணர்ச்சி பொங்க), அன்பர் ஆகுநர் - திருவாசகம் ஓதுவதால் சைவம் சார்ந்து அன்பர் ஆகுவர்.

வீரசைவ நோக்கில் பாடல்

இப்பாடல் வேதம் சிறந்ததா? திருவாசகம் சிறந்ததா? என்ற கேள்வியைச் சிவப்பிரகாசர் எழுப்பிக் கொண்டு விடை தருவதுபோல் அமைந்ததாகும். முன் இரண்டு பாடல்களில் வீரசைவ அடிப்படைத் தத்துவங்களைச் சிவப்பிரகாசர் குறிப்பிடுவது போல இப்பாடலிலும் வீரசைவத்தின் முக்கியமான அடிப்படைத் தத்துவத்தைப் பதிவு செய்துள்ளார் எனலாம். தமிழக வீரசைவ மரபில் வேதத்திற்கு முக்கியம் தராது, ஆகமங்களுக்கு முக்கியம் தரப்பெறும். அதே நேரத்தில் புறத்தில் எரியூட்டி அவிப்பலி கொடுத்துச் செய்யப் பெறுகின்ற புறத்து வேள்வியை

ஏற்காது அகத்து ஐம்புலன் அடக்க வேள்வியை ஏற்பர். எனவேதான் சிவப்பிரகாசர் புறத்து வேள்வியை விடுத்து அக வேள்வியை மனதில் செய்த சோமாசிமாற நாயனாரைப் பெருமையாகப் பேசுவார்.

"போதம் ஆகும் புனிதத் தழலினுள்
பேத பாவனைப் பேரவி பெய்வனேல்
ஆதி சோவுடை மாசி அனைன
வேதம் யாவும் விளங்க விளம்புமே" (பிரபுலிங்க லீலை 965)

என்று சோமாசிமாற நாயனாரை நினைவு கொள்வார். மேலும் புறவேத வேள்வியை வீரசைவம் ஏற்காது என்பதனைச் சிவப்பிரகாசர் குறிப்பிடுவதைக் கீழ்வரும் பாடல் மூலம் அறியலாம்.

"குடுமி அம்கிரி ஒப்பக் குவித்தபுல்
சுடுதல் கொண்டு பிறவி சுடப்படாது
அடு புலன்கள் அறிவரும் அங்கியல்
சுடுதல் கொண்டு பிறவி சுடப்படும்" (பிரபுலிங்க லீலை 964)

என்ற பாடல்கள் மூலம் புற வேள்விகளைக் காட்டிலும், அகத்தில் ஐம்புலன்களை அடக்கச் செய்யப்பெறும் ஞானவேள்வியே சிறந்தது என்பதை உணரலாம். வேத ஆகமங்களைக் காட்டிலும் சிவநாமத்தை உச்சரிக்கும் பொழுதுதான் இறைவனின் திருவருள் கிடைக்கும் என்பதை வீரசைவம் அழுத்தமாக வலியுறுத்தும். எனவேதான் இட்டலிங்கப் பூசையில் இறைவனுக்குரிய துதிப்பாடல்கள் தவறாது பாடவேண்டும் என்ற மரபு உள்ளது. அந்த அடிப்படையில் சிவநாமப் பெருமையைக் கூறும் திருவாசகத்தை ஓதும்பொழுது, நெஞ்சம் உருகிக் கண்ணீர் மல்கும் என்பதைச் சிவப்பிரகாசர் இப்பாடலில் குறிப்பிடுகிறார். சிவநாம மகிமை என்பதற்கே தனி ஒரு பதிகம் பாடியவர் சிவப்பிரகாசர். அதில் முதல் பாடல், வேத ஆகமங்களைக் காட்டிலும் சிவநாம மகிமையே சிறந்தது என்பதை வலியுறுத்துகிறது.

"வேதம் ஆகமம் வேறும் பலப்பல
ஓதி நாளும் உளம் தடுமாறன்மின்
சோதி காண்இருள் போலத் தொலைந்திடும்
தீதுஎலாமும் சிவசிவ என்மினே"

என்றும்,

"வேத உணவு வெறுத்துப் புகழ் மூவர்
ஓது தமிழ் ஊனுக்கு உழல் செவியான்"
(திருவெங்கைஉலா, கண்ணி 27)

என்றும் காணப்பெறும் பகுதிகள், வேதத்தைக் காட்டிலும் இறைவனுக்குரிய துதிப்பாடல்களாம் திருமுறைகள் சிறந்தன என்பதை வீரசைவம் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டது என்பதை விளக்குவனவாகும். இந்த அடிப்படையில் மாணிக்க வாசகரைப் போற்றுகின்ற இந்தப் பாடல், வீரசைவ மரபுப்படி, வேத ஆகமங்களைக் காட்டிலும் தமிழால் போற்றப் பெறும் துதிப்பாடல்களே சிறந்தன, அதிலும் திருவாசகம் சிறந்தது என்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

அருஞ்சொற் பொருள்

ஆரணம் - வேதம், ஆதி - அனைத்திற்கும் ஆதியாக உள்ள சிவன், வாசகம் - திருவாசகம், கருங்கல் மனம் - இறைவழிபாடு அற்ற உள்ளம், தொடுமணற்கேணி - தோண்டப்பெறும் மணற்கேணி, மெய்ம்மயிர் - உடம்பில் உள்ள மயிர், மன்பதை உலகம் - நிலைத்த இவ்வுலகம்.

பாடல் - 5

**இலை படர்ந்த பொய்கை இடத்து அழுதல் கண்டு
முலை சுரந்த அன்னையோ முன்நின் நிலைவிளம்பக்
கொங்கை சுரந்த அருள் கோமகளோ சம்பந்தா
இங்கு உயர்ந்தாள் ஆர் சொல் எனக்கு**

இப்பாடல் திருஞானசம்பந்தரைப் போற்றுகிற வெண்பா வாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

திருஞானசம்பந்தப் பெருமானே, சீர்காழியில் தாமரை இலைகள் நெருங்கிப் பரவிய கோயில் திருக்குளக் கரையில் தேவரீர் அழுவதைக் கண்ணால் கண்டு, தம் திருமுலையால் பால் சுரந்து அளித்த அன்னையாகிய உமா தேவியாரோ, அல்லது தேவரீர் பாலுக்காக அழுத நிலைமையை முன் இருந்தவர்கள் சொல்லும் பொழுதே, தன் மார்பகத் திருமுலை சுரந்த அரசியாகிய மங்கையர்க்கரசியாரோ, இவ்வுலகத்தில் உயர்ந்த தாய் யார்? எளியேனுக்கு எடுத்துச் சொல்வீராக.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் முன்பாடலைப் போல ஒரு பட்டிமண்டபப் பாடலாகும். முன் பாடலில் திருவாசகமே சிறந்தது என்ற தீர்ப்பை வெளிப்படக் கூறிய சிவப்பிரகாசர், இப்பாடலில் பட்டிமண்டபத் தீர்ப்பாகிய மங்கையர்க்கரசியாரே சிறந்தவர் என்ற தீர்ப்பைக் குறிப்பாக உணர வைத்துள்ளார். சீர்காழிக் குளக்கரையைச் சிவப்பிரகாசர் குறிப்பிடும் பொழுது பூக்கள் நிறைந்த குளம் என்று குறிப்பிடாது, தாமரை இலைகள் படர்ந்த பொய்கை என்று கூறுவது குறிப்பிடத் தக்கதாகும். சேக்கிழார்,

கடையுகத்தில் தனிவெள்ளம் பலவிரிக்குங் கருப்பம்போல்
இடையறாப் பெருந்தீர்த்தம் எவற்றினுக்கும் பிறப்பிடமாய்
விடையுயர்த்தார் திருத்தோணி பற்றுவிடா மேன்மையதாம் தடமது
(ஞானசம்பந்தர். 58)

என்று குறிப்பிடுவார். இதன்படி எல்லாக் குளத்து நீர்களுக்கும் திருத்தோணிபுரக் குளம், கருவாய் அமைந்தது என்பதும், சிவபெருமானால் விரும்பப் படுகின்ற திருக்குளம் என்றும், திருக்குளத்தின் பயனைக் குறிப்பிடச் சிவப்பிரகாசர் திருக்குளத்தில் இலை படர்ந்து, நீரை மறைத்திருக்கும் காட்சியை வெளிப்படுத்துவது படித்து இன்புறத் தக்கதாகும். இலை மறைத்த குளம் என்பது லிங்க தாரணத்தால் அங்கத்தை மறைத்திருக்கின்ற வீரசைவ மரபைக் குறிப்பதாகக் கொள்ளலாம். முலை - சிவபெருந் தேவியாகிய உமையவளின் மார்பகத்து முலை , குழந்தைகளால் உண்ணப்படாத உண்ணாமுலையாகும். நிலை விளம்ப - பொய்கைக் கரையில் தந்தையைக் காணாது அழுத ஞானசம்பந்தர் நிலை பாலுக்கு அழுத நிலையாக அமைந்தது என்பதைக் குறிப்பிட, நின்நிலை என்று குறிப்பிட்டுக் குழந்தை அழுதால் பாலுக்காகத் தான் அழும் என்ற பொருள்படும்படிச் சிவப்பிரகாசர் பாடலை அமைத்துள்ளார். கொங்கை சுரந்த - மானிடப் பிறவி சார்ந்த பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியின் மார்பகத்தைக் குறிப்பிடும் பொழுது முலை என்று குறிப்பிடாது அழகு பொருந்திய மார்பகம் என்று உணர, கொங்கை என்று குறிப்பிட்டிருப்பது சிறப்புடைத்தாம்.

பால் கொடுத்த உமையவளைக் குறிப்பிடும் பொழுது அன்னை என்று குறிப்பிட்ட சிவப்பிரகாசர், ஞானசம்பந்தர் அழுதார் என்ற சொல்லைக் கேட்டவுடன் தன் மார்பகத்தில்

இயற்கைக்கு மாறாகப் பால் சுரக்கப் பெற்ற மங்கையர்க் கரசியாரைக் குறிப்பிடும் பொழுது அருட் கோமகளோ என்று குறிப்பிட்டு, இங்கு ஏற்பட்ட பட்டி மண்டபத்தில் உமையவளைக் காட்டிலும் மங்கையர்க்கரசியாகிய தாயே சிறந்தவள் என்ற தீர்ப்பை உணர்ந்து கொள்ளுமாறு சிவப்பிரகாசர் அருள் என்ற அடைமொழியை மங்கையர்க்கரசியார்க்குக் கொடுத்திருப்பதி லிருந்து உணரலாம்.

வீரசைவ நோக்கில் பாடல்

இப்பாடலில் உமையவள் என்ற ஒரு தாயும், மங்கையர்க் கரசியார் என்ற தாயும் ஆகிய இரண்டு தாய்மார்கள் குறிக்கப் பெறுகிறார்கள். வீரசைவ மரபில் குழந்தை பிறந்ததும் லிங்க தாரணம் பெற்றோர்களால் செய்யப் பெறுவதும் உண்டு. அல்லது குழந்தை பிறந்து குறிப்பிட்ட சிலநாளில் ஞானாசிரியர்கள் மூலம், அல்லது அருள்திரு சந்நிதானங்கள் மூலம் பிறந்த குழந்தைக்கு லிங்கதாரணம் செய்வதுண்டு. அவ்வாறு செய்யும் பொழுது லிங்கதாரணம் செய்து வைத்த ஆசிரியரும், தெய்வமாகிய பெற்றோரைப் போல மற்றொரு தெய்வமாக அவர்களை நினைந்து போற்றுவதுண்டு. அதுபோல இப்பாடலில் உமையவளையும், மங்கையர்க்கரசியாரையும் ஞானசம்பந்தர் பால் அன்பு காட்டிய இரு தாயராகச் சிவப்பிரகாசர் குறித்துள்ளார் எனக் கொள்ளலாம். ஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் உமையவள் மூலம் ஒருமுறை தான் பால் கொடுத்தார். ஆனால் மயிலம் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவஞான பாலய சுவாமிகளுக்கு எப்பொழுதும் ஞானப்பால் அளிக்கப் பெற்றது என்பதைச் சிவப்பிரகாசர் கீழ்வரும் பகுதியில் குறிப்பிடுகிறார்.

"முன்னாளில் ஒருஞான முலைஅயின்ற ஆரமுதம்
எந்நாளும் உண்கின்றா யாரேநின் அளவறியார்"
(சிவஞான பாலயக் கலம்பகம் பா.1)

திருஞான சம்பந்தருக்குப் பால்கொடுத்த உமையவளின் பெருமையைச் சிவப்பிரகாசர்,

'அரவு உலாம் சடை அண்ணலைப் பிள்ளைதான்
பருவ மூன்றினில் பாட நின்பால் தரும்
பொருவில் கொங்கைப் புகழ் எனப் பொங்குஒளி
மருவும் ஆரமணி வடம் தாழ்ந்துற" (பிரபுலிங்க லீலை..43)

என்ற பாடலில் உமையவளின் அழகை வருணிக்கும் பொழுது குறிப்பிடுகிறார். எனவே வீரசைவ மரபில் ஞானசம்பந்தருக்கு உமையவள் பால் கொடுத்த செய்தி பெருமையாகப் பேசப் பெறுவதால் இப்பாடலில் சிவப்பிரகாசர், ஞானசம்பந்தரின் பெருமையைக் கூறும் பொழுது, ஞானப்பால் கொடுக்கப்பட்ட செய்தியைச் சிவப்பிரகாசர் பெரிதும் வலியுறுத்துகிறார் எனலாம்.

பெரியபுராணத்தில் மங்கையர்க்கரசியார்க்குப் பால் சுரந்த நிகழ்ச்சி குறிப்பிடப் பெறாத பொழுது, சிவப்பிரகாசர் அந்நிகழ்வைத் தாம் படைத்துக் கொண்டு, இப்பாடலில் குறிப்பிட்டிருப்பது வீரசைவ மரபினர் ஞானப்பால் அளித்த வரலாற்றுச் செய்தியைப் பெருமையாகக் கொண்டனர் என்பதைக் குறிக்கவே, மங்கையர்க்கரசியாரின் செய்தியைச் சிவப்பிரகாசர் கையாண்டிருக்கலாமோ ? என்ற எண்ணம் ஏற்படுகிறது. எனவே இந்தப் பாடல் மூலம் வீரசைவ மரபில் ஞானசம்பந்தர் பாலுண்ட நிகழ்ச்சி பெருமையாகக் கொள்ளப் பெறும் என்பதை வலியுறுத்துகிறது எனலாம்.

அருஞ்சொற் பொருள் விளக்கம்

பொய்கை - சீர்காழிக் குளம், அன்னை - உமையவள், அருட்கோமகள் - மங்கையர்க்கரசியார்.

பாடல் - 6

எனக்கு அன்பு நின்பொருட்டு எய்தாதது
என்கொல் வெள்ளேறு உடையான்
தனக்கு அன்புசெய்திருத் தாண்டக
வேந்த இத்தாரணியில்
நினக்கு அன்பு செய்கின்ற அப்பூதி
யைச்சிவ நேசம் உறும்
இனர்க்கு அன்புசெய் நம்பி ஆரூரன்
ஏத்தும் இயல்பு அறிந்தே.

இப்பாடல் திருநாவுக்கரசரைப் போற்றிய கட்டளைக் கலித்துறைப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

வெள்ளை நிறமாகிய எருதினை ஊர்தியாக உடையவ னாகிய சிவபெருமானுக்கு அன்பு செய்கின்ற தன்மையும், தாண்டகம் என்ற

செய்யுளை அருளிச் செய்கின்ற வன்மையில் வேந்தராகவும் விளங்கும் திருநாவுக்கரசரே - இப்பூவுலகில் சிவபெருமான் முதலிய கடவுளர் எவர்க்கும் அன்பு செய்யாமல், தங்களுக்கு மட்டுமே அன்பு செய்கின்ற அப்பூதி அடிகளாரை, சிவபெருமான் ஒருவருக்கே அன்பு செய்வதோடு, அவ்வன்பில் மிகுவித்துத் திளைக்கும் அடியவர்களுக்கும் அன்பு செய்கின்ற நம்பியாரூரர் ஏற்றித் துதிக்கும் இயல்பினை அறிந்தும், எனக்குத் தங்கள் பொருட்டு அன்பு நிகழப் பெறாமைக்கு என்ன காரணம்?

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடலில் சிவப்பிரகாசர் தனக்குத் திருநாவுக்கரசர் மேல் அன்பு ஏற்படாததற்குக் காரணம் என்னையோ? என்ற வினாவைக் கேட்டு, அதற்குரிய பதிலைப் பாடலைப் படிப்பவரின் உள்ளத்தில் எழுமாறு பாடியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

வெள்ளேறு - சிவபெருமானுக்கு உரிய ஊர்தியாகச் சமய இலக்கியங்கள் குறிப்பிடும் வெண்மை நிறமுடைய எருது வாகனம். இதனைத் திருமுறைகள் பல இடங்களில் எடுத்தாளுகின்றன.

நன்றுடையானை, தீயதிலானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானை
(முதல்திருமுறை, 98.1)

என்ற திருஞானசம்பந்தர் தேவாரப் பகுதிக்கு உரையாசிரியர் உரை எழுதும் பொழுது, வெண்மை நிறமுடைய அறக்கடவுள் என்று குறிப்பிட்டிருப்பதை இங்கு நினைவு கொள்ளலாம். தாண்டகம் - இது ஒரு செய்யுள் வகை. இதனைப் பயன்படுத்திய பெருமான் திருநாவுக்கரசரே ஆவார். பிற அருளாளர்கள் பாடியதாகக் காண இயலவில்லை. ஒரு அடிக்கு 26 எழுத்துக்கள் மிகுந்துவர, நான்கடியால் பாடப் பெறுவது தாண்டகச் செய்யுள் என்று உரையாசிரியர் வை.ரா. குறிப்பிடுவார். தாண்டகச் செய்யுளைத் திருநாவுக்கரசர் மட்டுமே பாடியதால் அவரை வேந்தராகக் கண்டு சிவப்பிரகாசர் மகிழுகிறார். அப்பூதி - பெரிய புராணச் சிவனடியார்களில் ஒருவர். இவரைச் சேக்கிழார் குறிப்பிடும் பொழுது,

"அவர் நாமத்தால் படிநிகழ் மடங்கள், தண்ணீர்ப் பந்தர்கள் முதலாயுள்ள முடிவிலா அறங்கள் செய்து, முறைமையால் வாழ்பவர்" (அப்பூதி, பா.2)

என்று குறிப்பிடுவார். எனவே, திருநாவுக்கரசு என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை எழுதியும், சொல்லியும் முத்தி அடைந்த அடியவர் அப்பூதி எனக் கொள்ளலாம். சிவநேசம் - சிவன்பால் அன்பு, சுந்தரர் இறைவனுக்குத் தோழமையாகிச் சிவபெருமானையே போற்றுகிறவர் ஆயினும், திருத்தொண்டத் தொகை மூலம் சிவபெருமான் அடியவர்களிடத்தில் அன்பு கொண்டவராய் விளங்கிய தன்மையைச் சிவப்பிரகாசர், 'இனர்க்கு அன்பு செய் நம்பி' என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு பாடலின் பொருட்சிறப்பு அமைவதோடு, ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் பொழுது சிவப்பிரகாச சுவாமிகள் திருநாவுக்கரசர் மேல் தமக்கு அன்பு ஏற்படவில்லையே என்ற கேள்வியைக் கொண்டவராகிய தன்மையை இப்பாடல் உணர்த்துகிறது.

வீரசைவ நோக்கில் பாடற் பொருட்சிறப்பு

அப்பூதியார் போற்றும் திருநாவுக்கரசர் மேல் தமக்கு அன்பு ஏற்படவில்லையே என்று சிவப்பிரகாச சுவாமிகள் வினாவை அமைத்துக் கொண்டமைக்குப் பதில் கூறும் நோக்கில் வீரசைவப் பொருள் அமைகிறது எனலாம். வீரசைவக் கொள்கையில் எண்வகைக் காப்பு என்பது குறிப்பிடத்தக்க கொள்கையாகும். இதில் சங்கம் என்பது ஒருவகைக் காப்பாகும். சங்கமர் என்பவர்கள் சீவன் முத்தர்கள் ஆவார்கள். அதாவது பிறந்திருக்கும் மானிடப் பிறவியில் தம்மை ஆள்பவர் சிவபெருமானே என்பதை உணர்ந்து, அவரின் நினைவு அன்றி வேறு உலகப் பொருள்களில் நாட்டமில்லாது வாழுகின்ற தொண்டர்கள் ஆவார்கள். இவர்களைப் போற்றுவதுதான் வீர சைவத்தின் தலையாய கொள்கைகளில் ஒன்றாகும்.

சிவப்பிரகாச சுவாமிகள் தாம் பாடிய முதல் நூலாகிய சோணசைல மாலையில், அடியார்களைப் போற்றி வணங்கும் உன்னத வாழ்வே பெரு வாழ்வு என்பதைப் புலப்படுத்துவது போல் கீழ்வரும் பாடற் பகுதிகள் அமைந்துள்ளன.

மெய்த்தவ ரடிக்குற் றேவலின் றிறத்தும்
விளங்குமா கமவுணர்ச் சியினும்
புத்தலர் கொடுநிற் பரபூ சையினும்
பொழுதுபோக் கெனக்கருள் புரிவாய் (பா.25)

குருமணி மகுடம் புவீனைந்துல காளும்
கொற்றவ ராதலி னென்கட்
கருமணியெனுநின் றொண்டர்குற் றேவர்
கருதியாட் பட்டிட லினிதே (பா.95)

நின்னடி யவர்க்குப் பரிவிலார் கதியிலா தவரே (பா.62)

என்று சிவப்பிரகாச சுவாமிகள் அடியவர்களைப் போற்றுவதைத் தம் முதல் நூலில் பதிவு செய்ததோடு, பிற தம் படைப்புகளிலும் சங்கமராம் அடியர்வளைப் போற்றுதலையே சிறப்பாகக் கொண்டுள்ளார்.

இப்பாடலில் திருநாவுக்கரசர், அப்பூதி அடிகள், சுந்தரமூர்த்தி ஆகிய மூவர் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் திருநாவுக்கரசர், சிவபெருமானிடத்தே மட்டும் அன்பு செய்பவர் என்று காட்டி, சுந்தரரைச் சிவபெருமானிடத்திலும் அடியவர்களிடத்திலும் அன்பு செய்கின்றவர் என்று காட்டி, அப்பூதியாரை அடியவர்களிடத்தில் மட்டும் அன்பு செய்கின்றவர் என்று காட்டியும் சிவப்பிரகாசர் அமைத்துள்ளார். எனவே திருநாவுக்கரசர் அடியவர்களைப் போற்றாமையால், அடியவர்களைப் போற்றுகின்ற கொள்கை யுடைய வீரசைவ மரபில் வந்த தனக்கு நாவுக்கரசர்மேல் அன்பு ஏற்பட வில்லையோ என்று கேட்பது போல் பாடல் அமைந்திருக்கிறது என்று கொள்ளலாம். எனவே இப்பாடல் எண்வகைக் காப்பில் சங்கமர்க் கொள்கையைக் குறிப்பிடுவதாகக் கொள்வது சாலச் சிறந்ததாகும். இதனை உறுதிப் படுத்தக் கீழ்வரும் உரைப்பகுதியைச் சுட்டிக் காட்டலாம்.

திருவாசகத்திற்குக் குருவருள் விளக்கம் என்று உரையெழுதிய ச.தண்டபாணி தேசிகர், திருவாசகத் திருப்படையாட்சிப் பதிகத்தில் இரண்டாவது பாடலில், "உன்னடியார் அடியார் அடியோம் என உய்ந்தன ஆகாதே" என்ற பகுதிக்கு உரையெழுதும் பொழுது, கீழ்வருமாறு உரை எழுதுவார்.

"இறைவற்கு அடிமையாதலினும் அடியவர்க்கு அடியவனாதல் ஆயிரம் மடங்கு சிறந்தது. அடியார் அடியார்க்கு அடியனாதல் அதைவிடச் சிறந்தது ஆதலின், இங்ஙனம் கூறினார். திருநாவுக்கரசு சுவாமிகள் இறைவனுக்கு அடிமையாகி உயர்ந்தார். அப்பூதி அடிகள்

அடியவர்க்கு அடியவராகி உயர்ந்தமை காண்க. (திருவாசகம், குருவருள் விளக்கம் உரை, திருவாவடு துறை ஆதீனம், 1964, ப. 1236).

எனவே பாடலில் அமைந்த சிவப்பிரகாசர் கேள்விக்கு வீரசைவ மரபின்படி பொருள் கொண்டால், உரிய பதில் கிடைக்கும் என்பது புலனாகின்றது.

அருஞ்சொற் பொருள்

நின்பொருட்டு - நாவுக்கரசர் பொருட்டு, என்கொல் - ஏன் என்ற வினா(கொல் - அசை) , வெள்ளேறு - அறக்கடவுளாகிய இடப ஊர்தி, வேந்த - மன்ன, தாரணி - உலகம், சிவநேசன் - சிவன்பால் அன்பு, இனர் - அடியவர், நம்பியாரூரன் - சுந்தரமூர்த்தியார்.

பாடல் – 7

அறிந்து செல்வம் உடையானாம்
அளகைப் பதியான் தோழமைகொண்டு
உறழ்ந்த கல்வி உடையானும்
ஒருவன் வேண்டும் எனஇருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை
துணைவா! நினைத் தோழமை கொண்டான்
சிறந்த அறிவு வடிவமாய்த்
திகழும் நுதல்கண் பெருமானே.

இப்பாடல் சுந்தரரைப் போற்றுகின்ற விருத்தப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

முற்றத் துறந்த முனிவர்களும் வணங்கும் பரவை நாச்சியாரின் கணவனே, அறிவுகள் அனைத்திலும் சிறந்து விளங்கும் பரஞானத்தையே வடிவமாகக் கொண்டவனும், நெற்றிக் கண்ணை உடையவனும் ஆகிய சிவபெருமான், தம் உலகியல் வாழ்வு சிறக்க வேண்டுமானால் செல்வம் உடையவனுடைய நட்பும், கல்வி உடையவனுடைய நட்பும் அமையப் பெறவேண்டும் என்ற உண்மையை அறிந்து, அளகாபுரிக்குத் தலைவனாகிய குபேரனைச் சிறந்த செல்வம் உடையவனாகும் என்று செல்வத்திற்குத் தோழமையாக ஏற்றுக் கொண்டு, மாறுபட்ட கல்விச் செல்வத்தை

உடையவன் வேண்டும் என்று நீண்டநாள் காத்திருந்து உன்னைத் தோழமையாக ஆக்கிக் கொண்டான்.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் சிவபெருமான் சுந்தரமூர்த்தியாரைத் தோழமையாகக் கொண்டதற்குக் காரணம் கூறுகின்ற பாடலாகும். அறிந்து - இறைவன் ஆன்மாக்களுக்கு உடலைத் தரும்பொழுது, அவ் ஆன்மாக்களின் நல்வினை தீவினைகளை ஆராய்ந்து உடம்பைத் தருவான் என்பது சைவ தத்துவமாகும்.

'ஊன் அறியாது என்றும், உயிரறியாது ஒன்றும், இவை
தான் அறியாது ஆரறிவார் தாம். (திருவருட்பயன்,பா.33)

இதன் பொருள்

உடம்பு எக்காலத்திலும் அறிவுடையது ஆவதில்லை. (எனவே அது தனக்குரிய உயிரினை அறிந்து தேடிச்சென்று அடையாது.) உயிரும் ஆணவமலத்தால் மறைக்கப் பெற்று ஒன்றையும் அறிய மாட்டாது நிற்கிறது. இந்நிலையில் உடம்பும் உயிருமாகிய இவ் இரண்டையும் திருவருள் அறிந்து, (இறையருள்) கூட்டவில்லை என்றால் வேறு யார்தான் கூட்டுவிப்பார்.

எனவே அறிந்து என்பதற்கு நல்வினை தீவினை அடிப்படையை அறிந்து இறைவன் உடம்பைக் கொடுக்கிறான் எனப் பொருள் கொள்ளலாம். செல்வம் உடையவன் - பொருட் செல்வம் உடையவன், அளகை - கயிலை மலையில் வடக்குத் திசையில் உள்ள செல்வம் மிக்க ஊர். தோழமை கொண்டு - செல்வம் மிக்க குபேரனைத் தோழனாகக் கொண்டு, உறழ்ந்த கல்வி - இத்தொடருக்கு வீரசைவம் என்ற நூலில் கீழ்க்கண்டவாறு வை.ரா. அவர்கள் குறிப்பிட்டிருப்பதை இங்கு நினைவு கொள்ளலாம்.

"சிவபெருமானுடைய அறிவு செறிந்த அறிவு, சுந்தரருடைய அறிவு உறழ்ந்த அறிவு" என்று சிவப்பிரகாசர் இருவருடைய அறிவையும் வரையறை செய்கிறார். இறைவனின் அறிவு நிறைவாய் விளங்கும் தன்மையுடையது. சுந்தரர் தன்மை உறழ்தல் அறிவாகும். உறழ்தல் - மாறுபடுதல். இறைவன் நெறிக்கு முற்றும்

மாறான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டு, இறைவன் திருவடிக்கு என்றும் மாறாத அன்பு செய்வது. இறைவனை வணங்குவதற்கு இல்லறம் தடையாக அமைவதுண்டு. ஆனால் அதே இல்லறத்தை இறைவன் திருவருளால் பரவை, சங்கிலி என்ற இரண்டு பெண்கள் மூலம் அமைத்துக் கொண்டு, அதில் வாழ்ந்து கொண்டே இறைவனுடைய திருவடியை என்றும் மாறாது அன்பு கொண்டவர் என்பதைக் குறிப்பிட உறழ்ந்த அறிவு என்று சுந்தரருடைய அறிவைக் குறிப்பிடுகிறார். (ப. 280 - 81). என இருந்து - பலநாட்கள் காத்திருந்து, துறந்த முனிவர் தொழும் பரவை - துறவிகளால் வணங்கப் பெறும் அளவிற்கு இறைவனிடத்தில் மனத்தைச் செலுத்தும் பரவை நாச்சியார், துணைவன் - கொழுநன், சிறந்த அறிவு - இறைவனுடைய நிறைந்த அறிவு, நுதல்கண் - இறைவனுடைய மூன்று கண்களில் நெற்றியில் உள்ள கண் ஞானத்திற்கு உரியதாகும்.

வீரசைவ நோக்கில் பாடற் பொருட் சிறப்பு

பாடலில் உறழ்ந்த அறிவு என்று சுந்தரர் அறிவைச் சிவப்பிரகாசர் குறிப்பிடுவதால், வீரசைவ மரபை நினைவு படுத்துகிறார் எனலாம். வீரசைவக் குருமார்கள் இல்லறத்தில் இருந்து கொண்டு, அந்த இல்லறத்திலும் காமத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காது, இறை வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற மரபு இன்றும் உண்டு. எனவே உறழ்ந்த அறிவு என்ற தொடர் வீரசைவ மரபில் இல்லறத்திலும் இறைவனைக் காணுகின்ற கொள்கையை வலியுறுத்துவதால் இப்பாடல் இல்லறத்தில் இருந்து கொண்டு இறையருளால், வீரசைவக் குருமார்கள் பிறருக்கு ஞானத்தை வழங்குகின்ற செய்தியைக் குறிப்பிடுவதால் இப்பாடல் வீரசைவ மரபிற்குரிய பாடலாக அமைகின்றது.

அருஞ்சொற் பொருள்

அறிந்து - வினைகளை ஆராய்ந்து, அளகைப் பதியான் - அளகாபுரிப் பதித் தலைவனான குபேரன், உறழ்ந்த கல்வி - மாறுபட்ட கல்வி, துறந்த - இல்லறத்தைத் துறந்த முனிவர்களாம் உபமன்யு முதலிய சான்றோர்கள், சிறந்த அறிவு - இறைவனின் நிறைந்த அறிவு, நுதல்கண் - ஞானத்திற்குரிய கண்.

பாடல் - 8

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகம் அதற்கு வாச்சியம்
தூசுஅகல் அல்குல் வேய்த் தோள் இடத்தவனே.

இப்பாடல் மாணிக்கவாசகரைப் போற்றிய அகவற்பா பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

திருப்பெருந்துறையை அடைந்து பேரின்பமாகிய வெள்ளத்தில் மூழ்கிய தூயோனாகிய மாணிக்கவாசகப் பெருமான் அருளிய மொழிகளே திருவாசகம். அத்திருவாசகத்தால் சுட்டப்பெறும் பொருள் - குற்றம் நீங்கிய அல்குலையும், மூங்கில் போன்ற தோள்களையும் கொண்ட உமையம்மையை இடப்பாகத்தில் கொண்ட சிவனே.

பாடற் பொருளின் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் மாணிக்கவாசகரின் பெருமையைக் குறிப்பிடுகின்ற பாடலாகும். மாணிக்கவாசகர் பாடிய திருவாசத்திற்கு முழுமை யான பொருள், சிவபெருமானே என்று கூறித் திருவாசகத்திற்கு ஒரு பெரும் ஏற்றத்தை சிவப்பிரகாசர் இப்பாடலில் பதிவு செய்துள்ளார்.

செவிவழக்காக ஆன்மீக மக்களிடையே ஒருநிகழ்ச்சி வழங்கி வருகிறது. அதாவது மாணிக்கவாசகர் தில்லைத் திருத்தலத்தில் திருவாசகத்தைப் பாடி முடிக்க, அதனைக் கேட்ட இறைவன் தானே மனம் உவந்து, ஏடுகளில் திருவாசகப் பாடல்களை எழுதி, நூலின் முடிவில் திருச்சிற்றம்பலம் என்று கைச்சாத்து இட்டார். மேலும் தில்லைத் திருத்தலத்தில் வாழ்ந்த தீட்சிதர் பெருமக்கள் மாணிக்கவாசகப் பெருமானிடம் தாங்கள் பாடிய பாடல்களுக்குரிய பொருள் யாது? என்று கேட்க, அதற்கு மாணிக்க வாசகர் பொன்னம்பலத்தில் நடனமாடிக் கொண்டிருக்கின்ற சிவபெருமானே பொருள் என்று விடையளித்தார் என்ற செவிவழிச் செய்தி இன்றும் நிலவி வருகின்றது. அச்செவி வழிச்செய்தியை உறுதிப்படுத்துவது போலச் சிவப்பிரகாசர், திருவாசகத்திற்குப்

பெரும் பொருளாய் விளங்குபவர் சிவபெருமானே என்று பதிவு செய்திருக்கிறார் எனலாம்.

பாடலில் பெருந்துறை புகுந்த மாணிக்கவாசகர் என்று குறிப்பிடப் பெறுவது சிறப்புடையதாகும். ஆன்மீக உலக வழக்கில் ஞானசம்பந்தர் சீர்காழியாம் தோணிபுரத்தில் நுழைந்தும், திருநாவுக்கரசர் திருவதிகை அறத்துறையில் புகுந்தும், சுந்தரர் திருவெண்ணெய் நல்லூர் அருள் துறையில் புகுந்தும், மாணிக்க வாசகர் திருப்பெருந்துறையாம் பெருந்துறையில் புகுந்தும் சிவபெருமானின் திருவருள் பெற்றார்கள் என்று கூறப்படுவதுண்டு. அதற்கு ஏற்ப மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் புகுந்து இறைவனின் பேரின்ப வெள்ளமாம் திருவருளைப் பெற்றார் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார் எனலாம்.

பாடலில் இடம்பெற்ற புனிதன் என்ற சொல், திருப்பெருந் துறையில் குருந்த மரத்தடியின்கீழ் வீற்றிருந்த ஞானாசிரியரின் திருக்கண் பார்வை பட்டு, முன்னைப் பழவினைகள் சுடப்பெற்று நீங்கப்பெற்ற மாணிக்கவாசகரின் பெருமையை உணர்த்துவதாகும். புனிதன் என்பதற்குத் தூய்மையானவன் என்பது பொருள். இச்சொல் மலம் நீங்கிய மாணிக்கவாசகரைக் குறிப்பிடுகிறது.

"ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஒட்டுகந்து
தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்தினிய கோனவன்"
திருஅம்மானை,பா.14)

என்ற பாடற் பகுதியில் மாணிக்கவாசகரும் தன் முன்வினை நீக்கப் பெற்ற திறத்தினைக் குறிப்பதை இங்கு நினைவு கொள்ளலாம்.

மொழிந்த - கூறிய, வாசகம் - சொல், சொல் என்ற பொருளைத் தருகின்ற வாசகம் என்ற சொல்லை மாணிக்கவாசகரும் கீழ்வரும் பாடலில் கையாண்டுள்ளார்.

அயல்மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம் மாண்டு என்னுடைய
செயல் மாண்டவா பாடி (திருத்தெள்ளேணம், பா.11)

மற்றுள்ள வாசகம் மாண்டு - என்ற தொடருக்குப் பொருள் உரைக்கும் அருணை.வடிவேல் முதலியார் அவர்கள், தூற்றுதலும் போற்றுதலும் ஆகிய பிறர் வாயிலிருந்து வருகின்ற சொற்களும் என்நிலையில் பயனற்றுப் போயிற்று என்று உரையெழுதுவார்.

வாச்சியம் - பொருள் என்பதாகும். இவ்வாச்சியம் என்ற சொல்லுக்குச் சென்னைத் தமிழகராதி பொருள் உரைக்கும் பொழுது, பொருள் என்றும், இசைக்கருவி என்றும் குறிப்பதோடு, வெளிப்படையாகச் சொல்லத் தக்கது என்றும் இச்சொல்லிற்குப் பொருள்களைக் குறிப்பிடும்.

வீரசைவ நோக்கில் பாடலின் பொருட் சிறப்பு

வாச்சியம் என்ற சொல், வீரசைவக் கோட்பாட்டை நினைவு படுத்துவதாக அமைந்துள்ளது. அந்த அடிப்படையில் இந்தப் பாடற் பொருளை வீரசைவ அமைப்பில் கொள்ளலாம். வீரசைவத்தில் சடுத்தலம் என்ற ஒரு கொள்கை உண்டு. இதற்கு அறுவகை இணைப்பு என்பது பொருள். லிங்கத்தின் அறுவகை நிலையில் அதன் பார்வையைத் தனக்குள் இணைப்பதன் மூலமாக ஞானத்தை வீரசைவன் தன் உயிருள் நிலைக்கச் செய்கிறான். இட்டலிங்கம், பிராணலிங்கம், பாவனாலிங்கம், ஆசாரலிங்கம், குருலிங்கம், பிரசாதலிங்கம், மகாலிங்கம் என்ற ஆறுலிங்கப் பார்வையைத் தனக்குள் இணைப்பது சடுத்தலம் ஆகும்.

ஒரு வீரசைவன் பஞ்சாசார ஒழுக்கத்தால் ஆத்மன் ஆகிறான், அட்டாவணப் பயிற்சியால் ஆத்மன் அங்கனாகிறான், சடுத்தலத்தால் அங்கன் இறைவனோடு ஐக்கியமாகிறான் என்று வீரசைவ மரபில் கூறப்படுவதுண்டு. (வீரசைவம், வை.ரா. ப.189). எனவே லிங்கதாரணம் செய்து அங்கத்தை லிங்கமாகக் கொண்ட ஆன்மா, சிவவடிவமே என்ற வீரசைவக் கோட் பாட்டின்படி, திருவாசகப் பாடல்களாம் மொழிகளைக் கூறி,தன் அங்கத்தில் அணிந்திருக்கும் லிங்கத்திற்கு வழிபாடு செய்கின்ற வீரசைவ மரபு, திருவாசகப் பாடலால் அங்க லிங்கத்தை வழிபாடு செய்கின்றபொழுது, தானே லிங்கம் எனும் ஐக்கியமாகி விடுகிறது. எனவே திருவாசக வழிபாட்டால் வீரசைவன் லிங்கமாகக் காட்சி தரும் செய்தியை இப்பாடல் குறிக்கிறது எனக் கொள்ளலாம். (சிவபுராணத்தைப் பாடணம் (மனப்பாடம்) செய்யாத எந்த ஒரு வீரசைவரும் இருக்க இயலாது. அந்த அளவிற்கு வீரசைவத்தோடு, மணிவாசகரின் திருவாசகம் ஐக்கியமானதாகும்.)

அருஞ்சொற் பொருள்

பேரின்ப வெள்ளம் - இறைவனின் திருவருள், தூசுஅகல் அல்குல் - குற்றம் நீங்கிய பெண்ணின் இடைப்பகுதி (உமையவள்

தெய்வமகள் ஆதலால் மானிடப் பெண்களுக்கு இருக்கின்ற குற்றம் நீங்கியிருத்தல்), வேய் - மூங்கில்.

பாடல் - 9

இடுகாட்டுள் மாதர் எலும்பில் புரள்மால்
சுடுகாட்டுள் ஆடுவான் சுட்டின் - ஒடுகாட்டும்
சம்பந்தா என்புநின்பால் தந்தாக்கிக் கொண்டிலன்என்
கும்பந்தாம் என்னும் முலைக்கொம்பு.

இப்பாடல் திருஞானசம்பந்தரைப் போற்றுகின்ற வெண்பா வாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

சுடுகாட்டினுள் என்றும் ஆடிக்கொண்டிருப்பவனாகிய சிவபெருமானைத் தன் கைவிரலால் சுட்டிக்காட்டிய திருஞான சம்பந்தப் பெருமானே, சுடுகாட்டினுள் பிருந்தை என்னும் பெண்ணுடைய எலும்பின் மேல், காதல் காரணமாகப் புரண்டு வருந்தும் திருமால், அவ்வெலும்புகளை உன்னிடம் கொடுத்துச் சிறுகுட வடிவத்தைப் பெற்ற மார்பகங்களைக் கொண்ட பெண்ணாகச் செய்து கொள்ளலாமே, அவ்வாறு செய்யாமைக்குக் காரணம் என்ன?

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் மயிலாப்பூர் சிவநேசச் செட்டியாரின் , பாம்பு கடித்து இறந்த மகளின் எலும்பினைத் திருஞானசம்பந்தர் பெண்ணாக்கிய பெருமையைக் குறிப்பிடுகின்ற பாடலாகும். அப்படி எலும்பைப் பெண்ணாக்கிய சம்பந்தப் பெருமானிடம் பிருந்தை என்பவளின் எலும்பைக் கொடுத்துத் திருமால் பெண்ணாக ஆக்கிக் கொள்ளாதது ஏன்? என்ற வினா அமைப்பில் இப்பாடல் அமைந்துள்ளது. சலந்தரன் என்பவனின் மனைவியாகிய பிருந்தை என்பவளிடம் சலந்தரன் போல் உருமாறித் திருமால் இன்பத்தை அனுபவிக்க, அதனை உணர்ந்த பிருந்தை, தன்னைத்தானே எரித்துக் கொண்டாள். அப்படிப்பட்ட கற்புக்கரசியின் எலும்பைத் திருமால் ஞான சம்பந்தரிடம் கொடுத்து, மீண்டும் பிருந்தையை உருவாக்கிக் கொண்டிருக்கலாமே? அவ்வாறு திருமால் செய்யாததற்குக் காரணம் என்ன? என்று கேட்பது போல் பாடற்பொருள் அமைந்துள்ளது.

மாதர் எலும்பில் புரள்மால் - என்பது பிருந்தை தனக்குத் தானே தீயிட்டுக் கொண்ட பிறகு, சுடுகாட்டின் மேல் எஞ்சியிருந்த எலும்பினைப் பிரிந்து வாழமுடியாமல், அந்த எலும்பில் துன்பத்தோடு புரண்ட திருமால் என்பது பொருளாகும். திருமால் என்ற தெய்வம் எலும்பைக் கொண்டு வருந்தியதே தவிர, தன்னுடைய ஆற்றலால் அவ்வெலும்பைப் பெண்ணாக்கிக் கொள்ள முடியவில்லையே என்பதை இத்தொடர் காட்டுகிறது.

பாடலில் அமைந்த சுட்டி என்ற சொல், ஞானசம்பந்தப் பெருமான் சீர்காழிக் குளக்கரையில் பால்தந்தது யார்? என்று தந்தை கேட்டபோது, தோடுடைய செவியன் என்று தோணிபுரத்து இறைவரைச் சுட்டிக்காட்டிய நிகழ்வை நினைவு படுத்துவதாகும்.

வீரசைவ நோக்கில் பாடற்பொருள்

இப்பாடலில் காத்தற் கடவுளாகிய திருமாலால் எலும்பைப் பெண்ணாகிக் கொள்ள முடியவில்லை. ஆனால் தோணிபுரத்து இறைவன் திருவருள் பெற்ற திருஞான சம்பந்தரால் மானிட எலும்பைப் பூம்பாவை என்ற பெண்ணாக உருவாக்கிக் கொள்ள முடிந்தது என்ற பொருள், வீரசைவத் தத்துவத்தை நினைவூட்டுவ தாகக் கொள்ளலாம். வீரசைவ மரபில் ஞானிகள் வேறல்ல, இறைவன் வேறல்ல, இறைவன் பிற ஆன்மாக்களுக்கு அருள் வழங்குவது போல, அங்கத்தை லிங்கமாகக் கொண்டு விளங்கும் வீரசைவ ஞானிகள், தங்களை நாடிவரும் அடியவர்களுக்கு அருள் வழங்கும் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள்.

பிரபுலிங்க லீலையில் பசவேசரை நினைவு கொண்டு போற்றுகின்ற சிவப்பிரகாசர், கள்ள வேடம் புனைந்திருந்த கள்வர் எல்லாம் மாசு நீங்கும் மனத்தோடு உண்மைத் தொண்டர் ஆகும்படித் தன் மனதில் நினைத்து அவர்களையும், அவர்கள் அணிந்திருந்த கத்திரிக்காயையும், அடியார்களாகவும் லிங்க மாகவும் மாற்றியவர் ஆவார் என்று குறிப்பிடுவார். மேலும் நம் திருமட வரலாற்றில் எத்தனையோ அதிசயங்கள் நடந்திருப்பதை இங்கு நினைவு கொள்ளலாம்.

பசவேசர் போன்ற அருளாளர்கள், ஒன்றை மற்றொன்றாக மாற்றுகின்ற இறையருள் தன்மை பெற்றவர்கள் ஆவார்கள். இதனை நினைவு கொண்டு இப்பாடலை நோக்கும் பொழுது,

அங்கத்தை லிங்கமாகக் கொண்ட வீரசைவக் குருமார்களாம் ஞானிகள், எவ்வாறு இறையருள் பெற்று அந்த மாற்றங்களைச் செய்தார்கள், செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவு கொண்டு ,அதுபோலத் திருஞானசம்பந்தராம் அடியவர், ஒன்றை மற்றொன்றாக மாற்றும் இறையருள் பெற்று விளங்குவதை இப்பாடல் குறிப்பிடுவதால் இது வீரசைவக் குருமார்களை நினைவு படுத்துவதாகக் கொள்ளலாம்.

அருஞ்சொற் பொருள்

இடுகாடு - சுடுகாடு, மாதர் - பிருந்தை, மால் - திருமால், சுடுகாட்டுள் ஆடுவான் - சுடுகாட்டைக் கோயிலாகக் கொண்ட சிவபெருமான். (கோயில் - சுடுகாடு - திருவாசகம்), என்பு - எலும்பு, கும்பந்தாம் - கும்பம்போன்ற வடிவு கொண்ட, முலைக்கொம்பு - மார்பகங்களைக் கொண்ட பிருந்தை.

பாடல் - 10

கொள்ளைக் கதிர் முத்தின் பந்தரும் சின்னமும் கொள்ளும் ஒரு
பிள்ளைக்கு அது தகும் நாவரசாகிய பெருந்தகையோய்
கள்ளைக் குவளை உமிழ் வீழியில் படிக்காசு ஒன்று நீ
வள்ளைக் குழை உமை பங்காளர் கையில் என் வாங்கினையே

இப்பாடல் திருநாவுக்கரசரைப் போற்றிய கட்டளைக் கலித்துறைப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

நாவரசு என்று சொல்லப்பெறும் பெருமையும் தகைமையும் அமைந்த பெருமானே! மிகுதியாகக் கிரகணங்களை வாரி வழங்கும் முத்துக்களால் செய்யப்பட்ட பந்தரையும் முத்துக்களால் செய்யப்பட்ட இசைக் கருவிகளையும் வாங்கிக் கொள்ளும் தன்மையுடைய பிள்ளை எனப்படும் ஞான சம்பந்தருக்கு, குவளை மலர்கள் தேனை மிகுதியாகப் பொழிகின்ற திருவீழிமிழலையில் படிக்காசு பெறுதலாகிய செயல் பொருந்துவதாகும். ஆனால் வள்ளை இலைகளால் செய்யப்பெற்ற காதணிகளை அணிந்த உமையம்மையை இடப்பாகமாகக் கொண்ட சிவபெருமான் கையில் தாங்கள் படிக்காசு ஒன்று வாங்கியது ஏன்?

பாடற்பொருளின் நயவுரை [பழ. முத்தப்பன்]

பாடலின் முதல் இரு வரிகளில் தல யாத்திரை செய்யும் பொழுது மாறன்பாடி என்ற ஊரில் இரவு திருஞானசம்பந்தர் தன் குழுவினரோடு தங்கியிருந்த பொழுது அவரின் நடை வருத்தம் அகல - அத்தலத்து இறைவன் - அவ்வூர் அந்தணர்கள் கனவில் தோன்றி ஞானசம்பந்தனுக்காகக் கோவிலில் முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச்சின்னங்களும் வைத்துள்ளோம். அவற்றை அவன்பால் சேர்ப்பித்திடுக என ஆணையிட்டருளினார். அதன்படி மறுநாள் காலை கோவிலில் முத்துச் சிவிகை உள்ளிட்டவற்றை அந்தணர்கள் கண்டு அதிசயித்து அவற்றை ஞானசம்பந்தரிடம் கொண்டுபோய் சேர்த்தனர். அவரும் இறையருளை எண்ணி வியந்து போற்றி ஏற்றுக்கொண்டார் என்று இச்செய்திகள் இடம்பெற்றுள்ளன

பாடலின் இலக்கிய நய உரையை திரு.வை.ரா அவர்கள் எடுத்துக்காட்டி இருப்பதற்கு மேலாக வேறு ஒன்றும் கூறத் தேவை இல்லை என்பதால் - நம் திருமடத்துப் பதிப்பில் இடம்பெற்ற அவர்களின் உரை மீள் பார்வையாகத் தரப்பெறுகிறது

பஞ்சம் என்பது உணவுப்பொருள் இல்லாமை என்ற பொதுக் கருத்தை உடையது படிக்காசு கிடைத்தவுடன் உணவுப் பொருள் பெறக்கூடிய நிலைமை திருவீழிமிழலையில் இருக்கத்தான் செய்தது. பொருள் அறம் காரணமாகச் செலவிடப் பெறாமல் தீய பிற காரணங்களுக்காகவே செலவிடப்படுவதாயிற்று. அறத் தொண்டாற்றுபவர் அரிதாயிற்று. எனவேதான் அப்பஞ்சம் - இயல்பான பஞ்சமாகக் கருதப்பட்டது. இவ்அறப்பஞ்சம் இருப்பதைக் குறிப்பிடவே குவளைமலர் தேன் சொரிந்தது என்று கூறப்பெற்றுள்ளது. தாமரையில் தேன் பெறுவது - பண்பாட்டின் வளர்ச்சியையும் - குவளையில் தேன் பெறுவது - பண்பாட்டின் குறைவையும் குறிப்பதாகக் கொள்ளலாம். (பக்கம் 88, 89) பாட்டில் "உமை பங்காளர்" என்று சிவபெருமான் குறிக்கப் பெற்றிருப்பது அருளாம் சக்தியோடு கூடிய இறைவன் என்பதை நினைவூட்டுவதாகும்.

வீர சைவ நோக்கில் பாடலின் பொருட்சிறப்பு

இப்பாடலின் மேலோட்டமான பொருளாக வெளிப்படுவது - இறைவனிடம் கூட யாசிக்கக் கூடாது என்பது. இதனைத்

திருவாசகம் "வேண்டி நீ யாது அருள் செய்தாய் - யானும் அதுவே வேண்டின் அல்லால் - வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னின் அதுவும் உன்தன் விருப்பே என வலியுறுத்தும். இதனையே வீரசைவ நெறிகளுள் ஒன்றான

"வேண்டாமை என்னும் விழுச்செல்வம் நெறி

வலியுறுத்தும். மேலும் சிவப்பிரகாசர் இறைவனிடத்தில்,

மெய்த்தவர் அடி குற்றேவலின் திறத்தும்
விளங்கும் ஆகம உணர்ச்சியினும்
புத்தலர் கொடு நிற்பரவு பூசையினும்
பொழுதுபோக்க எனக்கு அருள்வாய் (சோணசைல மாலை 29)

என வேண்டுவது அல்லது பொன்னையோ பொருளையோ வேண்டவில்லை. முடிபாகக் கூறும் பொழுது பாடலில் சிவப்பிரகாசர் - நாவுக்கரசரிடம் கேட்கும் கேள்வி மூலம் யாசிக்காது - இறையடி போற்றும் பேறு பெரும் - வீர சைவ மரபு வலியுறுத்தப் பெறுகிறது எனக் கொள்ளலாம்.

அருஞ்சொற் பொருள்

கொள்ளை - மிகுதி கதிர் - ஒளி பந்தர் - குடை ,பிள்ளை - ஞானசம்பந்தர் கள்ளை - தேன் குவளை - மலர் வீழி திருவீழிமிழலை என்ற திருத்தலம் படிக்காசு கோவில் படியில் வைக்கப் பெற்ற காசு. வள்ளை - ஒருவகை இலை குழை - காது

பாடல் - 11

வாங்கு சிலை புரையும் உடல் என்னும் குளத்தில் மூல
மலம் எனும் ஓர் வெங்கரவின் பகுவாயில் நின்றுந்
தீங்குஇல் உயிர் என்னும் பனவக் குலமகனை ஆதி
திரோதாயி என்னும் வெந்திறல் கூற்றுவனால்
ஓங்குறு நாதாந்தம் எனப் பெயரிய அக்கரையில்
உமிழ்வித்துச் சிவம் எனும் ஓர் தந்தையொடும் கூட்டாய்
கோங்க முகைக் கவற்றும் இளமுலைப் பரவை மகிழக
குண்டையூர் நெல்மலை முன் கொண்ட அருட்கடலே

இப்பாடல் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் போற்றுகின்ற விருத்தப்பாவாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

கோங்கு (தேங்காய்)வின் அரும்பைந் தம்முடைய அழகினால் வருத்தியும், இளமைத் தன்மை வாய்ந்தும் இருக்கின்ற முலைகளை உடைய பரவை நாச்சியார் மனம் மகிழும் வண்ணம் குண்டையூரில் பெற்ற நெல்மலையைத் திருவாரூரில் தம் வீட்டின் முன் வருமாறு பூதங்களை ஏவல் கொண்ட கருணைக் கடலாகிய நம்பியாரூரரே!

வளைந்த வில்லைப் போன்ற உடல் எனும் குளத்தில், மூலமலம் (ஆணவம்) எனப் பெறும் வெம்மையாகிய முதலையின் வாயினின்றும், அழிதல் இல்லாத உயிர் எனப்பெறும் அந்தண குலப் புதல்வனை, ஆதி திரோதாயி எனப்பெறும் கொடிய வலிமை வாய்ந்த கூற்றுவனால் உயர்ந்த நாதாந்தம் என்ற பெயருடைய அக்கரையில் கக்குமாறு செய்து, அப்புதல்வனைச் சிவம் எனப் பெறும் ஒப்பற்ற தந்தையோடு சேர்ப்பீராக.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் உருவகஅணி அமைந்த பாடல். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புக்கொளியூர் அந்தணச் சிறுவனை - முதலை வாயிலிருந்து மீட்ட செய்தியைச் சிவப்பிரகாச சுவாமிகள் சித்தாந்த - வீரசைவத் தத்துவ விளக்கமாக - உருவகித்துப் பாடிய பாடல். அறிந்தவரையில் சிவப்பிரகாசர் மட்டுமே - சுந்தரர் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சியை - தத்துவநோக்கில் நோக்கியவர் எனக் குறிப்பிடலாம்

வாங்கும் சிலை புரையும் உடல் - என்ற பகுதி உடலின் அழகு நிலையாமையை எடுத்துக்காட்டு முகத்தான் முதுமையில் அமையும் வளைந்த உடலைச் சுட்டுகிறது. உடலைச் சிவப்பிரகாசர் உருவகித்திருப்பது நினைந்து இன்புறத்தக்கது. ஒரு குளத்தில் நீர், மண், காற்று உள்ளிட்ட ஐம்பூதங்களின் சார்பு எப்படி அமைந்துள்ளதோ அதுபோல உடம்பு இறைவன் திருவருளால் ஐம்பூதச் செயற்கை கொண்டது என்பது தெளிவாகிறது.

மூலமலம் - ஆணவமலம் - உயிர் தோன்றும் பொழுதே - செம்பினில் களிம்பு போல் உடன் தோன்றுவதால் மூலமலமாயிற்று. தீங்கில் உயிர் - அழியாத உயிர் என்பதை வலியுறுத்துகிறது.

நாதாந்தம் கரையாக உருவகப்படுத்தப் பெற்றுள்ளது. முப்பத்தாறு தத்துவங்களின் முதல் தத்துவம் நாதம். அத்தத்துவம் முடியும் பொழுது சிவம் கலக்கும் என்பதை நாதாந்தக் கரை என்று சிவப்பிரகாசர் உருவகித்துள்ளது சிறப்புடையதாம்.

வீரசைவ நோக்கில் பாடற்பொருள்

பாடலில் இடம்பெற்றுள்ள மூலமலமெனும் ஓர் வெங்கரவின் பகுவாயில் நின்று - நாதாந்த மெனும் கரையில் பனவக் குலமகன் உமிழப்பட்ட செய்தி இடம்பெற்று - வீரசைவ மரபில் அங்கத்தில் லிங்கத்தாரணத்தை ஏற்ற வீரசைவர் வழிபட வழிபட - ஆணவமலம் மறைக்கப்பெற்ற உயிளர்தங்கியுள்ள உடல் லிங்கமாகும் என்பது அடிப்படைக் கருத்தாகும். இதனை வலியுறுத்தக் கீழ்வரும் பாடலை நினைவு கொள்ளலாம்

அத்தனை அகம் தரிக்க அசத்தன் ஆயினும் அதான்று
சத்தனே எனினும் ஞான தற்பர லிங்கமே என்
புத்தியின் திட்பம் எய்திப் புறத்து இலிங்கம் தரிக்க
வித்தக நெறி யுணர்ந்த வீர சைவர்கள் தாம் அன்றே

சித். சிகாமணி, 149)

மேலும் பாடலில் "சிவமெனும் ஓர் தந்தையொடு கூட்டாய்" என்ற தொடர் வீரசைவ மரபுக்கே உரிய "ஐக்கியம்" என்ற தத்துவத்தை நினைவு படுத்துவதாகும்.

சித்தாந்தம் முத்தியில் ஆன்மா இறையடி அணையும் என்றிருக்க வீரசைவமே இறையருளோடு முத்தியில் ஆன்மா ஐக்கியம் ஆகிவிடும் என்று வலியுறுத்தும். இத்தகைய இரு செய்திகளால் இப்பாடல் வீரசைவ மரபுக்கருத்துக்களையும் குறிப்பாக உணர்த்துகிறது எனக் கொள்ளலாம்

அருஞ்சொற்பொருள்

வாங்கு - சிலை - வளைக்கப்பட்ட வில் புரையும் - உவம உருபு. மூலமலம் - ஆணவமலம். வெங்கரவு - முதலை. பனவக்குலமகன் - அந்தணர் குலத்தில் தோன்றிய சிறுவன் - திரோதாயி - இறையருளின் தன்மை. கூற்றுவன் - யமன் கவற்றும் - வெல்லும்.

பாடல் - 12

கடல்நிற வண்ணன் கண்ஒன்று இடந்து
மறைச்சிலம்பு அரற்றும் மலரடிக்கு அணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக்கு எரித்தும் கடிமலர்க் கோதைச்
சுரிகுழல் கருங்கண் துணைவியை அளித்தும்
அருமகள் நறும்பூங் கருமயிர் உதவியும்
நெல்முளை வாரி இன்அமுது அருத்தியும்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்
அகப்படு மணிமீன் அரற்குஎன விடுத்தும்
பூட்டி அரிவாள் ஊட்டி அரிந்தும்
தலைஉடை ஒலிக்கும் சிலையிடை மோதியும்
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்தும்
தந்தையைத் தடிந்தும் மைந்தனைக் கொன்றும்
குற்றம் செய்த சுற்றம் களைந்தும்
பூக்கொளும் மாதர் மூக்கினை அரிந்தும்
இளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநாள் ஒருசிலர் தொண்டர் ஆயினர்
செங்கண்மால் தடக்கையின் சங்கம் நாண
முள்தாள் தாமரை முறுக்குஅவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூர் அன்ப!
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரில் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றுஎழில் மேனியின் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன்
இருக்கும் அடுக்கல் அரக்கன் எடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமகள் தழுவ மனம்மகிழ் வோனே.

இப்பாடல் மாணிக்கவாசகரைப் போற்றிய நேரிசை அகவற்பா பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

செந்தாமரை மலர் போலும் திருக்கண்ணினை உடைய திருமால் இடது கையில் ஏந்தியிருக்கின்ற பாஞ்சசன்யம் என்னும் வெண்சங்கு வெட்கம் அடையும்படி முள்ளோடு கூடிய

தாள்களைக் கொண்ட தாமரையின் கட்டவிழ்ந்த மலரின் மேல், வலம்புரிச் சங்குகள் துயில் கொள்ளும் சிறப்பமைந்த திருவாதவூரில் அவதாரம் செய்தருளிய அன்பராம் மாணிக்க வாசகரே, கடல் போலும் கருமையான நிறத்தையுடைய திருமால் தம்முடைய அழகிய கண் ஒன்றினைத் தோண்டி எடுத்து, வேதங்களாகிய சிலம்பொலி செய்யும் சிவபெருமானின் திருவடிகளில் ஒரு மலரென வைத்து வழிபட, அவ்வழிபாட்டிற்குத் திருவுளம் மகிழ்ந்து, அத்திருமாலுக்குச் சக்கரப் படையை நல்கி அருளியவனும், வேதங்களுக்கு எல்லாம் தலைவனுமாகிய சிவபெருமானுக்கு முன் காலங்களில் ஒருசில நாயன்மார்கள், தம்முடைய முடியைத் திருக்கோயில் திருவிளக்குத் திரியாக இட்டு எரித்த கணம்புல்ல நாயனார், மணம் பொருந்திய மலர்களால் அமைத்த மாலையணிந்த சுருண்ட கூந்தலையும், கருமை நிறம் பொருந்திய கண்ணினையும் உடைய தன் மனைவியையே இறைவனுக்கு அளித்த இயற்பகை நாயனார், பெறற்கரும் ஒரே மகளின் மணமிக்க பொலிவமைந்த கரிய கூந்தலை அறுத்துக் கொடுத்த மானக்கஞ்சாற நாயனார், வயலில் நீரில் மிதந்த நெல் முளைகளை வாரிக்கொண்டு வந்து இனிய உணவாக அமைத்து, இறை அடியார்க்கு அமுது செய்வித்த இளையான்குடி மாறநாயனார்,

கோவணத்திற்கு இணையாகத் தம்மையே துலாக்கோலில் வைத்து நிறுத்துக் கொடுத்த அமர்நீதி நாயனார், தம் வலையில் முதலில் அகப்பட்ட மீனை இறைவனுக்குக் கொடுத்தல் என்னும் கொள்கைப்படி, ஒருநாள் முதலில் வந்து அகப்பட்ட இரத்தின மயமான மீனை இறைவனுக்கு என விடுத்த அதிபத்த நாயனார், அரிவாளைப் பூட்டித் தம் கழுத்தை அரிந்த அரிவாட்ட நாயனார், துணிகளை வெளுக்கும் கல்லில் தலையை மோதிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார்,வண்டுகள் மொய்க்கும் மலர்களை அணிந்த கூந்தலையுடைய மனைவியாரின் மலர் போன்ற கையை வெட்டிய கழற்சிங்க நாயனார், தம் தந்தையின் கால்களை வெட்டிய சண்டேசுர நாயனார், தம் வலிமை வாய்ந்த ஒரே பிள்ளையைக் கொன்று அமுது படைத்த சிறுத்தொண்ட நாயனார்,

சிவபெருமானுக்குக் குற்றம் செய்த உறவினர்களுள் ஒரு சிறுவனைக் கூட விடாமல் கொன்று குவித்த கோட்புலி

நாயனார், சிவபெருமானுக்கென உள்ள மலரை நுகர்ந்த காரணத்தால் அப்பெண்ணின் மூக்கினை அரிந்த செருத்துணை நாயனார், இளமையாகிய முலைகளை உடைய மனைவியின்பால் நுகரப்படும் இளமையைத் துறந்த திருநீலகண்ட நாயனார், ஆகியோர் அடியவர்களாக அமைந்தனர்.

அவ்வாறு இருக்க, தங்கி இருக்கும் கயிலை மலையை இராவணன் தூக்கவே, அது கண்டு பயந்து இறைவனுடைய வலிமை வாய்ந்த தோள்களில் தம்முடைய முலைகள் தாக்கும்படி உமையம்மையாராம் மலைமகள் அணைக்க, அதனால் மனம் மகிழ்ந்தவராகிய சிவபெருமான், பாடுகின்ற திருத் தொண்டைத் தாங்கள் (மாணிக்கவாசகர்) பாடும் பொருட்டு, மதுரை என்னும் பெரும்பதியில் , நரியைக் குதிரையாக்கிப் பாண்டியனுக்கு அதனை விற்றும், விண்ணுலகத்தார் புகழும் திருமுடியின்கண் மண் கொண்ட கூடையைச் சுமந்தும், திருநீற்றின் அழகு பொலியும் உடம்பில் பிரம்பினால் அடிபட்டும், தங்களைத் தொண்டன் என்று கூறும்படி வலிய வந்து ஆட்கொண்டனன்.

பாடற் பொருளின் நயவுரை [பழ. முத்தப்பன்]

இவ் அகவற்பாவை இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாம். ஒருபகுதி சிவபெருமானுக்குப் பெரிய புராண பதினான்கு அடியார்கள் ஆற்றிய திருத்தொண்டுகள். இரண்டாவது பகுதி மாணிக்கவாசகரைத் தொண்டராக்கிக் கொள்ள அவருக்குச் சிவபெருமான் செய்த மூன்று பணிகள். இத்தகைய இருநிலையில் மாணிக்கவாசகரின் சிறப்பு குறிப்பாக எடுத்துக் காட்டப் பெறுகிறது. அதாவது பெரியபுராண அடியார்கள் எல்லாம் செயற்கரிய செயல்களைச் செய்து சிவபெருமானுக்குத் தொண்டர் ஆனார்கள். ஆனால் மாணிக்கவாசகர் தம்மீது பாடல்களைப் பாடுவதற்காகச் சிவபெருமானே குதிரைச் சேவகனாகவும், மண் சுமக்கின்ற கூலி ஆளாகவும், பிரம்படி பட்ட துன்ப முடையவராகவும் பணி செய்து மாணிக்கவாசகரைத் தொண்டர் ஆக்கிக் கொண்டார். குறிப்பாகச் சொன்னால் தாங்களே தொண்டு செய்து பெரிய புராண அடியார்கள் தொண்டரானார்கள். ஆனால் மாணிக்கவாசகருக்கோ இறைவன் தொண்டு செய்து அவரைத் தொண்டராக்கிக் கொண்டான் என்ற சிறப்புப் பொருள் அமைந்து,

மாணிக்கவாசகரின் பெருமையைச் சிவப்பிரகாசர் வெளிப் படுத்துகிறார்.

இப்பாடலில் மூன்று வருணனைப் பகுதிகள் அமைந்துள்ளன. முதலில் திருமால் கண்ணைத் தோண்டி அளித்துச் சக்கரப் படையைப் பெற்றது. இரண்டாவது திருமாலின் சங்கைவிட வெண்மை பொருந்திய சங்கு தங்கும் தாமரை மலரைக் கொண்ட திருவாதவூரின் சிறப்பாகும். மூன்றாவது இராவணன் கயிலையைத் தூக்க உமையவள் சிவபெருமானை அணைத்துக் கொள்ளச் சிவபெருமான் மகிழ்ந்தது. இத்தகைய மூன்று வருணனைகளால் சிவப்பிரகாசர் ஓர் குறிப்புப் பொருளைத் தருகிறார் எனலாம். அதாவது திருமால் அருச்சனைத் தொண்டைச் செய்து சக்கரப் படையைப் பெற்று முதல் தொண்டராக மாறியது. அதுபோலப் பெரிய புராணத் தொண்டர்கள் தொண்டு செய்து இறைவனின் திருவருளைப் பெற்றது.

திருமால் எவ்வாறு உடம்பிலுள்ள கண்ணைத் தோண்டி னாரோ அதுபோலப் பாடலில் இடம் பெற்ற அடியார்கள் பதினான்கு பேரும், தங்கள் உடம்பில் உள்ள அங்கங்களை (மயிர், திருமுடி, தம்உடலை, கழுத்தை அரிந்தது, தலையை மோதியது, கையை வெட்டியது, காலை வெட்டியது, மகனைக் கொன்றது, உறவினர்களை வெட்டியது, மூக்கை வெட்டியது) இறைவனுக்குக் காணிக்கையாக்கி அருள் பெற்ற செய்திகள் கூறப் பெறுகின்றன.

அடுத்த வருணனையாகத் திருமாலின் சங்கினை வென்ற, உயர்ந்த வெண்மையை உடைய சங்குகள் விளங்கும் திருவாதவூர் என்பதால், பாடலில் இடம்பெற்ற பதினான்கு அடியார்களில் சிலர் கொடுக்க முடியாதவற்றைக் கொடுத்த (மனைவியை அளித்தது, விதை நெல்லைக் கொடுத்தது, நவரத்தின மீனைக் கொடுத்தது ஆகியவை) செயல்களை உடைய அடியார்களின் வெள்ளை உள்ளத்தின் சிறப்பு எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

மூன்றாவது வருணனை உமையவள் அணைக்கச் சிவபெருமான் மகிழ்ந்தது அமைந்துள்ளது. அதுபோல மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் தாமே எளிவந்து பணி செய்து மகிழ்ந்தது கூறப்பெற்றுள்ளது. இத்தகைய கற்பனை வளத்தால்தான்

சிவப்பிரகாசர் கற்பனைக் களஞ்சியம் என்று அழைக்கப் பெறுகிறார்.

வீரசைவ நோக்கில் பாடற் பொருள்

பாடலில் மேலோட்டமாக அடியவர்களின் பெருமையும், சிவபெருமானின் எளிவந்த தன்மையும் இடம் பெற்றுள்ளதை அறியலாம். என்றாலும் மாணிக்கவாசகருக்காக இறைவன் செய்த பணிகளை உற்று நோக்க வேண்டும். இதனை முனைவர் வை.ரத்தினசபாபதி அவர்கள் தம்முடைய வீரசைவம் என்ற நூலில், மணிவாசகப்பேறு என்று குறிப்பிடுகிறார்.

"இராமலிங்க சுவாமிகள் மாணிக்கவாசகரைச் சிறப்பிக்கும் போது அவர் அடைந்த நிலை வேறு எவருக்கும் கிட்டாத தனி நிலை, அதனால் அதனை மணிவாசகப்பேறு என்றே குறிப்படுவர், அது என்ன?

உலக வழக்கை நோக்கினால் அடியவர்கள் இறைவனை வேண்டி, நாடிச் சென்று அவன் அருள் பெறுவர். ஆனால் மாணிக்கவாசகரைப் பொறுத்தவரையில், மண் சுமந்தும், பிரம்படி பட்டும் இறைவனே வலியவந்து மாணிக்கவாசகரை ஆட்கொண்டான். இவ்வாறு வேறு யாருக்கும் நிகழவில்லை. அதை உணர்த்தவே மாணிக்கவாசகர், "நானேயோ தவம் செய்தேன், சிவாயநம எனப் பெற்றேன்" என்று கூறினார். இதுவே மணிவாசகப்பேறு. (வீரசைவம், சென்னைப் பல்கலைக்கழகம், 1990, பக் 171 - 172)

மேலும் இப்பாடலில் திருமாலைப் பற்றிய இரு செய்திகள் இடம்பெற்றுள்ளன. முதல் பகுதியில் திருமால் சிவனை வழிபடும் பொழுது, ஒருமலர் குறைந்ததால் தன்னுடைய கண்ணைத் தோண்டி எடுத்து, அக்கண்மலரை மலராகக் கொண்டு சிவபெருமான் திருவடியில் சாற்றினார் என்பதாகும்.

மற்றொரு செய்தி - திருமாலின் கரத்தில் இருக்கும் பாஞ்சசன்யம் என்னும் சங்கின் வெண்மையைக் காட்டிலும் , மிகுந்த வெண்மையை உடைய சங்குகள் விளங்கும் திருவாதவூர் என்று குறிக்கப் பெற்றிருக்கிறது. இவ்விரு செய்திகளால் திருமாலாம் தெய்வத்தின் உயர்நிலை சிறிது குறைக்கப் பெற்றிருக்கிறது எனலாம். அதாவது தன்னைவிடச் சிவபெருமான் உயர்ந்தவர்

என்பதால், திருமாலே தன் கண்ணைச் சிவபெருமானுக்குக் காணிக்கையாக்கினார் என்ற நிலையும், தெய்வத் தன்மையுடைய திருமாலின் கையில் உள்ள சங்கைக் காட்டிலும் , சிவபெருமானின் அடியவராம் மாணிக்கவாசகரின் பிறந்த ஊரில் விளங்கும் சங்குகள் அதிக வெண்மை பெற்றிருந்தன என்பதும் குறிக்கப் பெற்றுள்ளமை சிந்தனைக்குரியதாகும்.

வீரசைவத் தத்துவத்தில் எல்லாம் வல்ல சிவபெருமானே முழுமுதற் தெய்வம், எனவே அவரை வணங்குவதையே முதன்மையாகக் கொள்ள வேண்டும். பிற தெய்வங்களை வணங்குதல் வேண்டாம் என்ற அடிப்படைத் தத்துவம் குறிப்பிடத் தக்கதாகும். இதனைச் சிவப்பிரகாசர் தம்முடைய நூல்கள் பலவற்றிலும் பிறதெய்வ வழிபாடு வேண்டியதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். எடுத்துக் காட்டிற்குக் கீழ்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

சோதிப் பதியன்றி வேறுஒரு தெய்வம் தொழுதற்கு இல்லை
ஓதின் பிறர்என அச்சம் உறாமல் உயிர்கள் எல்லாம்
நீதிப் புதல்வர்கள் ஆயின, ஆதலின் நீகொள் கற்புப்
பேதிப்பது அன்றுகண்டாய் குன்றை வாழும் பெரியம்மையே.
(பெரியநாயகி அம்மை கலித்துறை, பா. 9)

மேலும் பிறசமயங்களின் ஆதிக்கமும் தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பதையும் சிவப்பிரகாசர் வலியுறுத்துவார்.

வந்துபிற கடவுளர்கள் தமைஉரைத்து உமைகாண
மணிமன்றுள் நடமாடுமா
மணியைஇகழ் பரசமய நிலைகுலைய வென்றுஅறையும்
(சிவஞான பாலய தேசிக பிள்ளைத்தமிழ், பா. 83)

இத்தகு நிலையில் பாடலில் இடம்பெற்றிருக்கும் கருத்துகள் மூலம் வீரசைவத் தத்துவம் வலியுறுத்தப் பெறுகிறது.

அருஞ்சொற்பொருள்

கடல்நிற வண்ணன் - திருமால், பரிதி - சக்கரம், சுருதி - வேதம், ஊட்டி - பூட்டி, சிலை - கல், கோதை - பெண் , கைம்மலர் - கை, தடிந்து - வெட்டி, களைந்து - கொன்று, அரிந்து - வெட்டி, சங்கம் - சங்கு, பாடும்பணி - பாடுகின்ற தொழிலைச் செய்ய,

குதிரைமாறி - குதிரைச் சேவகனாக மாறி, மண்பொறை - மண்சுமை, அடுக்கல் - கயிலாயமலை, மலைமகள் - உமையவள்.

பாடல் - 13

மகிழ்ச்சி மிகவுண்டு போலும்எதிர் வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது - நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டு இரையும் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு.

இப்பாடல் திருஞானசம்பந்தரைப் போற்றிய வெண்பா வாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

முருக்கவிழ்ந்த மலர்களில் வண்டுகள் - சந்தையில் கேட்கும் ஒலியை விடப் பேரொலி செய்கின்ற தன்மை வாய்ந்த சீர்காழிச் சம்பந்தப் பெருமானே! திருக்கோயிலில் பெருமான் திருமுன் வந்து புகழ்ச்சியமையத் தேவாரப் பாக்களைப் பாடும் பொழுது, தந்தையாம் சிவபெருமானை விட உமக்கு ஞானப்பால் கொடுத்த , உமையவளாம் தாய்க்கு மிக்க மகிழ்ச்சி அமையும் போலும்.

பாடற் பொருளின் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் திருஞானசம்பந்தரின் தேவாரப் பெருமையை எடுத்துக் காட்டும் பாடலாகும். தேவாரம் பாடிய மூவரில் சிவபெருமான் திருநாவுக்கரசருக்குச் சூலைநோயாம் துன்பத்தைக் கொடுத்து, திலகவதியார் மூலமாகத் திருநீற்று அருள் கொடுத்துத் தேவாரப் பாடல்களைப் பாடச் செய்தார். சுந்தரமூர்த்தியாரை வலிந்து தடுத்து ஆட்கொண்டு பாடச் செய்தார். ஆனால் திருஞானசம்பந்தருக்கோ தான் நேரில் வராது, உமையவள் மூலம் ஞானப்பால் கொடுத்துத் தேவாரத்தைப் பாடச் செய்தார்.

எனவே திருஞான சம்பந்தர் திருக்கோயிலில் சிவலிங்க உருவத்திற்கு முன்னே இயற்கையாகத் தேவாரப் பாடல்களைப் பாடும்பொழுது, சிவபெருமான் மகிழ்வதை விடப் பால் கொடுத்த உமையவள் தான் கொடுத்த பாலினால்,தேவாரம் பாடுகின்ற திருஞானசம்பந்தரின் கொஞ்சு தமிழைக் கேட்டு மகிழ்வாள் என்று சிவப்பிரகாசர் பொருள் பொதிந்த நிலையில் பாடியிருப்பது படித்து இன்புறத் தக்கதாகும்.

வள்ளுவப் பேராசான், தன் மக்களின் புகழைக் கேட்டுத் தாய் மகிழ்வாள் என்று கூறுவது போல, திருஞான சம்பந்தர் தாம் பாடும் தேவாரத்தில் சிவபெருமானின் புகழைக் கூறும்பொழுது, சிவபெருமான் மகிழ்கிறாரோ இல்லையோ, சிவபெருமானின் புகழைத் திருஞானசம்பந்தர் மூலம் கேட்ட உமையவள் மகிழ்வாள் என்று சிவப்பிரகாசர் இப்பாடலில் கூறுகிறார். குறிப்பிட்டுக் கூறினால் ஒருதாய் மக்களின் புகழைக் கேட்டு மகிழ்வதோடு கணவனின் புகழையும் கேட்டு மகிழ்வாள் என்பதைச் சிவப்பிரகாசர் கூறுகிறார் எனலாம்.

பாடலில் சீர்காழியின் பெருமையைக் குறிப்பிடும் பொழுது, சீர்காழி நகரில் பூத்திருக்கும் மலர்களில் வண்டுகள் ஒலிக்கின்றன. அந்த ஒலி சந்தை இரைச்சலைவிடப் பேரொலியாக இருந்தது என்கிறார். இதன் மூலம் சிவப்பிரகாசர் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடலின் பெருமையைப் புலப்படுத்துகிறார் எனலாம். சந்தை ஒலியைக் காட்டிலும் தேன் உண்ணும் வண்டுகளின் ஒலி சிறந்திருந்தது போல, இறைவன் மீது பிற அருளாளர்கள் பாடும் பாடல்களை விட, திருஞானசம்பந்தரின் பாடல் சிறந்திருந்தது என்பதை இக்கற்பனை மூலம் வலியுறுத்துகிறார் எனலாம்.

மேலும் குறிப்பிட்டால் சந்தை ஒலி என்பது பலர் கூடி ஒலிக்கும் ஒலியாகும். அதைவிடத் தனியாகத் தேன் உண்ணும் வண்டுகளின் ஒலி உயர்ந்தது என்பதால் , பலர் கூடிப்பாடிய திருமுறைகளை விடத் திருஞானசம்பந்தரின் திருமுறை ஒலி உயர்ந்தது என்று சிவப்பிரகாசர் கூறுகிறார் எனவும் கொள்ளலாம்.

வீரசைவ நோக்கில் பாடற் பொருள்

பாடலில் வழிபடும் பாடல்களைச் சிவபெருமானும் உமையவளும் கேட்டு மகிழ்வர். அவ்வாறு மகிழும் பொழுது சிவபெருமானை விட உமையவள் பெரிதும் மகிழ்வாள் என்று கூறப்பெற்றுள்ளது. சிவபெருமான் தம் மீது பாடப்பெறும் பாடல்களைக் கேட்பதில் நனிவிருப்பன் என்பதைப் பெரியபுராணத்தால் அறிய முடிகிறது. கழறிற்றறிவார் புராணத்தில் நாளும் கேட்கும் சிலம்பொலியின் காலத் தாழ்விற்கு இறைவன் விண்ணொலியாகக் கூறியதைச் சேக்கிழார் கீழ்வருமாறு காட்டுவார்.

என்ற பொழுதில் இறைவர்தாம் எதிர்நின் தருளா தெழும் ஒலியால்
மன்றி விடைநங் கூத்தாடல் வந்து வணங்கி வன்றொண்டன்
ஒன்றும் உணர்வால் நமைமைப்போற்றி உரைசேர் பதிகம் பாடுதலால்
நின்று கேட்டு வரத்தாழ்ந்தோம் என்றார் அவரை நினைப்பிப்பார்.
(கழறிற்றறிவார் 44)

சேக்கிழார் இப்பாடல் மூலம் சுந்தரமூர்த்தியாரின் தேவாரப் பதிகங்களைக் கேட்க விரும்பியதால், கழறிற்றறிவாராம் சேரமான் பெருமாள் நாளும் கேட்கும் சிலம்பொலி தாழ்ந்தது என்கிறார்.

சிவப்பிரகாசர் மேலும் ஒருபடி சென்று தாம் பாடும் பாடலாம் விடத்திற்கு மாற்றாகச் சிவபெருமான் செவிக்குத் திருஞானசம்பந்தரின் பாடல் அமுதாக அமைய, அதனைக் கேட்டு ஞானப்பால் ஊட்டிய தாய் மகிழ்ந்தாள் என்று குறிப்பிடுகிறார்.

விளைக்கும் தவத்தால் பால்தனக்கு
விரும்பிக் கொடுத்த கொழுநன்மணி
மிடறே போல எனது புன்சொல்
விடம்உண் கின்ற திருச்செவியை
முளைக்கும் தரள நகைவாயான்
முதிர்தீம் செய்யுள் அமுதுஊட்ட
முன்னம் பிள்ளைப் பெருமாளை
முலைப்பால் ஊட்டும் ஒருதாயே.
(ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ், 3)

பெரிய புராணத்தில் தேவாரப் பாசுரங்கள் கேட்பதில் சிவபெருமான் நனிவிருப்பன் என்று கூறியது போல, சிவப்பிரகாசர் பிரபுலிங்க லீலையில் இறைவனுக்குரிய புகழ் பாமாலைகளைப் பாடினால்தான் சிறப்பான பூசையாகும், அவ்வாறு இல்லாதவர்கள் காட்டில் வாழும் குரங்குகளை விடக் கீழானவர்கள் என்று குறிப்பிடுகிறார்.

பூசனை செயாதகை புராந்த கன்புகழ்
பேசுதல் இலாதவாய் பெற்று ழன்றிடும்
நீசரா னவர்தமின் நெடுவ னத்திடைக்
கூசுதல் இலாதபுன் குரங்குநன்று அரோ .(பிரபு.கலீலை பா.820)

பூசனை செய்யாத கையும், சிவபெருமானின் புகழ் பேசாத வாயும் பெற்று உழன்றிடும் நீசர் தம்மைக் காட்டிலும் வனத்திடை வாழும் குரங்கு நன்று என்று சிவப்பிரகாசர் கூறுவதால், நாட்டில்

செய்யத்தக்க செயல்கள் இவை இரண்டேயாகும். இதனைச் செய்யாததால் காட்டிலே தன் போக்கில் திரிகின்ற குரங்கைவிடக் கீழானவர் என்று சிவப்பிரகாசர் கூறுவதால், இறைவனின் புகழைப் பாடுவதுதான் இறைவனின் திருவருளைப் பெறுவதற்கு உரிய வழியாகும் என்ற வீரசைவக் குறிப்புப் பொருள் புலப்படுகிறது. நான்மணி மாலைப் பாடலில் உமையவள் மகிழ்ச்சியுறுவாள் என்று கூறப் பெற்றிருப்பதால் இறையருளாம் சத்தியின் திருவருள் கிடைக்கப் பெறும் என்பது பெறப்படுகிறது.

அருஞ்சொற் பொருள்

எதிர்வந்து - திருவுருவ எதிரில் நின்று, நெகிழ்ச்சி - கட்டவிழ்ந்த (மலர்கின்ற), புகலி - சீர்காழிக்கு ஒரு பெயர்.

பாடல் - 14

தாயிலி ஆகும் சிவபெருமான் தனைத் தான் எனும்ஓர்
கோயிலின் ஆரறிவு ஆகிய நாமம்முன் கொண்டிருந்த
வாயிலின் ஆணவம் ஆகும் கபாடமும் மன் திறந்து
நோயிலி ஆகிய சொல்இறை காட்டுவன் நோக்குதற்கே.

இப்பாடல் திருநாவுக்கரசரைப் போற்றிய கட்டளைக் கலித்துறைப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

குற்றம் இல்லாததும், கேட்டவுடன் செயலில் ஈடுபடுத்துவதும் ஆகிய சொற்களுக்கு அரசராகிய திருநாவுக்கரசருக்கு - தான் என்ற சொல்லால் உணர்த்தப் பெறுகிற ஆன்மாவாகிய ஒப்பற்ற கோயிலில் பொருந்திய அறிவு என்று சொல்லப்பெறும் பொருளை, பண்டைக் காலம் முதற்கொண்டே ஏற்றிருந்த வாயிலில் , அவ்வாயில் தோன்றிய காலந்தொட்டே, அதை மறைத்துக் கொண்டிருக்கின்ற, ஆணவம் என்று குறிக்கப் படுவதற்கு உரியதாகும் கதவையும் நிலைபெறத் திறந்து, தாயும் தந்தையும் இல்லாதவன் என்று சொல்லப் பெறும் சிவபெருமான் , தன்னை நோக்குவதற்குக் காட்டுவார்.

பாடற் பொருளின் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் திருமறைக்காட்டுத் திருத்தலத்தில் வேத அறிஞர்களால் அடைக்கப் பட்டிருந்த திருக்கோயில் கதவினைத்

திருநாவுக்கரசர் 'பண்ணின் நேர்மொழியாள்' என்று தொடங்கும் பதிகம் பாடித் திறந்ததைச் சிறப்பித்துக் கூறும் பாடலாகும். இப்பாடலில் சிவப்பிரகாசர் சேக்கிழாரைவிட ஒருபடி மேலே சென்று தன் கற்பனையை வெளிப்படுத்தியுள்ளார். அதாவது சேக்கிழார்,

> வேத வனத்தின் மெய்ப்பொருளின் அருளால் விளங்கு மணிக்கதவம்
> காதல் அன்பர் முன்புதிருக் காப்பு நீங்கக் கலை மொழிக்கு
> காதர் ஞான முனிவருடன் தொழுது விழுந்தார்.
>
> (திருநாவுக்கரசர் புராணம்,பா.269)

என்று திருமறைக்காட்டுக் கதவினைத் தன் பதிகத்தால் திறந்து, இறைவனை வணங்கினார் என்று கூறியிருக்க, இந்தப் பாடலில் சிவப்பிரகாசரோ திருநாவுக்கரசரைக் கதவைத் திறக்கச் செய்து சிவபெருமான், அவர் காணத் தான் அருள் காட்சி தந்தார் என்று குறிப்பிடுகிறார். சிவபெருமான் திருநாவுக்கரசருக்கும், திருஞானசம்பந்தருக்கும் காட்சி கொடுத்து அருளவே கதவு திறக்கப்பட்டது என்று கூறி, கதவு திறக்கப்பட்ட நிகழ்ச்சியின் பெருமையைச் சிவபெருமான் மீது ஏற்றிக் கூறியிருப்பது படித்து இன்புறத் தக்கதாகும். எனவேதான் பாடலில் 'சிவபெருமான் தனைக் கபாடம் மன் திறந்து காட்டுவன் நோக்குதற்கே' என்று பதிவு செய்துள்ளார்.

சிவபெருமானைக் குறிப்பிடும் பொழுது தாயிலி ஆகும் சிவபெருமான் என்று குறிப்பிட்டு, சிவபெருமான் தானே தோன்றியவன் என்பதைச் சிவப்பிரகாசர் பதிவு செய்தமை குறிப்பிடத் தக்கதாகும். இச்செய்தியை மாணிக்கவாசகர் திருச்சாழல் பதிகத்தில் கீழ்வருமாறு குறிப்பிடுவார்.

> கோயில் சுடுகாடு கொல் புலித் தோல் நல் ஆடை,
> தாயும் இலி, தந்தை இலி, தான் தனியன் காண் ஏடீ!
> தாயும் இலி, தந்தை இலி, தான் தனியன் ஆயிடினும்,
> காயில் உலகு அனைத்தும் கல் பொடி காண் சாழலோ! (பா.3)

மற்றும் திருஞானசம்பந்தர், 'தந்தையாரோடு தாயிலர் தம்மையே சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்' *(3 - 54- 3)* என்று குறிப்பிடுவார். இப்பகுதிகளைச் சிவப்பிரகாசரின் சிந்தனையோடு ஒப்பிட்டு மகிழலாம்.

இந்தப் பாடலில் திருமறைக்காடு கதவு திறக்கப் பட்டமையைச் சிவப்பிரகாசர் தத்துவக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, உருவகப் படுத்தியுள்ளார்.

அதாவது தான் எனும் ஒரு கோயிலில் அறிவாகிய வாயிலில் ஆணவமாகிய கதவை நிலைபெறத் திறந்து என்று கோயிலைத் தான் என்றும், வாயிலைத் திருநாமம் என்றும், கதவை ஆணவம் என்றும் உருவகப் படுத்தியுள்ளமையை அறியலாம். ஆன்மாவாகிய தான் எனும் கோயில் என்று குறித்திருப்பதை,

படமாடக் கோயில் பகவற்கு ஒன்றுஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா (திருமந்,பா. 1857)

என்று திருமந்திரம் கூறியிருப்பதோடு ஒப்பிட்டுக் காணலாம். வாயிலை உருவகப்படுத்தும் பொழுது, ஆறறிவாகிய நாமம் முன் கொண்டிருந்த வாயில் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுவது, தொல்காப்பியத்தில் உயிர்களை வகைப்படுத்தும் பொழுது,

ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவதுவே அதனொடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே (மரபியல், சூ.27)

என்று அறிவு என்ற பெயரில் (நாமம்) வகைப்படுத்திக் காட்டியிருப்பதோடு ஒப்பிட்டுக் காணலாம். சிவப்பிரகாசரும் இதை மனதில் வைத்துக் கொண்டுதான் நாமம் முன் கொண்டிருந்த என்று குறிப்பிட்டு, முற்காலத்திலேயே அதாவது தொல்காப்பியர் காலத்திலேயே அறிவாகிய பெயரில் உயிர்களை வகைப்படுத்தி யமையை நினைவுபடுத்துகிறார் எனலாம்.

வாயிலை மறைப்பது கதவாகும். எனவேதான் சிவப்பிரகாசரும் உயிராகிய கோயில் வாயிலை மறைத்திருப்பது ஆணவம் என்ற கதவு என்று உருவகப் படுத்தியுள்ளார். பாடலில் அமைந்துள்ள இத்தகைய உருவக அமைப்புகள் படித்து இன்புறத் தக்கனவாக அமைந்துள்ளன.

வீரசைவ நோக்கில் பாடலின் பொருட் சிறப்பு

பாடலில் இடம்பெற்றுள்ள உருவக அமைப்புகளை வீரசைவ இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. தான் என்பது கோயிலாகும் என்ற உருவகம் சிவப்பிரகாசரால், சிவஞானபாலய சுவாமிகளின் கலம்பகத்தில் கீழ்வருமாறு குறிக்கப்படுகிறது.

சிவனோ இவனென்று உலகமெலாந் தொழுந் தெய்வமன்றி
எவனோ தனியன் இதய ஆலயத்தில் இருப்பவனே (பா.15)

என்று சீவன் என்ற இதயத்தில் சிவன் குடியிருப்பான் எனக் குறிப்பிட்டிருப்பதை இங்கு நினைவு கொள்ளலாம். வீரசைவத்தில் ஆன்மா குடியிருக்கும் உடம்பை அதாவது அங்கத்தை லிங்கமாகக் கொள்ளுகிற கொள்கை இன்றியமையாததாகும்.

தன்சத்தி யால்ஆம் தலம் அங்க லிங்கமென
என்சத்தி பாதத்து எழுந்தருளிச் சொன்னானோ.
(சிவஞானபாலய சுவாமிகள் தாலாட்டு, கண்ணி3)

பாடலில் அறிவு ஆகிய நாமம் என்ற செய்தி வீரசைவத்தின் கொள்கையை அடியொற்றியதாகும். இதனைச் சிவப்பிரகாசர் சிவஞானபாலய சுவாமிகள் பிள்ளைத் தமிழ் காப்புப் பருவத்தில்,

அறிவுயிர் காண முடலொடு பொரிகள்
சிவமென உதவு தானியை (பா.10)

என்று குறிப்பிடுவதை நினைவு கொள்ளலாம். கதவை ஆணவம் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடும் பொழுது, மன் திறந்து என்று கூறுவார். வீரசைவத்தின் அடிப்படைக் கொள்கை, இறைவன் திருவருளால் ஞானாசிரியரின் வழிகாட்டுதலில் சீவனின் அறிவை மறைத்துக் கொண்டிருக்கும் ஆணவம் முற்றிலும் நீக்கப்படும் என்பதாகும். ஆணவம் முழுவதும் நீங்கும் என்ற வீரசைவக் கொள்கையை,

ஆதிஅன் றாகி ஒன்றாய் அளப்பஅரும் சத்தி யாகி
ஓதஅரும் பலவாம் ஆவி உணர்வுஎலாம் தடுப்பது ஆகி
பேதம்இல் அரும்சிற் சத்தி பிறழ்தரும் உயிர்க்கு நீங்கிப்
போதும்அத் தன்மைத்து ஆகும் புகல்இருள் ஆண வம்தான். (பா.319)

என்று கூவபுராணம் குறிப்பிடுவதை இங்கு ஒப்பிட்டுக் காணலாம். இவ்வாறு இப்பாடலில் வீரசைவத் தத்துவக் கொள்கைகள் உட்பொருளாக அமைந்துள்ளமையை உணரலாம்.

அருஞ்சொற் பொருள்

தான் - சீவனைக் குறிக்கும் பொதுச்சொல், நாமம் - பெயர், கபாடம் - கதவு, மன் - நிலையாக, நோயிலி - குற்றமில்லாத, சொல்இறை - சொல்லுக்கு அரசராகிய திருநாவுக்கரசர், நோக்குதற்கு - காண்பதற்கு.

பாடல் - 15

நோக்குஉறு நுதலோன் நின்இடை விருப்பால்
நூல்பகவு அன்ன நுண் மருங்குல்
வார்க்குவி முலை மென் மகளிர்தம் புலவி
மாற்றுவான் சென்றனன் என்றால்
கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்
கொண்டது ஏதுக்கு நீ புகலாய்
காக்க அரும் மதலை விழுங்கிய முதலை
கான்றிடத் தோன்றும் நாவலனே.

இப்பாடல் சுந்தரமூர்த்தியாரைப் போற்றுகின்ற விருத்தப்பா ஆகும்.

முன்னை உரையாசிரியர் உரை

ஒருவராலும் காப்பாற்றுவதற்கு இயலாத பிள்ளையை எந்த முதலை விழுங்கியதோ, அதே முதலை வெளிப்பட்டு கக்குவதற்கு வந்து தோன்றும் வன்மையை உடையவனே! பார்ப்பதற்குப் பொருந்திய நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமான் உம்மிடை வைத்த அன்பினால், நூலின் பிளவை ஒத்த இடையையும், நீண்டு குவிந்து அமைந்த முலைகளையும் உடைய மென்மைத் தன்மை வாய்ந்த, பரவை நாச்சியார் ஊடலை மாற்றுவதற்குத் தானே மகிழ்வோடு சென்றனன் என்று சொல்லுவாராயின், ஏயர்குடித் தலைவராகிய கலிக்காம நாயனார் இதைக் காரணமாக வைத்து வயிற்றில் குத்திக்கொண்டது ஏன்? நம்பியாரூரரே சொல்வீராக.

பாடற்பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடலில் சுந்தரருக்காகச் சிவபெருமான் பரவையாரிடம் இருமுறை தூது சென்றமை குறிக்கப் பெற்றுள்ளது. மேலும் அவ்வாறு இறைவரைத் தூது விட்டது தவறு என்றும், அத்தவறைச்

செய்த சுந்தரர் தன் எதிரில் வந்தால் தான் மாய்ந்து போவேன் என்று ஏயர்கோன் கலிக்காமர் தன்னைக் குறுவாளால் குத்திக் கொண்டு இறந்த செய்தி கூறப் பெற்றுள்ளது. பாடலில் கலிக்காமர் ஏன் வயிற்றில் குத்திக்கொண்டார் என்ற கேள்வி உள்ளதே தவிர, அதற்குரிய விடைக்குக் குறிப்பாக எந்தச் சொல்லும் இல்லை. இதற்குரிய விடையைப் பெரியபுராணச் சேக்கிழார் மூலமே அறிய முடிகிறது. கலிக்காமர் குத்திக் கொண்டதற்குக் காரணத்தைச் சேக்கிழார் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

> **நாயனை அடியான் ஏவுங் காரியம் நன்று! சால**
> ஏயும்என் றிதனைச் செய்வான் தொண்டனாம்! என்னே!பாவம்!
> பேயனேன் பொறுக்க ஒண்ணாப் பிழையினைச் செவியாற் கேட்ப
> தாயின **பின்னும் மாயா திருந்ததென் ஆவி என்பார். (பா. 384)**

என்று சுந்தரன் இறைவனைத் தூது போக்கினான் என்பதைக் கேட்டும் உயிர் வாழ்கிறேனே என வருந்திய கலிக்காமர், தன் வயிற்றுவலியைத் தீர்ப்பதற்குச் சுந்தரர் நேரில் வருகிறார் என்று கேள்விப்பட்டவுடன், நேரில் பார்ப்பதற்கு வருந்தித் தன்னையே குத்திக்கொண்டு இறந்தார் என்பதைச் சேக்கிழார் குறிப்பிடும் பொழுது, சுந்தரர் வந்து நோயைத் தீர்ப்பதன் முன் சூலை நோயை வயிற்றோடு ஒழிப்பேன் என்று கூறி , உடைவாளால் குத்திக் கொண்டு இறந்தார் என்று விடை தருகிறார்.

பாடலில் மகளிர் புலவி மாற்றுவான் என்ற தொடர் இடம் பெற்றிருப்பது நயம் காணும் தொடராகும். சிவப்பிரகாசர் பரவையின் ஊடலைத் தீர்த்தார் என்று எழுதாமல் புலவியை மாற்றினார் என்று குறிப்பிட்டு, ஊடுதல் காமத்திற்கு இன்பம் என்று வள்ளுவப் பேராசான் குறிப்பிடுவது போல ஊடலை மாற்றிச் சுந்தரருக்கும் பரவையாருக்கும் இன்பம் கிடைக்குமாறு செய்தார் என்று குறிப்பிடுகிறார். நூலின் பிளவு போன்ற இடையை உடைய பரவையார் என்பது, பெண்ணின் இடையின் மென்மையைக் குறிப்பிடுகிற தொடராகும்.

வீரசைவ நோக்கில் பாடலின் பொருட் சிறப்பு

சிவபெருமான் நெற்றியில் கண்ணை உடையவன் என்பதை வீரசைவம் ஏற்றுக் கொள்கிறது. எனவேதான் சிவபெருமான் சிவஞான பாலய சுவாமிகளாகிய மானுடச் சட்டை தாங்கிப்

பூவுலகில் காட்சி தந்தார் என்பதைச் சிவப்பிரகாசரின் பாடல்களில் பரக்கக் காணலாம். எடுத்துக் காட்டாக,

தருணமதிற் சீறுந் தனிவிழிகாட் டாமல்
கருணை குடியிருக்குங் கண்களொடு வந்தானோ.
(சிவஞானபாலய சுவாமிகள் தாலாட்டு, கண்ணி81)

பாடலில் அந்தணச் சிறுவனுடைய உயிரைக் குறிக்கும் பொழுது, காக்கரும் உயிர் என்று குறிக்கப் பெற்றுள்ளது. உயிரைப் பெற்ற சீவன் அதனைத் தன்னால் காக்க முடியாது, இறைவன்தான் உயிரைக் காத்து உடல் நிலையில் பிறக்கவும் இறக்கவும் செய்கிறான் என்பது வீரசைவக் கொள்கையாகும். இதனை வலியுறுத்தவே பாடலில் காக்கரும் என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

அருஞ்சொற் பொருள்

நோக்குறு - பார்ப்பதற்குரிய கண்ணை, நுதலோன் - நெற்றியோன், பகவு - பிளவு, மருங்கு - இடை, புலவி - ஊடல், மதலை - குழந்தை, கான்கிட - கக்கிட.

பாடல் - 16

வலமழு உயரிய நலம்மலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துஉலகு உவப்ப உகந்த மாணிக்க
வாசகன் எனும்ஒரு மாமழை பொழிந்த
திருவாசகம்; எனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனம்எனும் ஒண்குளம் புகுந்து
நாவுஎனும் மதகில் நடந்து கேட்போர்
செவியெனும் மடையிற் செவ்விதின் செல்லா
உளம்எனும் நிலம்புக ஊன்றிய அன்பாம்
வித்தில் சிவம்எனும் மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே.

இப்பாடல் மாணிக்கவாசகரைப் போற்றிய அகவற்பா ஆகும்.

முன்னை உரையாசிரியர் உரை

வலப்பக்கத்தே மழுவாயுதத்தை உயர்த்தியும், தூய்மை நிறைந்த கங்கையாறு கலப்பதற்கு இடம் கொடுத்தும் நின்ற நல்ல சிவம் எனும் கருணைக்கடலில் நீரை முகந்து, உலகம் எலாம்

மகிழுமாறு மேலே உயர்ந்த மாணிக்கவாசகன் என்ற ஒப்பற்ற கரிய மேகமானது , பொழிந்த திருவாசகம் என்னும் மழை வெள்ளம் மெல்லச் சென்று விரும்பிப் பலமுறை படிக்கும் பண்பாளர்களின் மனம் எனும் பெருங்குளத்தில் புகுந்து பின்னர், அவர்கள் நாக்கு என்னும் மதகின் வழியாக வெளிப்பட்டுக் கேட்கின்றவர்களின் செவி என்று சொல்லப் பெறும் மடைகளின் வழியாக, முறையே உள்சென்று, அவர்கள் உள்ளம் என்னும் நிலத்தில் பாய்ந்தது. பாயவே, அங்கு முன்னர் பதிக்கப் பெற்றுள்ள அன்பு என்னும் விதையில் சிவம் என்ற மென்முளை தோன்றியது. அது வளர்ந்து கருணை என்ற மலரை விரித்தது. பிறகு விளங்கும் தன்மைத்தாகிய முத்தி என்னும் உண்மைப் பயனாம் கனியைத் தந்தது.

இப்பாடல் ஒரு உருவகப் பாடலாகும். எனவே உரையாசிரியர் மேலும் உரையெழுதும் பொழுது கீழ்வருமாறு தம் உரையில் வகுத்துக் காட்டியுள்ளார்.

மாணிக்கவாசகர்	- மேகம்
சிவன்	- கருணைக்கடல்
மழுவாயுதம்	- கடலில் தோன்றும் சூரியன்
கங்கை	- கடலில் சென்று கலக்கும் நதி
திருவாசகம்	- மேகம் பொழிந்த மழைநீர்
ஓதுவார் மனம்	- ஏரி
ஓதுவார் நாக்கு	- மதகு
கேட்போர் செவி	- மடை
கேட்போர் உள்ளம்	- நிலம்
அன்பு	- நிலத்தில் முன்னமே ஊன்றியிருக்கும் விதை
சிவம்	- முளை
கருணை	- மலர்
முத்தி	- பழம் (முத்தி)

பாடற் பொருளின் நயவுரை [பழ. முத்தப்பன்]

ஆன்மீகப் பெரியோர்களின் மனதைப் பரவசப் படுத்தும் உருவகப் பாடல் இது. சிவப்பிரகாசரின் கற்பனைக்கு மிகச் சிறந்த

எடுத்துக்காட்டாக விளங்குவதும் ஆகும். இந்த உருவகப் பாடலோடு திருநாவுக்கரசரின் கீழ்வரும் பாடலை ஒப்பிட்டுக் காண்பது சிறப்புடைத்தாம்.

மெய்ம்மையா முழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனு நீரைப் பாய்ச்சித்
தம்மையுள் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையு ணிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே. (4 76 2)

சிவப்பிரகாச சுவாமிகள் இப்பாடலை அடியொற்றி நிலத்தில் விதைக்கின்ற வித்தாக அன்பையும், விளையும் பயனாக வித்து எனும் சிவகதிப் பழத்தையும் உருவகமாகக் குறிப்பிட்டிருப்பது சிறப்புடைத்தாம்.

சிவபெருமானின் கருணைக் கடலில் வந்து சேருகின்ற நதியாக கங்கையைச் சிவப்பிரகாசர் உருவகித்திருப்பது மிகப் பொருத்தமாகும். ஆற்று வெள்ளம் காடுகள் உள்ளிட்ட நிலத்தை அழித்து, மரம், செடி, கொடி இவற்றை அடித்துக்கொண்டு ஓடிவருவது இயற்கை. அதுபோலக் கங்கை ஆறு சிவபெருமான் அதனைத் தடுத்து ஏற்றுக் கொள்வதற்கு முன்னால், உலகத்தை அழிப்பதற்குப் புறப்பட்டு இடையில் இருந்த உலகக் குற்றங்களை எல்லாம் அழித்துக் கொண்டு வருகிறது. அதன் அழிவை நோக்கி பகீரதனின் வேண்டுகோளுக்கு இணங்கச் சிவபெருமான் தனது தலையில் கங்கையாற்றைத் தடுத்து நிலைபெறுமாறு செய்தார். எனவே ஆற்று வெள்ளத்திற்குக் கங்கையாற்றை உருவகப் படுத்தியிருப்பது புராண வரலாற்றோடு ஒப்பிட்டுக் காணக் கூடியதாகும். அதுபோல, மாணிக்க வாசகரை மேகமாகவும், திருவாசகத்தை மேகம் பொழிந்த மழைநீராகவும் சிவப்பிரகாசர் உருவகப் படுத்தியிருப்பது நினைந்து இன்புறத் தக்கதாகும்.

திருப்பெருந்துறையில் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற காரணத்தால் மாணிக்கவாசகர் திருவாசகத்தைப் பாடியருளினார். இதனைச் சிவப்பிரகாசர் உள்ளத்தில் கொண்டு சிவத்தின் அருளாகிய நீரை உண்டு எழுந்த மேகமாக மாணிக்கவாசகரை உருவகப் படுத்தி, மேகத்தில் இருந்து ஒழுகுகின்ற நீராகத் திருவாசகத்தை உருவகப் படுத்தியிருக்கிறார். மேகம் மழைநீரை எல்லா நேரத்திலும் பெய்யாது, உலகத்திற்குரிய காலத்தில் மழையைப் பொழியும். அதுபோலத் திருவாசகமும் மாணிக்க

வாசகரின் ஆன்மீகப் பயணத்தால் தான் பாடப்பெற்றதே தவிர, நினைக்கும் பொழுதெல்லாம் பாடப்பெற்றது அல்ல. இவ்வாறு ஒவ்வொரு உருவகத்தையும் சிவப்பிரகாசர் எண்ணி எண்ணி மகிழ்ந்து இப்பாடலில் பதியவைத்துப் படிப்போரின் உள்ளத்திலும் பரவசப் படுத்தியிருக்கிறார்.

வீரசைவ நோக்கில் பாடற் பொருள்

பாடலில் வலமழு என்ற தொடர் சிவபெருமான் கையில் ஏந்தியிருக்கும் வெற்றி பொருந்திய மழுவைக் குறிக்கிறது. இம் மழுவைப் பற்றிச் சிவப்பிரகாசர் திருவெங்கை உலாவில் கீழ்வருமாறு குறிப்பிடுவார்.

.... அண்ணல்
வழுவை யடர்த்து வயம்கொள்எறி பத்தர்
மழுவை உவக்கும் மழுவினான் (கண்ணி, 7 8)

இவ்வரிகளின்படி, சிவபெருமான் எறிபத்த நாயனாரின் மழுவாயுதத்தைத் தனக்குரிய ஆயுதமாகக் கொண்டார் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுவது, வீரசைவ ஞானிகள் அடியவர்களிடம் காட்டும் கருணையாகிய இயல்பை உணர்த்துகிறது. எனவேதான் நால்வர் நான்மணிப் பாடலில் வெற்றி பொருந்திய மழுவாயுதம் என்ற பொருளில் வலமழு என்று குறிப்பிடுகிறார்.

கேட்போர் செவி எனும் மடையில் என்று பாடலில் இடம் பெற்றிருக்கின்ற தொடர் திருவாசகத்தைக் கேட்கின்றவர்களின் செவியானது, நீர் பகுத்து ஓட வெட்டப் படுகின்ற மடை என்ற பொருளைத் தருகிறது. திருவெங்கை உலாவில் இறைவனின் செவி பற்றிக் குறிப்பிடுகின்ற சிவப்பிரகாசரின் எண்ணத்தை இப்பகுதியோடு ஒப்பிட்டுக் காணலாம்.

.... நினையாமல்
வேத உணவு வெறுத்துப் புகழ்மூவர்
ஓதுதமிழ் ஊணுக் குழல் செவியான் (கண்ணி.26, 27)

என்ற பகுதியின் மூலம் சிவப்பிரகாசர் வேதத்தைக் காட்டிலும் திருமுறைகள் கேட்பதில் சிவபெருமான் விருப்பமுடையவர் என்று குறிப்பிடுவதை இங்கு நால்வர் நான்மணிமாலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, வேதத்தைக் கேட்கும் செவியைக் காட்டிலும் வீரசைவப் பெருமக்கள் அங்கத்தில் அணிந்திருக்கும் லிங்கத்தை

வழிபடுகின்ற பொழுது, வேத ஒலிகளுக்கு முக்கியத்துவம் தராமல், திருவாசகத்திற்குப் பெரிதும் முக்கியத்துவம் தருவதைச் சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார் எனலாம். இவ்வாறு நால்வர் நான்மணிமாலையில் மணிவாசகரைப் பற்றிய இவ் உருவகப் பாடலைப் படிக்கும் பொழுது,வீரசைவ வழிபாட்டு முறையைச் சிவப்பிரகாசர் உளங்கொண்டு பாடியிருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

அருஞ்சொற் பொருள்

நதி தலைச் சேர்ந்த - கங்கை நதி சென்று கலந்த, மாமழை - மிகுந்த மழை, ஒண்குளம் - பெருங்குளம், மடை - வாய்க்கால், வித்து - விதை, முத்தி - வீட்டுப்பேறு.

பாடல் – 17

பயனாகும் நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயிலாகும் நோய்க்கு மருந்தாம் - உயிராகும்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன் சம்
பந்தன் இயம்புதிருப் பாட்டு.

இப்பாடல் திருஞானசம்பந்தரைப் போற்றிய வெண்பாப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

சீர்காழியில் அவதாரம் செய்த நாவலராகிய திருஞான சம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாட்டுக்கள் நன்மை பொருந்திய ஆண் பனைகளுக்குப் பெண் பனைகளாக இருந்து பயன் உதவுமாறு செய்யக் கூடியனவாகும். நஞ்சிற்கு மயிலாக நின்று அழிக்கும், நோய்க்கு மருந்தாகும், உருவம் சிதைந்து மாறிவிட்ட எலும்புக்கு உயிராகும்.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் திருஞானசம்பந்தர் பாடியருளிய பாடல்களால் ஏற்பட்ட அருஞ்செயல்களைக் குறிப்பிடுவதாகும். திருவோத்தூரில் சிவனடியார் வைத்து வளர்த்த பனைமரம் பயன்தராத பொழுது, ஞானசம்பந்தப் பெருமானிடம் அவ்வடியார் வேண்ட, சம்பந்தர் இறைவனை நினைந்து பாடிய பாடல் அவ் ஆண்பனையைப்

பெண்பனையாக மாற்றிப் பயனைத் தந்ததாகும். அதுபோல, வணிகனாம் தாமனின் விடத்தை நீக்கி அவனை உயிர் பெறச் செய்ததுமாகும். மேலும், பாண்டியன் அரிமர்த்தனின் வெப்புநோய் தீர மருந்தாகவும் அமைந்தது. மயிலாப்பூர் வணிகனின் மகள் பாம்பு கடித்து இறந்தவளின் எலும்பை மீண்டும் பெண்ணாக உருவெடுக்க வைத்ததுமாகும் என்று சிவப்பிரகாசர் திருஞானசம்பந்தரின் பாடலுக்கு ஏற்றம் தந்துள்ளார்.

இப்பாடலில் சம்பந்தரின் பாடல்கள் தந்த பயன்களை இறைவன் தொழில்களோடு ஒப்பிடுவது இயல்பாகும். அதன்படி ஆண்பனையைப் பெண்பனையாக்கியது இறைவனின் அருள்தொழிலைக் குறிப்பதாகும். விடத்திற்கு மயிலாகும் என்பது அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். பாண்டியனின் சுரத்தை நீக்கிக் காத்தது காத்தல் தொழிலைக் குறிப்பதாகும். எலும்பைப் பெண்ணாக்கியது படைத்தல் தொழிலைக் குறிப்பதாகும் எனக் கொள்ளலாம்.

ஆண்பனையைப் பெண்பனையாக்கி, பெண் பனையால் பனம்பழம் கிடைத்ததைச் சிவப்பிரகாசர் பயன் என்று குறிப்பிடுகிறார். விடத்திற்கு மயில் என்பது சிந்தனைக் குரியதாகும். பாம்பிற்குப் பகையாக விளங்குவது கீரி, கருடன், மயில் என்ற மூன்றாகும். இதில் கீரி பாம்பின் உடலைப் பற்றி அழிக்கும். கருடனை நினைத்தால் பாம்பு அழியும். இதில் மனிதர் தம்மைக் கருடனாகப் பாவித்து பாம்பு விஷத்தை நீக்க முடியும். ஆனால் மயிலோ இவ்விரண்டைக் காட்டிலும் தன்னைக் கொத்தவரும் பாம்பை நினைத்தாலே அழிந்துவிடும் என்பதால், திருஞானசம்பந்தரின் இப்பாடல் ஞானசம்பந்தரின் தாமன் பிழைக்கவேண்டும் என்ற நினைவால் பாடப் பெற்று விடத்தை நீக்கியதாகும். எனவேதான் பாடலில் மயிலுக்குச் சிவப்பிரகாசர் சிறப்பிடம் கொடுத்துள்ளார். எலும்பைப் பெண்ணாக்கியது ஞானசம்பந்தர் பாடல் செய்த நிகழ்வுகளுக் கெல்லாம் முதன்மையானதாகும். எனவேதான் சிவப்பிரகாசர் எலும்பாக மிஞ்சிய நிலையைச் சிந்தும் எலும்பாகக் குறித்துள்ளார்.

இத்தகைய அதிசயங்களை எல்லாம் செய்த பாடல்களைத் தந்தவர் திருஞானசம்பந்தர் என்பதால் சிவப்பிரகாசர் பாடலில், சிரபுரத்து நாவலன் என்று குறிப்பிடுகிறார்.

வீரசைவ நோக்கில் பாடற்பொருள்

திருஞானசம்பந்தரின் இப்பாடலோடு, சிவப்பிரகாசர் பிறிதொரு இடத்தில் பாடிய பாடலை ஒப்பிட்டுக் காணலாம்

இளைக்கு மிடியற்கு உறுபொருளாம்
இறைவர்க்கு அரசாம் கூற்றுவனை
விளிக்கும் பிணிக்கு மருந்தாகும்
விடத்திற்கு அருஞ்சீர்க் கலுழன்ஆம்
வளைக்கும் பகைக்குப் படைஆகும்
மலடர்க்கு அரியமகவாகும்
திளைக்கும் கருணைச் சிவஞான
தேவன் திருக்கைத் திருநீறே.

(சிவஞான பாலய தேசிகர் கலம்பகம் 44)

பாடலின் பொருள்

கருணை மிக்க சிவஞான தேசிகர் உவந்து அளிக்கும் திருநீறு உடலை இளைக்கச் செய்யும். வறுமையுற்றோர்க்கு மிக்க செல்வத்தை அளிக்கும்.

மண்ணாளும் அரசர்க்கு அரசாட்சியைச் சிறப்பிக்கும். எமனை அழைக்கும் பிணிக்குக் கொடுக்கும் மருந்தாகும். பாம்பின் விஷத்திற்குக் கருடனை ஒக்கும். பகைக்குப் படையாகும். மலடருக்குக் குழந்தை நல்கும் என்பதாகும்.

இதன்படி நால்வர் நான்மணிமாலைப் பாடலை நோக்கினால் ஞானசம்பந்தர் அருளிய அருளாகிய பாடலால் எவ்வாறு பல நன்மைகள் நிகழ்கின்றனவோ அதுபோல, வீரசைவ ஞானியாகிய சிவஞானி அடியவர்களுக்கு அகமகிழ்ந்து அளிக்கின்ற திருநீறாகிய அருள் பல பயன்களைத் தருகிறது.

எனவே தேவாரப் பாடல்களுக்கு ஒப்ப வீர சைவச் சிவஞானியின் திருநீறு தக்க பயன்களைத் தருகிறது எனலாம்.

அருஞ்சொற் பொருள்

பனை - பனைமரம், விடம் - விஷம், மயில் - பறவை, சிந்து - எஞ்சிய, சிரபுரம் - சீர்காழி, நாவலன் - மன்னன், இயம்பு - அருளிய, திருப்பாட்டு - தேவாரம்.

பாடல் - 18

பாட்டான் மறைபுக ழும்பிறை சூடியைப் பாடிமகிழ்
ஊட்டா மகிழ்சொல் விறைவனைப் பாடி யுவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்அவன் போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே.

இப்பாடல் திருநாவுக்கரசரைப் போற்றிய விருத்தப்பா ஆகும்.

முன்னை உரையாசிரியர் உரை

வேதங்கள் பாடிப் பிறை சூடியவனாகிய சிவபெருமானைத் தொண்டு செய்து உவப்பித்தலோடு, பாடியும் மகிழ்ச்சியை ஊட்டி அதனால் மகிழ்ந்து கொண்டிருக்கும் சொல்வேந்தராகிய திருநாவுக்கரசு சுவாமிகளை, அவர் போன்றே பாடி மகிழ்ச்சியை உண்டாக்க விரும்பிய ஒருவன், வன்மை மிகுந்த பெரிய கல் ஒன்றைத் தன் உடலில் பிணித்துக் கொண்டு, அத் திருநாவுக்கரசைரைப் போன்றே யானும் மிதப்பேன் என்று சொல்லிக் கொண்டு, மறித்து வீசும் அலைகளை உடைய நீண்ட கடலில் விழுவதற்காகப் போவான்.

பாடல் பொருள் நயம் [பழ. முத்தப்பன்]

வீரசைவ நோக்கில் இப்பாடலுக்குப் பொருள் சொல்ல விழைவதால், முன்னை உரையாசிரியர் கூறிய பொருளிலிருந்து சிறிது வேறுபட வேண்டியுள்ளது. அதாவது நாவுக்கரசருக்கு மகிழ்ச்சி ஊட்ட வேண்டிய ஒருவன் என்ற முன்னவர் உரைக்குப் பதிலாக, நாவுக்கரசருக்கு மகிழ்ச்சி ஊட்ட விரும்பிய சிவப்பிரகாசரே கல்லைக் கட்டிக் கொண்டு கடலில் விழப் போதுவனே என்று பாடலுக்குப் பொருள் கொள்ளலாம் எனத் தோன்றுகிறது.

எனவே, சிவபெருமானைப் பாடலால் மகிழ்ச்சி ஊட்டிய நாவுக்கரசரைப் போலத் (சிவப்பிரகாசர்) தானும் திருநாவுக்கரசரை மகிழ்ச்சியூட்ட அவர்மீது பாடல்களைப் பாடவேண்டும் என எண்ணுகிறார். அவ்வாறு பாடவேண்டுமானால் இறைவன் திருவருள் வேண்டும். இறைவன் திருவருள் கிடைக்க நாவுக்கரசருக்குக் கிடைத்த தண்டனைகள் தமக்கும் கிடைக்க வேண்டும் என்று சிவப்பிரகாசர் எண்ணுகிறார். அவ்வாறு தனக்குத்

தண்டனை தரப் பகைவரோ, மன்னரோ இல்லை என்பதால் தானே தண்டனையை ஏற்றுக் கொள்வது போல, கல்லைக் கட்டிக் கொண்டு கடலில் விழ எண்ணுகிறார் என்பதாக இப்பாடலின் கருத்தைக் கொள்ளலாம்.

எனவே இப்பாடலில் சிவப்பிரகாசர் கல்லை கட்டிக்கொண்டு கடலில் விழப் போதுவனே என்று குறிப்பிடுவதால், தன் உடம்பை வெறுக்கிறார் என்பதும், சிவஞான பாலய சுவாமிகளால் ஞானம் பெற்ற தமக்கு உடம்பு மிகை என்று எண்ணுகிறார் என்பதும் பெறப்படுகிறது. இத்தகைய கருத்து சிவப்பிரகாசரால் பிற இடங்களிலும் குறிக்கப் பெறுகிறது. எடுத்துக்காட்டாகப் பிரபுலிங்கலீலையில் இடம்பெற்ற இரண்டு பாடல்களைப் பதிவு செய்யலாம்.

வீரசைவ நோக்கில் பாடல்

இப்பாடலில் உடம்பு நிலையாமை இடம் பெறுகிறது. சிவப்பிரகாசர் ஒரு ஆன்மா உடம்பு பெற்றால் தொண்டு செய்ய வேண்டும். தொண்டு செய்யாத உடம்பு கீழ்மை உடையதாகும். தொண்டு செய்யும் உடம்பே சிறப்புடையதாகும் என்பதைக் கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

எய்தற் கரிய யாக்கைதனக்
கெய்திற் றென்றால் அதுகொண்டு
செய்தற் கரிய அறங்கள்பல
செய்து துயர்கூர் பிறவியினின்(று)
உய்தற் கொருமை பெறவெண்ணாது
உழல்வோன் உடம்பு பொற்கலத்தில்
பெய்தற் குரிய பால்கமரில்
பெய்த தொக்கும் என்பரால். **(கொக்கிதேவர் கதி,பா.12)**

இப்பாடல் ஒருவன் தனக்குக் கிடைத்தற்கரிய உடம்பு கிடைக்கப் பெற்றால், செய்தற்கரிய அறச்செயல்களைச் செய்து, பிறவிப்பிணியில் இருந்து நீங்க வேண்டும் என்று பொருள் கூறுவதோடு, அறச்செயல்களைச் செய்யவில்லை என்றால், அவ்வுடம்பு பயனற்றதாகி விடும்,

மீண்டும் மீண்டும் பிறக்கவேண்டி வரும் என்பதைக் குறிப்பிட, அறத்தொண்டு செய்யாத உடம்பிற்கு ஒரு அற்புதமான

உவமையையும் இப்பாடல் தருகிறது. அதாவது தொண்டு செய்யாத உடம்பு, நல்ல பாத்திரத்தில் பெய்து வைக்கவேண்டிய பாலை, பாலைநிலத்தில் வெடிப்புகளுக்கு இடையே ஊற்றியதைப் போன்று பயனற்றதாகும் என்று குறிப்பிடுகிறது.

மற்றொரு இடத்தில் ஞானாசிரியரின் உபதேசத்தைப் பெற்ற ஒரு ஆன்மா, தன்னுடைய உடம்பைப் போற்றுவதில்லை. ஞானாசிரியரின் உபதேசத்தால் தன் ஆன்மாவிற்கு உடம்பானது மிகையாகும்.

எனவே ஞானாசிரியரின் உபதேசம் பெற்ற ஆன்மா, உடம்பை வெறுத்துவிடும் என்பதை வலியுறுத்தி, உடம்பின் நிலையாமையைச் சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார். அத்தகைய பாடலும் இங்கு சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளக் கூடியதாகும்.

ஒண்த ரைக்கண் ஒழிவில் அருள்உருக்
கொண்ட டுத்த குருவரு ளால்தனைக்
கண்ட மெய்த்தவன் காயம் தனைஅனம்
உண்ட நெட்டிலை ஒப்ப விடுப்பனால். (முத்த.அம்.கதி,பா. 11)

இப்பாடல், இந்த நிலவுலகத்தில் அருள் வடிவு கொண்டு, உபதேசிக்க வந்த குருவால் தன்னை அறிந்து கொண்ட தவமுடையவன், இந்த உடம்பைச் சோறு உண்ணப் பயன்பட்ட நீண்ட இலையைச் சோறு உண்டபின் தூக்கி எறிவது போல, உடம்புப் பற்றை விட்டு விடுவான் என்று குறிப்பிடுகிறது. இப்பாடலில் இடம்பெற்ற உவமை நினைந்து நினைந்து இன்புறத் தக்காகும்.

இத்தகைய உவமையை முன் பின் கவிஞர்கள் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர்தாம். சிவஞானம் பெற்றவர் தம் உடம்பை வெறுப்பதற்கு இச்சிறப்பான உவமையைப் பயன் படுத்தியுள்ளார்.

அருஞ்சொற் பொருள்

மறைபுகழும் - வேதங்கள் போற்றுகின்ற, பிறை சூடியை - இளம் பிறைச்சந்திரனை அணிந்த சிவபெருமான், சொல்இறைவன் - நாவுக்கரசர், உவப்புறுக்க- மகிழ்ச்சியூட்ட, வேட்டால் - விருப்பத்தால், ஊட்டா -கட்டி.

பாடல் - 19

போதம் உண்ட பிள்ளை என்பு பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர் கல் மிதப்ப உய்த்ததோ
வாய் திறந்து முதலை கக்க மகனை நீ அழைத்ததோ
யாது நம்பி அரிது நன்று எனக்கு இயம்ப வேண்டுமே.

இப்பாடல் சுந்தரமூர்த்தியாரைப் போற்றிய பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

நம்பியாரூரரே, ஞானப்பாலை உண்ட ஞானசம்பந்தப் பெருமான் எலும்பை இரு காதுகளோடு சென்று போரிடும் கண்களை உடைய அழகிய பெண்ணாகச் செய்தார். அது போலச் சொல்லின் செல்வர் எனப் போற்றப் பெறும் திருநாவுக்கரசர் தன்னைக் கட்டிப் போடப் பெற்ற கல்லையே தெப்பமாக அமைத்து விருப்பத்தோடு செலுத்தினார். அதுபோல் முதலை யானது தான் உண்ட மகனை வாய்திறந்து தானே கக்குமாறு செய்து தாங்கள் அந்த மகனை அழைத்தீர்கள். இம்மூன்று தொழில்களுள் எத்தொழில் அரியது என்பதை எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

பாடல் பொருளின் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் தேவாரம் பாடிய மூவர்களின் செயற்கரும் செயல்களை எடுத்துக் கூறுவதாகும். சிவப்பிரகாசர் மூவரின் செயல்களை எடுத்துக்கூறி, அச்செயல்களில் மிகவும் அரிய செயல் எது? என்ற கேள்வியோடு நிறுத்தி விடுகிறார். இருப்பினும் செயல்களை எண்ணிப் பார்க்கின்ற பொழுது, சுந்தரமூர்த்தியாரின் செயல் மற்ற இருவரின் செயல்களைக் காட்டிலும் அரிய செயலாக அமைந்திருப்பதை உணரலாம்.

எவ்வாறு எனில், ஞானசம்பந்தர் இறந்த பெண்ணை மீண்டும் பிறக்கச் செய்வதற்கு அந்தப் பெண்ணின் எலும்பு இருந்தது. எலும்பைக் கொண்டு பெண்ணுருவம் படைக்கப் பெற்றது. அதுபோல நாவுக்கரசர் கடலில் மிதப்பதற்கு அவரோடு கட்டி எறியப் பெற்ற கல் இருந்தது. கல்லைத் தெப்பமாக ஆக்கி அவர் மிதந்தார். ஆனால் சுந்தரமூர்த்தியார் முதலை உண்ட பாலகனை மீட்டுத் தருவதற்கு குளக்கரை மட்டுந்தான் இருந்தது. அதில் தண்ணீர் இல்லை, சிறுவனை உண்ட முதலையும் இல்லை

என்றாலும் தண்ணீரை வரவழைத்து, அதில் முதலையை வரவழைத்து, முதலையினுடைய வாயினைத் திறக்க வைத்து, உண்ட பொழுது சிறுவனாயிருந்தவனைப் பல ஆண்டுகள் கழித்து, எப்படி வளர்ந்திருப்பானோ அதே வளர்ச்சியில் முதலை கக்க வரவழைத்த சிறப்பு அவரின் பாடல்களுக்கு ஆற்றல் இருந்தது. எனவே எந்த மூலாதாரமும் இல்லாமல் முதலை வாயின் வழியே சிறுவனை அழைத்த சுந்தரரின் செயல் சிறப்புடையதாகப் பெறப்படுகிறது.

வீரசைவ நோக்கில் பாடல்

இப்பாடலில், அருளாளர்களின் அரிய செயல்களான சித்து விளையாடல்கள் கூறப்படுகிறது. சித்து விளையாடல்கள் பற்றி சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத் தமிழில் செங்கீரைப் பருவத்தின் ஐந்தாவது பாடல், சிவஞானியின் சித்துச் செயல்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. அதற்கு உரைஎழுதிய பெரும்புலவர் வீ.குமாரசாமி ஐயா அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற செய்தியை இங்கு நினைவுகூறல் தகும்.

'ஞானிகள் சித்திகளை எதிர்பார்த்துச் செய்வதில்லை. சித்திகள்தான் ஞானிகளைத் தாங்கள் செய்யுமாறு எதிர்பார்க்கும். இருப்பினும் ஞானிகள் தற்போத முனைப்பின்றி திருவருள் வயப்பட்டு நின்று சித்திகளைச் செய்வர். அந்த அடிப்படையில் இப்பாடல் சிவஞானியின் சித்திகளைக் கூறுகிறது" என்று குறிப்பிடுவார்.

எனவே வீரசைவ மரபில் அருளாளர்களின் சித்திகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன ஆகும். அந்த முறையில் நால்வர் நான்மணி மாலைப் பாடலில் இடம்பெற்றிருக்கும் மூவரின் சித்திகளைப் போலச் சிவஞான பாலய சுவாமிகளும் செய்த சித்திகளைப் பிள்ளைத்தமிழ்ப் பாடல் குறிப்பிடுகிறது. அப்பாடல்

பெருமுடக் கால்நிமிர்ந்தது கூன் நிமிர்ந்தது
பிணிகள் பல பல போயின
பிடித்திருந்து எவராலும் அகலாது துயர்செய்த
பேய் அகன்றிட்ட தம்மா.
அருமகப் பெற்று உவந்தனம் மிடி அகன்றனம்
அகிலம் புரக்க வரும் ஓர்

அரசு எய்தினம் சென்று வென்று எய்துதற்குமிக
அரிய பகை வென்று எய்தினம்
வருமடக்கொடி மாதர் கண்வலைப் பட்டதுயர்
மாற்ற அறநெறி கண்டனம்
மலமாயை கருமங்கள் நிலை கண்டிலோம் என்னும்
மக்கள் ஒலிவிண் அளப்ப
திருமடத்து அரசிருந்து அருள்செய் விழியாள
செங்கீரை யாடி யருளே. (சி.பா.தே.பி.தமிழ், பா..5)

என்ற இப்பாடல் சிவஞானபாலய ஞானிகளின் சித்திகளை வரிசைப் படுத்துவதால், வீரசைவ மரபில் சித்தர் செயல்கள் ஏற்றுக்கொள்ளப் பெறுவதால், சிவப்பிரகாசரும் நால்வர் நான்மணிமாலையில் தேவராரம் பாடிய மூவரின் சித்துச் செயல்களைக் குறிப்பிட்டிருக்கிறார் எனலாம்.

அருஞ்சொற் பொருள்

போதம் - ஞானப்பால், பிள்ளை - ஞானசம்பந்தர், என்பு - எலும்பு, மாது - பெண், சொல்லின் மன்னர் - திருநாவுக்கரசர், உய்த்தது - செலுத்தியது, மகன் - அந்தணச் சிறுவன், நம்பி - சுந்தரமூர்த்தி.

பாடல் - 20

வேண்டும் நின்அடியார் மெய்யன்பு எனக்கும்
அருள்செய் சிவனே அலந்தேன் அந்தோ
முறையோ முறையோ இறையோனே என்று
அழுது செம்பொன் அம்பலக் கூத்தன்
அருளால் பெற்ற அன்பினில் ஒருசிறிது
அடியனேற்கும் அருளல் வேண்டும்
நீயே கோடல் நின்னருள் பெருக்கிற்கு
ஏற்றது அன்றுஇள ஏறுஉகந்து ஏறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக
திருந்திய வேத சிரப்பொருள் முழுவதும்
பெருந்துறை இடத்துப் பெருஞ் சீர்க்
குருந்துறு நீழலில் கொள்ளை கொள்வாயே.

என்பது மாணிக்கவாசகரைப் போற்றிய அகவற்பா ஆகும்.

முன்னை உரையாசிரியர் உரை

இளமை பொருந்திய எருதினை விரும்பி ஏறிச் செலுத்துபவன் ஆகிய சிவனைக் குதிரையின் மேல் ஏறி வருமாறு செய்த சதுரப்பாடு உடையவனே! திருந்திய நிலையில் இருப்பதும், வேதங்களின் முடிந்த முடிவாக இருப்பதும் ஆகிய மகாவாக்கியப் பொருள் முழுவதையும் திருப்பெருந்துறை என்னும் தலத்தில் புகழமைந்த குருந்த மரத்து நீழலில் மிகுதியாகப் பெற்றுக்கொண்ட பெருமானே! தாங்கள் இறைவனிடம் 'இறைவனே, நின்னுடைய மெய்யடியார்களின் அன்பு எனக்கும் வேண்டும். சிவபெருமானே அருள் செய்வீராக. அவ்வன்பைத் தேடித்தேடி மிகவும் சோர்வுற்றேன். என்னை இவ்வாறு அலந்து போமாறு செய்தல் உனக்கு முறையோ. ஐயகோ முறையோ! என்று அழுது அழுது பொன்னம்பலத்தில் திருக்கூத்தாடும் இறைவன் அருளால் பெற்ற அன்பில் ஒருசிறு பகுதியை அடியேனுக்கும் அருளிச் செய்தல் வேண்டும். அவரிடம் பெற்ற அன்பு முழுவதையும் தாங்களே கொள்ளுதல் என்பது தங்களின் பெருங்கருணைக் கடலாகிய பெருந் தகைமைக்கு முறைமையன்று.

பாடல் பொருளின் நயவுரை (பழ. முத்தப்பன்)

இப்பாடலில் இறைவனிடம் சிவனடியார்கள் பெற்ற அன்பு தனக்கும் வேண்டும் என்ற சிவப்பிரகாசரின் கருத்து இழையோடிக் கிடக்கின்றது. அதாவது அடியவராகிய மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின்கீழ் திருப்பெருந்துறை இறைவன்பால் பெற்ற திருவருளாகிய அன்பினில் ஒருசிறிது தனக்கும் வேண்டும் என்று இப்பாடலில் சிவப்பிரகாசர் கேட்பதால், மாணிக்க வாசகராகிய அடியவர் பெற்ற அன்பினில் பங்கு கேட்பதால், சிவனருளால் அடியவர்களுக்குக் கிடைத்த அன்பு தனக்கும் வேண்டும் என்று சிவப்பிரகாசர் கேட்பதை உணரமுடிகிறது.

வீரசைவ மரபில் சங்கமராகிய அடியவர்களைப் போற்றுகின்ற கொள்கை அட்டாவரணத்தில் ஆறாவது நிலையாகும். சங்கமர் என்றும் சரணர் என்றும் இரண்டு வகையாக வீரசைவம் அடியவர்களை வகுத்துக் காட்டும். சங்கமர் என்பவர்கள் இறைவனின் திருவருளால் பூவுலகில் அடியவராகப் பிறந்து

வாழ்பவர்கள் ஆவார்கள். எடுத்துக் காட்டாக அல்லமப் பிரபு உள்ளிட்டவரைக் காட்டலாம். சரணர் என்பவர்கள் நம்மைப் போல் பிறந்து தம்முடைய சடுத்தல நெறியால் வளர்ச்சி பெற்று சீவன்முத்தர் ஆனவர்கள். குறிப்பாகச் சொன்னால் சங்கமர் என்பவர்கள் அடியவர்கள் கூட்டத் தலைவர் ஆவார்கள். சரணர் என்பவர்கள் தனித்தலைமை பூண்டவர்கள் ஆவார்கள்.

அங்கத்தில் தாங்கிய இட்டலிங்கத்தைப் பூசனை செய்த வீரசைவருக்கு இறைவனிடத்தில் அன்பு மிகுதியாக இருத்தல் வேண்டும். இதனைப் பற்றிக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது.

ஆசறும் மனத்தெழும் அன்பை அன்றியே
பூசனை உலக்கிலென் புராரி சென்னிமேல்
வீசுறு திரையினும் மிக்க தோசொலாய்
ஊசல்செய் மனம்உடை ஒருவன் ஆட்டுநீர். (பிரபு.பா.818)

இப்பாடலின் கருத்து

குற்றமற்ற மனத்தில் தோன்றுகின்ற அன்பில்லாமல் சிவபூசை செய்வதற்கு ஒருவன் விரும்பினால் அதனால் பயனில்லை. சிவனிடம் மனம் பற்றுதல் இல்லாமல் கங்கைநீரை அபிடேகம் செய்தாலும் அதனைச் சிவன் ஏற்கமாட்டான் என்பதாகும். எனவே வீரசைவம் அன்பின் விளைந்த பூசனையைக் கொண்டதாகும்.

இந்த அன்பினை வலியுறுத்த மேலும் ஒரு பாடலை எடுத்துக் காட்டலாம்.

உடுப்புகள் உன்னுடன் பிறந்திலை ஆயினும்
உடுத்திய உடல்உன் நாணம் அகன்றது
இடையில் வந்ததற் காகவே உலகினில்
அடையும் மகிழ்ச்சி அளவிலாது இருக்கையில்
கருணையில் பிறந்தநல் சரணரின் ஒழுக்கம்
கண்டுஅதை உடுத்தபின் விடாமல் இருங்கள்
உருவிலா உடுப்பிதை விடநீர் நினைப்பில்
உற்றவன் கூடலன் உருட்டியே விடுவான் (பசவர்.பா. 676)

இப்பாடல் சரணர்கள் மிகவும் இன்றியமையாதவர்கள் என்பதை, ஒரு மனிதன் ஆடையில்லாது வாழமுடியாதது போல, சரணரின் அன்பு இல்லாமல் ஒரு வீரசைவர் வாழமுடியாது என்று குறிப்பிடுவதை அறியலாம். எனவே மாணிக்கவாசகரைப்

போற்றிய சிவப்பிரகாசர், சரணர் போன்ற மாணிக்கவாசகருக்குக் கிடைத்த அன்பினை வேண்டுவது வீரசைவ மரபிற்கு ஏற்ப அடியவரிடத்தில் பக்தியும், அதனால் அவர்கள் காட்டுகின்ற அன்பும் வீரசைவ மரபிற்கு இன்றியமையாதது என்பது பெறப்படுகிறது. எனவே இப்பாடல் வீரசைவக் கொள்கையை வலியுறுத்துகிறது.

பாடலில் மாணிக்கவாசகர் விடையேறும் சிவனைத் தனக்காகக் குதிரையேறிவரும் சிவனாக ஆக்கிய சிறப்பு சிவப்பிரகாசரால் கூறப் பெற்றிருப்பது படித்து இன்புறத் தக்கதாகும்.

அருஞ்சொற் பொருள்

அலந்தேன் - வருந்தினேன், இளஏறு - இளமையான எருது, உகந்து ஏறியை - மகிழ்வோடு ஏறிய சிவனை, பரிமா - குதிரை, வித்தக - சதுரப்பாடு உடையவர், குருந்துறு நீழல் - குருந்த மரத்தடியின் நிழலில்.

பாடல் - 21

கொள்ளைகொள்ள வீடுஉதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளும் திருஞான சம்பந்தா - வெள்ளம்இடும்
ஏடுஏறப் பால்குறைந்தது என்று அழுவரே கழுவின்
காடுஏறப் புக்க அருகர்.

முன்னை உரையாசிரியர் உரை

திருமணக் காலத்தில் வந்த எல்லோர்க்கும் கொள்ளை கொள்ளும்படி முத்தி உலகப் பேற்றினை வழங்கி, இயமனை அணுகாத வண்ணம் தள்ளிக்காத்த பெருந்தகையே, ஞானசம்பந்தப் பெருமானே, மதுரையில் கழுமரக் காடுகளில் கழுவேறப் புகுந்த சமணர்கள், தேவரீர் திருப்பாடல் எழுதி, வைகை வெள்ளத்தில் போட்ட திருஏடு நீரில் எதிரேறிச் செல்வதைப் பார்த்ததும், தங்கள் வாதம் குறைந்ததாக ஆகிவிட்டதே என்று அழுபவர் ஆயினர்.

பாடற் பொருளின் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் தேவாரம் பாடியருளிய திருஞானசம்பந்தரின் சிறப்பினை எடுத்துக்கூறும் பாடலாகும். திருஞானசம்பந்தர் தன்னுடைய திருமணக் காலத்தில் , திருமணம் காணவந்த

சிவனடியார் அனைவரையும் முத்தி பெறச் செய்தார். ஆனால் அதே நேரத்தில் அவரோடு எதிர்த்து வாதிட்ட, சமண சமயத்தினர் தங்கள் அனல், புனல் வாதங்கள் தோற்று விட்டதால், வருந்தி அழுபவர் ஆயினரே என்ற கருத்தைப் பாடல் கொண்டுள்ளது.

இப்பாடல் சிவனடியார்கள் முத்திபெற, மற்றொரு பக்கத்தில் திருஞான சம்பந்தர் காலத்திலேயே சமண அடியார்கள் துன்பத்தில் ஆழ்ந்து கழுவேறினார்கள். எனவே திருஞானசம்பந்தர் காலத்தில் நன்றும் தீதும் ஒருசேர நடைபெற்றன என்பதை இப்பாடல் தருகிறது. இவ்வாறு நிகழக் காரணம் என்ன? என்பதைப் பாடல் சிந்திக்க வைக்கிறது. சிவனடியார்கள் முத்தி பெற்றார்கள் என்பதைச் சிவப்பிரகாசர் குறிப்பிடும் பொழுது கூடுதலாக ஒரு செயலைக் குறிப்பிடுகிறார். அது – 'கூற்றைப் பிடர்பிடித்துத் தள்ளும் சம்பந்தர்" என்பதாகும்.

திருநல்லூர்ப் பெருமணத்தில் திருஞானசம்பந்தருக்கும் நம்பியாண்டார் நம்பியின் திருமகளுக்கும் நடைபெற்ற திருமணத்தைக் காணவந்த அடியார்கள் அத்துணை பேரும் சிவப்பேற்றுடன் ஐக்கியமாகி முத்திபெற விழைந்தனர். ஆனால் அவர்கள் அவ்வாறு முத்திபெற முனையும்போது அவர்களின் வினைகள் எஞ்சியிருந்து அனுபவிக்க வேண்டும் என்ற வினைப்பயன் இருந்தமையால் அவர்களை முத்தியில் ஐக்கியம் ஆகாமல் எமதர்மன் தடுத்திருக்கிறான். அவ்வாறு தடுத்த பொழுது மார்க்கண்டேயனைக் கவர வந்த இயமனைச் சிவபெருமான் காலால் உதைத்துத் தள்ளியது போலத் திருஞானசம்பந்தரும் திருமணம் நடந்த இடத்தில் யமனைப் பிடர்பிடித்துத் தள்ளினார் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார்.

இந்த நிகழ்வு சிவப்பிரகாசரால் பெரியபுராணச் செய்தியன்றிக் கூடுதலாகக் கூறப்பட்டதன் நோக்கம் என்ன? இங்குதான் வீரசைவத் தத்துவக் கருத்து அடிப்படையாக அமைகிறது. எந்தப் பொருளும் மலிவாக இருந்தால் சமுதாயம் அதனைக் கொள்ளையோ கொள்ளை என்று குறிப்பிடும். அது போலத் தங்களுக்குரிய அனுபவிக்க வேண்டிய சஞ்சித, பிராரத்த வினைகள் இருக்கவும், திருமணம் காணவந்த சிவனடியார்கள் கொள்ளையோ கொள்ளை என்று திருஞானசம்பந்தர் மூலம் கிடைத்த முத்திப் பேற்றை அனுபவிக்கத் தொடங்கினர். ஆனால்

இயமன் அவர்கள் அனுபவிக்க வேண்டிய வினைகளை எண்ணித் தடுத்தான். தடுத்த இயமனைத் திருஞானசம்பந்தர் விரட்டினார்.

திருமணம் காணவந்த சிவனடியார்களுக்கு உரிய வினைகள் இருந்தால், அவர்கள் மீண்டும் பிறக்கத்தான் வேண்டும். முத்தியடைய முடியாது. ஆனால் அவர்கள் முத்தியடையத் தகுதி பெற்றவர்கள் ஆகிவிட்டார்கள். அந்தத் தகுதி திருமணக் கூடத்தில் எப்படி அவர்களுக்குக் கிடைத்தது? சைவ முறைப்படி எந்த ஒரு ஆன்மா பிராரத்தத்தில் ஞானாசிரியனுடைய திருக்கண் பார்வை என்ற நயன தீட்சையைப் பெறுகின்றதோ, அந்த ஆன்மாவின் அனுபவிக்க வேண்டிய சஞ்சித வினையும், பிராரத்த வினையும் சுடப்பட்டு விடும். வறுத்த நெல் சுடப்பட்டால் எவ்வாறு நெல் முளைக்காதோ, அதுபோல ஆன்மாக்களின் வினைகள் ஞானாசிரியரின் திருக்கண் பார்வையால் சுடப்பட்டு விடும். எனவே திருஞானசம்பந்தராம் ஞானாசிரியருடைய திருக்கண் பார்வை, திருமணம் காணவந்த சிவனடியார்களுக்குக் கிடைத்ததால் அவர்களுடைய வினைகள் எல்லாம் சுடப்பட்டு விட்டன. அதனை அறியாது வினைகள் இருக்கின்றன என்று எண்ணி, அவர்களின் முத்திப்பேற்றைத் தடுத்த இயமனைத் திருஞானசம்பந்தர் பிடர்பிடித்துத் தள்ளினார். அதே நேரத்தில் முன்பு திருஞான சம்பந்தரோடு வாதிட்ட சமணர்கள் திருஞான சம்பந்தரை ஞானாசிரியனாகக் காணாது பகைஞனாகக் கண்டதால், வினைகள் மூளப்பட்டு மீண்டும் பிறக்கக் கூடிய நிலையில் அழுது கழுமரம் ஏறி இறந்தார்கள். இத்தகைய அரிய சிந்தனைகளைப் பாடல் தருகிறது.

வீரசைவ நோக்கில் பாடலின் பொருள்

ஞானாசிரியரின் திருக்கண் பார்வை படுவதால் ஆன்மாக்களின் மலங்கள் சுடப்படுகின்றன என்பதை வீரசைவத் தத்துவம் வலியுறுத்துகிறது. வீரசைவத்தில் எண்வகைக் காப்பு சிறப்பிடம் பெற்ற தத்துவக் கொள்கையாகும். இதில் நான்காவதாக அமைந்தது குரு ஆகும். "குருவானவர் மூன்று வகையான தீட்சைகளைச் செய்வார். அவை முறையே வேதா தீட்சை, மந்திர தீட்சை, கிரியா தீட்சை எனப்படும். வேதா தீட்சை என்பது குருவானவர் மாணாக்கனைத் தன் அருட் பார்வையால் அவனிடம் பதிந்திருக்கும் சிவத்தை விளங்கச் செய்வதாகும். வேதா என்றால்

வேதித்தல், மாற்றுதல் எனப்படும்." எனவே ஆன்மாவைத் தூய்மைப் படுத்துகின்ற தீட்சை வேதா தீட்சை எனப்படும். இந்த அருட்பார்வையைச் சிவப்பிரகாசர் பிற இலக்கியங்களில் பலவாறு எடுத்துரைத்துள்ளார்.

பிரபுலிங்கலீலையில் நந்தவனம் வைத்துத் தொண்டு செய்த கொக்கிதேவனுக்கு அல்லமதேவர் உபதேசித்த கதியில் கீழ்வரும் பாடல் அமைந்துள்ளது.

நின்னால் கண்டேன் சிவலிங்க
நிஷ்டை ஞான யோகிதனை
முன்னாள் கருமம் அனைத்தும்இனி
முடித்தேன் ஞானநிலை நின்றேன்
உன்னால் செய்யப் படும்உதவிக்
குதவி வேறு நெடுந்தகாய்
என்னால் செய்வ தொன்றுளதோ
எழிலிக் குதவியார் செய்வார். (பா.25)

இப்பாடலில் கொக்கிதேவன் அல்லமப் பிரபுவினால் சுட்டிக் காட்டப்பெற்ற சிவலிங்க உருவம் கையில் தாங்கிய யோகியைக் கண்டான். அவன் கண்டதால் யோகியும் அவனைக் கண்டார். கண்டதினால் முன்னாள் கருமம் எனப்படும் பழைய வினைகள் அனைத்தும் முடிக்கப் பெற்று ஞானம் பெற்றான் என்று பாடலில் செய்தி இடம்பெற்றிருப்பது நோக்கத் தக்கதாகும்.

இத்தகைய வரலாற்றை மனதில் வைத்துக் கொண்டுதான், சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சுவிடு தூதில், சிவப்பிரகாசர் சிவஞானியின் கண்கள் ஆன்மாக்களின் வினையை அழிக்கின்றது என்ற பொருளில், கீழ்வரும் கண்ணியை அமைத்துள்ளார்.

கேவலம்என் கங்குல் கெடுக்கும் தொழில்ஒன்றின்
மேவல்உற ஒத்த விழிஇரண்டும் (கண்ணி 118)

அதுபோலச் சிவஞான சுவாமிகள் தாலாட்டில்,

ஆர்க்கும் கொடுநோய் அனைத்தும் கடைக்கண்ணால்
தீர்க்கும் கருணைச் சிவஞான தேசிகனோ (கண்ணி 85)

என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுவதையும் நினைவு கொள்ளலாம். மேலும் சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத் தமிழில், சப்பாணிப்

பருவத்தில் நால்வர்நான்மணிமாலைப் பாடலைச் சார்ந்தது போலக் கருத்தினைப் பதிவு செய்துள்ளார்.

கொண்டவெம் பவநீறு படநீறு தன்னைக்
கொடுப்பது நடுங்கஆவி
கொள்ளைகொண்டு உண்ணஎம் பால்வரும் கொடியவெங்
கூற்றைத் தடுப்பதுஆய. (பா. 2)

இப்பாடற் பகுதியில் சிவஞானி திருநீறு கொடுக்கும் திருக்கரத்தின் ஸ்பரிச தீட்சையால், உயிரை உண்ண வருகின்ற இயமன் தடுக்கப் படுகிறான் என்பதைச் சிவப்பிரகாசர் குறிப்பிட்டிருப்பது சிந்தனைக்கு உரியதாகும்.

இவ்வாறு நால்வர் நான்மணிமாலைப் பாடலில் வீரசைவத் தத்துவக் கொள்கைக்கு ஏற்பப் பொருள் அமைந்திருப்பதைப் படித்துப் படித்து இன்புறலாம்.

அருஞ்சொற் பொருள்

கொள்ளை - மிகுதியை உணர்த்தும் சொல், கூற்றை - யமனை, வெள்ளம் - வைகையாற்று வெள்ளம், ஏடு - வாழ்க அந்தணர் என்று எழுதப்பட்ட பாடலைக் கொண்ட ஏடு, பால் - பக்கம்,(வாதம் புரியும் கட்சி), கழுவின்காடு - கழுமரக்காடு, அருகர் - சமணர்.

பாடல் - 22

அருகக் கடல்கடந்து ஏறியதோ சிலை அம்பிஎனப்
பெருகக் கடல்கடந்து ஏறியதோ சொல் பெருமிடறு
கருகக் கடல்விடம் உண்டோன் அடியில் கசிந்து மனம்
உருகக் கடல்அன்பு பெற்ற சொல்வேந்த உனக்கு அரிதே.

இப்பாடல் திருநாவுக்கரசரைப் போற்றிப் பாடிய கட்டளைக் கலித்துறைப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

திருப்பாற் கடலிலிருந்து தோன்றிய நஞ்சினைப் பெருமை வாய்ந்த கண்டமானது, கருமையை ஏற்குமாறு உண்டவனாகிய சிவபெருமானுடைய திருவடிகளின் பெருமையை நினைந்து நினைந்து நெகிழ்ச்சி பெற்று, பின் கரைந்து உருகுமாறு செய்யவல்ல அன்பை மிகுதியாக - கடலளவிற்குப் பெற்ற சொல்லரசே.

சமணர்களாகிய கடலை வென்று கரையேறியதோ அல்லது கட்டப்பெற்ற கல்லையே தோணியாகக் கொண்டு நாள்தோறும் பெருகுகின்ற உப்புக்கடலைக் கடந்து கரையேறியதோ - உமக்கு உயர்வுடையது எது என்று சொல்வீராக.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடலில் சிவபெருமானின் பெருமையாகத் திருப்பாற் கடல் கடைந்த போது, தேவர்களைக் காப்பதற்காகக் கடலில் தோன்றிய நஞ்சினைச் சிவபெருமான் உண்டு, அந்த நஞ்சை மிடற்றில் தங்கிக் கருமை நிறம் தோன்றுமாறு செய்த சிறப்புக் கூறப்பெற்றுள்ளது. அத்துடன் திருநாவுக்கரசரின் பெருமையும் கூறப்பெற்றுள்ளது. அதாவது கூட்டமாக விளங்கிய சமணர்களின் சூழ்ச்சியைக் கடந்தமையையும், கல்லைக் கட்டித் தன்னைத் தூக்கி எறிந்த பொழுது, அக்கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலிலிருந்து தப்பித்தமையும் அவருடைய சிறப்புகளாகக் கூறப்பெற்றுள்ளன.

வீரசைவ நோக்கில் பாடல்

இப்பாடலில் அமைந்திருக்கும் சிவபெருமானின் பெருமை வீரசைவ நோக்கில் பொருள்காண இடம் தருகிறது.

சிவபெருமான் நஞ்சு உண்ட நிகழ்வு பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இருந்து தற்காலப் பக்திப் பாடல்கள் வரை இடம்பெற்று வரும் செய்தியாகும். சங்க இலக்கியத்தில் அதியமான் நெடுமான் அஞ்சி ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்த பொழுது, ஔவை அவனைப் பாராட்டிப் பாடிய புறநானூற்றுப் பாடலில் இச்செய்தி,

'பால்புரையும் பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே" (புற.பா.91)

என்று இடம்பெற்றுள்ளது. அடுத்து வந்த சிலப்பதிகாரத்தில்,

'விண்ணோர் அமுதுண்டு சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்து அருள் செய்குவாய்"
(வேட்டுவவரிகண்ணி22)

என்றும், மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தில்,

'கோலாலம் ஆகி குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன் சதுர்தான் என்னேடி
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன் மால் உள்ளிட்ட
மேலாய தேவர் எல்லாம் வீடுவர் காண் சாழலோ"

(திருச்சாழல்,பா.8)

என்றும் நஞ்சினை உண்ணவில்லை என்றால் தேவர்கள் அழிந்து விடுவார்கள் என்பதைக் குறிப்பிடுகின்றார். திருநாவுக்கரசர்,

'மண்டிமலையை யெடுத்து மத்தாக்கியவ் வாசுகியை
தண்டி அமரர்கடைந்த கடல்விடங் கண்டருளி
உண்ட பிரான்நஞ் சொளித்தபிரான் அஞ்சியோடிநண்ணக்
கண்ட பிரானல்ல னோகண்டி யூரண்ட வாணனே."

(கண்டியூர்ப்பதிகம், பா.10)

என்ற பாடலில் சிவபெருமான் நஞ்சினை உண்டபொழுது அது கழுத்தை விட்டு இறங்கவும் இல்லை, இறங்கி இறைவனை அழிக்கவும் இல்லை, ஏற்றுக் கொள்ளாத உணவாக இருப்பின் வயிறு அதனை வெளியில் கக்கிவிடும், அப்படியும் இல்லை. பிறர் வாழ உதவி செய்வதை என்றைக்கும் மக்கள் உணரவேண்டும் என்பதற்கேற்ப, நஞ்சினைக் கழுத்தில் ஒளித்து வைத்தார் என்று குறிப்பிட்டிருப்பது படித்து இன்புறத் தக்கதாகும். நஞ்சுண்ட நிகழ்ச்சிக்கு மேலும் விளக்கம் தருவது போலச் சேக்கிழார் பெரியபுராணத்தில்,

'அவ்வினைக் கிவ்வினை என்றெடுத்(து) ஐயர் அமுதுசெய்த
வெவ்விடம் முன்தடுத் தெம்மிடர் நீக்கிய வெற்றியினால்
எவ்விடத் தும்அடி யார்இடர் காப்பது கண்டம் என்றே
செய்வினை தீண்டா திருநீல கண்டம் எனச்செப்பினார்"

(திருஞான சம்பந்தர் புராணம், பா.335)

என்ற பாடலில் இறைவன் நஞ்சுண்டது அடியார்களின் இடரைத் தீர்ப்பதற்காக உண்டான் என்ற பொருளில் கூறுவார்.

இவ்வாறு நஞ்சுண்ட நிகழ்வைப் பல்வேறு விதமாக முன்னவர்கள் பாடியிருக்கச் சிவப்பிரகாசர், நஞ்சுண்டதுடன் தன்னுடைய ஆணவத்தையும் இறைவன் முழுமையாக ஏற்றுக் கொண்டால், நஞ்சுண்ட கருமை மேலும் கருமை ஒளி பெறும் என்று சோணசைலமாலையில் குறிப்பிட்டு, இறைவன் நஞ்சு உண்டதற்கு ஒரு புதிய காரணத்தைப் படைத்துள்ளார். அதாவது

வீரசைவ மரபுப்படி சிவபெருமானைக் கடவுளாக மட்டும் கொள்ளாமல், ஆசாரியராக ஏற்றுக் கொண்டு, அவ்வாசிரியர் ஆணவ இருளைப் போக்குகின்றவர் என்பதை உணர்ந்து சிவனை வணங்குவார்கள் என்பதை எடுத்துக் காட்டுவது போல் பாடியுள்ளார். அப்பாடல் வருமாறு:

'ஏனுறு மமரர் கடைகட லளித்த
விருளொடு மணிமிடற் றடியேன்
ஆணவ விருளுங் கலந்திடிற் கருமை
யழகுமிக் கிலங்குறுங் கண்டாய்" (பா.42)

நஞ்சுண்ட சிவபெருமானை நாவுக்கரசர் வணங்கி மனம் கசிந்துருகுவார் என்று இப்பாடல் குறிப்பிடுவது போலச் சிவப்பிரகாசர் பிரபுலிங்கலீலையில் மாயை பூசைகதியில், களங்கண்டனை வீரசைவர்கள் வழிபட்டுப் பூசை செய்து மனம் உருகுவார்கள் என்பதைக் குறிப்பிடுகிறார்.

'களங்கனியை வென்றமணி கண்டனை அருச்சித்து
உளங்குளிர் அருந்துவன்" (பா. 57)

என்பது அக்கருத்தைத் தரும் பகுதியாகும். மேலும் இப்பாடலில் நாவுக்கரசரிடம் பட்டிமண்டபம் போல் ஓர் வினாவை வைக்கிறார். இரண்டு கடல்கள் ஏறியதில் எது சிறந்தது என்பது அவ்வினாவாகும். அதற்கு விடையும் பாடலிலேயே குறிப்பாகத் தந்துவிடுகிறார். எவ்வாறு என்றால் உப்புக்கடலைக் கடப்பதற்குக் கல் துணையாக இருந்தது என்பதைச் சிலைஅம்பி என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

ஆனால் சமணக் கடலைக் கடப்பதற்கு நேரிடையாக எவ்விதத் துணையும் இல்லை என்றாலும், இறைவனுடைய திருவருள் அவருக்குள் இருந்து உதவியது என்பதை உணரவைத்துச் சமணக் கடலைக் கடந்ததே பெரிது என்ற விடையையும் உணரவைத்து விடுகிறார். எனவே இப்பாடலில் விடம் உண்ட சிவபெருமானைத் தங்கள் ஆணவம் அழிய ஞான ஆசிரியராகக் கொண்டு வீரசைவர்கள் வணங்குவதைச் சிவப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார் என அறியலாம்.

அருஞ்சொற் பொருள்

அருகக்கடல் - சமணர்கூட்டம், அம்பி - கல், மிடறு - கழுத்து, அரிது - உயர்வு.

பாடல் - 23

**'உனற்கு அரும்புகழ் மேவிய சுந்தரன் உம்பல் மீதுஇவரா
நினைப்பு அரும் கயிலாயம் அடைந்தமை நின்று காண்குறவே
எனக்கு வந்தறுமோ மகவு என்று அழுகின்ற நாள் அலைபால்
தனித்து அருந்துபு மாலை உமிழ்ந்திடு தம்பிரான் நலனே"**

இப்பாடல் சுந்தரமூர்த்தியாரைப் பாடிய விருத்தப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

குழந்தை என்று கூறுமாறு விளங்கி அழுத அவ்விளம் பருவத்திலேயே பாற்கடலைக் குடித்து, அதில் மிதந்து கொண்டிருந்த திருமாலை வெளியில் உமிழ்ந்த பெருந்தகைமை கொண்ட உபமன்யு முனிவருக்கு நினைத்தற்கு அரிய புகழைப் பொருந்திய சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளை யானையின் மீது ஏறி, நினைப்பதற்கரிய கயிலாயத்தை அடைந்த காட்சியைக் காணுமாறு செய்த இறைவன் திருவருள் நலம் எனக்கு என்றேனும் ஒருநாள் வந்து அடையுமோ?

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் உபமன்யு முனிவர் பாற்கடலைக் குடித்த நிகழ்ச்சியையும், சுந்தரர் வெள்ளை யானையின் மீது ஏறிக் கயிலாயம் அடைந்த நிகழ்ச்சியையும் குறிப்பிடுகின்றது. உபமன்யு பாற்கடலைக் குடித்த நிகழ்ச்சியைச் சைவத்திருமுறைகள் பலவாறு பாராட்டிக் கூறும். ஒன்பதாம் திருமுறை,

**"பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்"** (திருப்பல்லாண்டு, பா.9)

என்று குறிப்பிடும். சுந்தரர் தேவாரத்தில் சுந்தரர் தான் கயிலைக்குச் சென்ற நிகழ்வையும், அங்கு இவர் யார்? என்று கேட்கப்பட்ட வினாவையும், அதற்கு உரைக்கப் பெற்ற விடையையும் அகச்சான்றாகத் தருகிறார்.

**'இந்திரன் மால்பிரமன் னெழி
லார்மிக தேவரெல்லாம்
வருந்தெதிர் கொள்ளஎன்னை மத்த
யானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன்**

ஆர்என எம்பெருமான்
தந்தமர் ஊரனென்றான் நொடித்
தான்மலை உத்தமனே. (திருநொடித்தான்மலை, பா.9)

இப்பாடலில் வெள்ளையானை இறைவனால் அனுப்பப் பெற்றதும், கயிலாயத்தில் இருந்த முனிவர்கள் இவர் யார் எனக் கேட்டதும், அதற்கு உபமன்யு கூறிய பதிலை இறைவனே கூறியதாகவும் சுந்தரர் குறிப்பிட்டுள்ளார். உபமன்யு முனிவர் குழந்தைப் பருவத்திலிருந்தே சிவனருள் பெற்ற அடியவர் ஆவார். பெரியபுராணத்தில் உபமன்யு முனிவர் கூறுவதாக அமைந்த பதிலை, சுந்தரர் சிவபெருமான் கூறியதாகக் குறிப்பிட்டிருப்பது நினைந்து மகிழ்வதற்கு உரியதாகும். உபமன்யு முனிவர் கூறுவதும், சிவபெருமான் கூறுவதும் ஒன்றே என்ற எண்ணத்தைச் சுந்தரர் ஏற்படுத்தி விடுகிறார். எனவே அடியவர் வேறல்ல, இறைவன் வேறல்ல என்பது பெறப்படுகிறது.

வீரசைவ நோக்கில் பாடல்

உபமன்யு முனிவர் கண்ட காட்சியைத் தானும் காண வேண்டும் என்று இப்பாடலில் சிவப்பிரகாசர் கூறுவதால், உபமன்யு முனிவரைப் போன்று தானும் ஒரு அடியவராக ஆகவேண்டும் என்ற கருத்தைப் பாடல் வெளிப்படுத்துகிறது எனக் கொள்ளலாம். வீரசைவக் கொள்கைகளில் எண்வகைக் காப்பில் ஆறாவது சங்கமம் ஆகும். அச்சங்கமத்தில், தான் ஒருவராக அமையவேண்டும் என்ற கருத்தைச் சிவப்பிரகாசர் பல இடங்களில் கூறியுள்ளார். கீழ்வரும் சோணசைலமாலைப் பாடல்கள் எடுத்துக் காட்டுகளாக அமைகின்றன.

'பிரம்புஒரு கரம்கொண்டு: அடிப்பநந் தீசர்
பெருங்கல்வீழ் பாசியின் இமையோர்
சிரம்பொர ஒதுங்கி நெருங்கும்நின் அவையில்
தீயனேன் அணையும்நாள் உளதோ" (பா.81)

என்றும்,

'அஞ்சல்என்று அவலக் கொடியனேன் தனைநின்
அடியாரில் கூட்டுக" பா. 97)

என்றும் சிவப்பிரகாசர் குறிப்பிடுவதால் வீரசைவக் கொள்கையின்படி உபமன்யு முனிவரைப் போன்று, சீவன்

முத்தராகிய சங்கமர் ஆகவேண்டும் என்ற கொள்கையை இப்பாடல் வலியுறுத்துகிறது எனலாம்.

அருஞ்சொற் பொருள்

உனற்கு அரும் - எண்ணுவதற்கு அரிய, உம்பல் - யானை, மகவு - உபமன்யு முனிவர், அலைபால் - கடலில், மால் - திருமால்.

பாடல் - 24

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ!
மனம் நின்று உருக்கும் மதுர வாசக!
கலங்குறு புலன்நெறி விலங்குறு வீர!
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை ஏனும் உணரான் அஃதான்று
கைளோ முறிபடும் கைகள் காணின்
கண்களோ ஒன்று காலையில் காணும்
மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும்
பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்
ஆயினும் தன்னை நீ புகழ்ந்துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன் அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி அறியா என்பு அணிவோனே.

இப்பாடல் மாணிக்கவாசகரைப் போற்றிப் பாடிய ஆசிரியப்பா ஆகும்.

முன்னை உரையாசிரியர் உரை

நலங்கள் பலவும் நிரம்பிய திருவாதவூரில் அவதாரம் செய்தருளிய நல்ல புகழ்ச்சி மிக்க புலவ! மனத்தை இடமாகக் கொண்டு நின்று அனைத்து எலும்புகளும் உள்நெக நின்று உருக்கும் தன்மை வாய்ந்ததும், இனிமை நிறைந்ததும் ஆகிய திருவாசகத்தை இசைத்தவரே, புலன்கள் தம்முடைய இயற்கை நியதிகளைச் செய்ய முடியாமல் கலங்குதல் உற்று நிற்க, அவைகளைத் தாம் விரும்பிய நெறியில் பிணித்து வைத்தல் பொருந்திய வீர! திங்களைத் தன்னுடைய நீண்டசடையில் அணிந்துள்ளவரும், தெய்வங்களுக்கு எல்லாம் தலைவரும் ஆகிய சிவபெருமான் கலைகளுள் ஒன்றும் உணரான். அதுமட்டுமல்லாமல் அவன் கைகளோ வளைவு பட்டவைகள். மேலும் ஆராயப் புகுந்தால் சூரியன், சந்திரன்,

அக்கினிகளே கண்களானவை ஆகையால், சூரியனாகிய கண் காலையில் தோன்றும். சந்திரனாகிய கண் மாலையில் விளங்கும். பழிப்புடைய மற்றொரு கண் விழித்தாலே பார்வையில் பட்டவை எல்லாம் எரிந்து அழிந்துவிடும். ஆதலால் நீங்கள் அவனைப் புகழ்ந்துரைத்த குற்றமற்ற செய்யுட்களை அவன் எழுதினான் என்றால், இகழ்ச்சியைச் சிறிதும் நினையாமல் எலும்பை அணிந்திருக்கும் சிவன் புகழ்ச்சியை மிகவும் விரும்புவான் போலும்.

பாடல் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் மாணிக்கவாசகர் திருவாசகத்தைச் சொல்ல, தில்லைக் கூத்தன் அதனைக் கேட்டு ஓலையில் எழுதி, திருச்சிற்றம்பலமுடையான் என்று கையொப்பமிட்ட நிகழ்ச்சியைக் குறிப்பதாகும். இதில் மாணிக்க வாசகரின் பெருமையாக வாதவூரில் பிறந்த நல்லிசைப் புலவர் என்று கூறப்பெற்றுள்ளது. பெரியபுராணத்தில் தேவாரம் பாடிய மூவரும் இடம்பெற்றிருக்க, மாணிக்கவாசகர் இடம் பெறாமைக்குத் தமிழ் அருளாளர்கள் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றுள்ள பொய்யடிமை இல்லாத புலவர் என்ற தொடர்மூலம் மாணிக்க வாசகரைக் குறிப்பிட்டிருக்கிறார் என்று எண்ணி, சேக்கிழார் அந்தப் பொய்யடிமை இல்லாத புலவருக்குப் பாடலைப் பாடியுள்ளார் என்று கூறுவார்கள். எனவேதான் சிவப்பிரகாசரும் மாணிக்கவாசகரைப் புலவர் என்று அழைத்தார் போலும்.

அடுத்த சிறப்பாகக் கலங்குறு புலன்நெறி விலங்குறு வீர! என்ற தொடரால் ஐம்புலன்களை அடக்கி, அவற்றின்வழி தான் செல்லாமல், தன் எண்ணத்தின்வழி அவை செல்லுமாறு செய்த வல்லமையுடைய வீரர் என்று பாராட்டியிருப்பது நினைவுகூரத் தக்கதாகும்.

பாடலின் பின்பகுதியில் சிவபெருமானின் பெருமை கூறும் நிலையில், சிவபெருமான் அவயவங்களால் பழுதுபட்டு இருந்தாலும், மாணிக்கவாசகர் கூறிய திருவாசகத்தை எழுதியமையால் புகழ்ச்சி விருப்பன் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார். புகழ்ச்சி விருப்பன் என்பதினால்தான் ஒரு சிலர் மட்டுமல்லாது பல அருளாளர்கள், மீண்டும் மீண்டும்

சிவபெருமானை மற்ற திருமுறைப் பாடல்களால் பாடிப் போற்றினர் போலும். எனவே பலநூறு பாடல்கள் சிவபெருமான் மீது பல அருளாளர்களால் பாடப்பெற்று, அவன் பெருமை பேசப்பெற்றிருக்கிறது என உய்த்துணர வைக்கிறார் சிவப்பிரகாசர்.

வீரசைவ நோக்கில் பாடல்

இப்பாடலில் மாணிக்கவாசகர் ஐம்புலன் அடக்கம் கொண்டவர் என்பதைச் சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார். இந்த ஐம்புலன் அடக்கம் வீரசைவத் தத்துவத்தில் சிறப்பிடம் பெறுவதாகும். வை.இரத்தினசபாபதி அவர்கள் தன்னுடைய வீரசைவ நூலில் பின்கண்டவாறு குறிப்பிடுவதை இங்கு நினைவு கொள்ளலாம்.

> "பிற சமயங்களைப் போல வெளியில் சென்று பொருளை ஆராய்ந்து அறிவதை விட, வீரசைவம் தனக்குள்ளேயே ஆய்வுமுறையை நடத்தி, உரிய அறிவைப் பெற்றுத் தன்னுடைய முடிவை வெளிப் படுத்துவதாகும்". (ப.291)

பேராசிரியரின் கருத்துப்படித் தன்னுள் ஆராய்வதற்கும் புலன் அடக்கம் இன்றியமையாததாகும். இப்புலனடக்கம் வீரசைவ தவ முனிவர்கள்பால் இருந்தமையை அறிய முடிகிறது. சிவஞான பாலய சுவாமிகளைச் சிவப்பிரகாசர் பல இடங்களில் ஐம்புலன் அடக்கம் தான் கொண்டதோடு, பிறரையும் ஐம்புலன் அடக்கத்தில் ஆழ்த்தியவர் என்று குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக,

> "பொறியீடு செல்லுமனப் போர்க்களிற்றைத் தன்தாள்
> தறியூடு நிற்பத் தழைந்த சிவஞானியோ" (தாலாட்டு, 97)

என்றும்,

> பொறியிற் புறத்து மனஞ்செல்லில் புலனே தோன்றி இடுமகத்தில்
> செறியக் கரணம் பராநந்த சிவமே தோன்றும் சிவம்தோன்ற
> அறிவில் பரந்த விடயமயம் ஆகும் உலகம் தோன்றாமல்
> பிறவித் துயரக் கடல்கடந்து பேசின் பஞ்சார் குவரென்று"
> பிரபுலிங்கலீலை 608)

என்றும் சிவப்பிரகாசர் குறிப்பிட்டு, ஐம்புலன் அடக்கக் கொள்கையை வலியுறுத்துகின்றார். எனவே இப்பாடல் வீரசைவத்

தத்துவத்திற்குரிய ஐம்புலன் அடக்கத்தை நினைவுபடுத்துகிறது எனலாம். பாடலில் சிவபெருமானின் பெருமையைக் குறிப்பிடும் சிவப்பிரகாசர் புகழ்ச்சி விருப்பன் என்று குறிப்பிடுவது நினைவுகொள்ளத் தக்கதாகும்.

சிவபெருமான் மீது பாடல்கள் தோன்றுவதற்குக் காரணம் இத்தகைய விருப்பம் காரணம் என்பதால், அதே நிலையில் சிவபெருமானோடு ஒத்து எண்ணக்கூடிய ஞானாசிரியராகிய சிவஞான பாலய சுவாமிகளும் புகழ்ச்சி விருப்பம் உடைமையால் தான் போலும், சிவப்பிரகாசரும் அவரைப் பற்றிய பல சிற்றிலக்கியங்களைப் பாடியளித்திருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகிறது.

அருஞ்சொற் பொருள்

நலமலி - நலன்கள் மிக்க, மதுரவாசகம் - திருவாசகம் என்ற தேன், தெய்வநாயகன் - சிவபெருமான், கண்களோ ஒன்று - சூரியன், மாலையில் ஒன்று - சந்திரன், பழிப்பின் ஒன்று - நெற்றிக்கண், செய்யுள் - திருவாசகம், என்பு - எலும்புமாலை.

பாடல் - 25

'வானும் புகழ்புகலி மன்னன் தொடர்புஒன்று
தேன்உந்து இதழியோன் சீரேடு - தானும்
கரியாய் மொழியும் கரியாய் விடாமல்
எரியார் அழல் வீழ்ந்து எழுந்து".

இப்பாடல் திருஞானசம்பந்தரைப் போற்றும் வெண்பாப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

தேன் சொரியும் கொன்றை மாலையை அணிந்த சிவபெருமானின் தனிப்பெரும் சிறப்புகள் எழுதப்பெற்ற ஓலையும் கூடத், தேவர்கள் வணங்கித் துதிக்கும் புகலிநகர் அரசனாகிய ஞானசம்பந்தப் பெருமான் திருக்கை மலர் தொடர்பு அமைந்த காரணத்தால், எரிதலைப் பொருந்திய நெருப்பினில் வீழ்ந்தபோது எரிந்து கரியாகிப் போகாமல், எழுந்து சிவபெருமானே பரம்பொருள் என்பதைச் சான்றாக மொழியும் தன்மை பெற்றது.

பாடல் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் திருஞானசம்பந்தருடைய ஏடு அனல் வாதத்தில் எரிந்து விடாமல் பச்சைப் பதிகமாக நின்றதற்குரிய காரணத்தைக் கூறுவதாக அமைந்துள்ளது. இக்காரணம் சேக்கிழார் கூறிய காரணத்தைக் காட்டிலும் ஒருபடி மேலே சென்று பொருள் தருகிறது. அதாவது சேக்கிழார் ஏடு பச்சையாக இருப்பதற்குரிய காரணத்தைக் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

'இட்ட ஏட்டினில் எழுதிய செந்தமிழ்ப் பதிகம்
மட்டு லாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்(து)
அட்ட மூர்த்தியைப் பொருளென உடைமையால் அமர்ந்து
இட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கிய தன்றே. (பெ.பு.786)

சேக்கிழாரின் இப்பாடல் சிவபெருமானின் புகழைத் தாங்கியிருத்தலால்தான் எரியாமல் பச்சையாக இருந்தது என்ற பொருளைத் தருகிறது. ஆனால் நம் சிவப்பிரகாசரோ திருஞானசம்பந்தரின் கை பட்டதாலும் அந்த ஏடு எரியாமல் இருந்தது என்று காட்டுவது குறிப்பிடத் தக்கதாகும். மேலும் பாடலில் வானத்தவர் போற்றுகின்ற ஞானசம்பந்தர் என்று பெருமை பேசுவது நினைவு கூறத் தக்கதாகும். தேன்உந்து இதழியோன் சீரேடு என்று சிவபெருமான் பெருமையை ஏடு கூறுகின்றது என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுவதால், சிவபெருமான் பெருமையோடு ஞானசம்பந்தரின் கையின் தொடர்பும் சேர்ந்து எரியாகாமல் நின்றது என்று அறிய முடிகிறது.

வீரசைவ நோக்கில் பாடல்

இப்பாடலில் சிவபெருமானே பரம்பொருள் என்பதையும், அவனுடைய அருளோடு அருள்பெற்ற அடியவரின் தொடர்பும் சேரும் பொழுது வியத்தகு நிகழ்ச்சி நடைபெறுகிறது என்ற கருத்தும் மையமாக அமைந்துள்ளது. இவ்விரண்டு கருத்துகளும் வீரசைவத் தத்துவக் கொள்கையில் குறிப்பிடத்தக்கன ஆகும். சிவன் பரம்பொருள் என்பதைக் கீழ்வரும் சிவப்பிரகாச விகாசப் பாடல் குறிப்பிடுகின்றது.

ஆதியாம் இறை தன் சத்தியாய ஆதி கொண்டே
ஆதியாம் கருத்தா ஆம் என்று அறிந்திடப் படுவனன்றே(பா.23)

என்பதை இங்கு நினைவு கொள்ளலாம்.

அதுபோல அடியவரின் சிறப்பினை இப்பாடல் குறிப்பிடுவதை எண்ணுகின்ற பொழுது, வீரசைவ எண்வகைக் காப்பில் ஆறாவது காப்பாகிய சங்கமத்தின் சிறப்பு இடம்பெறுகிறது எனலாம். எனவே இப்பாடல் வீரசைவைத் தத்துவக் கொள்கைகளில் இரண்டினை வலியுறுத்துகிறது.

அருஞ்சொற் பொருள்

வானும் - வானவர், புகலி - சீர்காழி , இதழி - கொன்றைமலர், கரியாய் - காரணம், கரியாய் - நெருப்புக் கரியாய், எரியார்அழல் - எரிகின்ற நெருப்பு.

பாடல் - 26

துடைவாழை மேல் மடவார்அல்குல் பாம்பு தொடமயங்கி
நடைவாய்ப் பிணம் எனப் பட்டார் பெறுகிலர் நச்சுகுலை
உடைவாழை மேல் உரகம் தீண்ட மாய்ந்த ஒருவன் உயிர்
அடைவான் அருள்புரியும் திருநாவுக் கரசினையே.
இப்பாடல் திருநாவுக்கரசரைப் போற்றிய பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

பெண்களினுடைய தொடைகளாகிய வாழைகளின் மேல் உள்ள அல்குலாகிய பாம்பு தொட்ட காரணத்தால் மயக்கமடைந்து, நடைப்பிணமாகத் திரிந்து கொண்டிருப்பவர்கள் எல்லாம், எல்லோராலும் விரும்பப் பெறும் குலையைக் கொண்ட வாழை மரத்தின்மேல் இருந்த பாம்பு தீண்டிய காரணத்தால், இறந்த ஒப்பற்ற மூத்த திருநாவுக்கரசானவன் மீண்டும் உயிர் பெறுவதற்காகத் திருவருள் புரிந்தவராகிய திருநாவுக்கரசு நாயனாரைச் சென்று வழிபட்டு மயக்கம் நீங்கி வாழலாமே. அவ்வாறு பெறுகிலர்.

பாடல் பொருள் நயவுரை (பழ. முத்தப்பன்)

இப்பாடலில் தமிழ்க்கவி மரபிற்கேற்ப பெண்களின் காம இச்சையை ஏற்படுத்துகின்ற பெண்மை உறுப்புக்குப் பாம்பு என்று வழக்கம்போல் உருவகம் செய்யப் பெற்றிருக்கிறது. அப்பாம்பு தீண்டலால் அதாவது காம உணர்வு ஏற்படுதலால் மனித வலிமை இழந்து நடைப்பிணமாகத் திரிகின்றவர்கள், பாம்பு கடித்து இறந்தவரைப் பிழைக்க வைத்த திருநாவுக்கரசரை வழிபட்டு உய்தி

பெறலாமே என்ற கருத்து வலியுறுத்தப் பெறுகிறது. இப்பாடலின் அடிப்படைக் கருத்து - ஆன்மீகச் செல்வராகிய திருநாவுக்கரசர் வடிவத்தையோ, அல்லது அவரின் தேவாரத்தையோ போற்றி வணங்கி ஏற்றால் காமத்தை வெல்லலாம் என்பதாகும்.

இந்த அடிப்படைக் கருத்தை வலியுறுத்துவது போல, வீரசைவத் திருமடத்தின் தலைவராய் விளங்கும் நம் குருமகா சந்நிதானம் சிவஞான பாலய சுவாமிகளைப் போற்றினாலும் காமத்தை வெல்லலாம் என்ற செய்தி, சிவப்பிரகாசரின் பாடல்களில் தெள்ளத் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது. எனவே நாவுக்கரசரை ஒத்து நமது குரு சிவஞான பாலய சுவாமிகள் விளங்குவதால் இப்பாடல் வீரசைவக் கருத்தை வெளிப்படுத்து கிறது எனலாம்.

.... வருத்துகழை
வில்தோள் மதவேளை வெல்லும்அடையாளம்என
கல்தோய் துகில் மருங்கில் காட்சிதரக்." (சிவ.நெஞ்சு.தூது,5556)

என்ற பாடலில் சிவஞான பாலய சுவாமிகள் காமத்தை வென்று காட்சி தருபவர் என்ற செய்தி வலியுறுத்தப் பெறுகிறது.

'காமத்தை மிகச் செய்து வருத்துகின்ற கரும்பு வில்லைத் தோளில் சுமக்கும் மன்மதவேளைத் தம்பால் வரவிடாமல், வெல்லுதலைக் காட்டும் அடையாளமாகக் காவி நீரில் தோய்ந்தெடுக்கப் பட்ட ஆடை இடுப்பில் உடுத்திக் காட்சி தருபவர்" என்பது இப்பாடற் பகுதியின் பொருளாகும். காமத்திலிருந்து விடுபட்டவரால்தான் பிறரின் காம இச்சையைப் போக்க முடியும் என்பதற்கேற்ப, காமத்தை வென்றவராக இப்பாடற் பகுதி சிவஞானியைக் குறிக்கிறது.

கல்லெ னத்திரள் தோள்புனை யீர்ந்தொடைக் காமவேள் உலகெல்லாங்
தவன்று தன்வலிக் குடைந்துதம் புறந்தரக் கண்டதோர் மிகுவீரன்
வில்லி யற்கவைக் கரும்பும்வெம் பகழிகள் வீயும்விற் குழைநாரி"
(சிவ. பிள்ளைத்தமிழ் 29)

இப்பிள்ளைத்தமிழ் பாடற்பகுதி முன் கருத்தை மேலும் வலியுறுத்துகிறது. அதாவது தன் ஆயுதங்களோடு புறந்தர, அவன் கையில் இருந்த வில் இனிப்புடைய கரும்பு வில்லாகவும், கூரிய அம்பு தேனை உடைய மலராகவும், வில் விளரிப்பண் ஒலிக்கின்ற

குரலை உடைய வண்டுகளாகவும் முடிந்தது என்று மன்மதக் கருவிகளைக் காமத்தை ஏற்படுத்தாது இயல்பாக இருக்கும் வண்ணம் செய்து, வெற்றி கொண்டவர் சிவஞானி என்று கூறி முன்பாடற் கருத்தை வலியுறுத்துகிறது எனலாம். இத்தகைய சிவஞானி,

'வருமடக்கொடி மாதர் கண்வலைப் பட்ட
துயர் மாற்ற அறநெறி கண்டனம் (சிவ.பிள்ளைத்தமிழ், பா. 15)

என்ற பாடற் பகுதி மூலம் காமத்தை மிகுவிக்கும் மாதரை வெல்லுகின்ற அறமொழிகளைத் தருபவர் என்று சிவஞானியைக் குறிப்பிட்டு, காமத்தை நீக்குகின்றவர் என்ற பெருமையைச் சிவஞானிக்குச் சேர்க்கின்றது. நாவுக்கரசரின் வடிவையோ அல்லது அவர் பாடிய தேவாரத்தையோ, அல்லது அவரது பெயரையோ வணங்கவோ, பாடவோ, சொல்லவோ முனைந்தால் காமத்தை வெல்லலாம் என்ற இப்பாடலின் பொருளுக்கேற்ப, வீரசைவக் குருவாகிய சிவஞான பாலய சுவாமிகளின் பெயரில் உள்ள முதல் இரண்டு எழுத்துக்களைச் சொன்னாலேயே பாவங்கள் நீங்கி வாழலாம் என்ற கருத்தையும் சிவப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தோ நம்மால் செய்யப் பட்ட
உய்ய அரிய பாதகங்கள்
ஒழிக்கும் உபாயம் இலை என்று
நையும் மனிதர் நினதுதிரு
நாமத்து எழுவாய் எழுத்து இரண்டும்
பைய ஒறுகால் இயம்பி உய்யப் பற்றார் (சிவ.கலம். 28)

என்ற பாடற் பகுதி சிவஞான பாலய சுவாமிகள் என்ற பெயரில் தலை எழுத்துக்களாய் இருக்கின்ற சி, வ என்ற இரண்டு எழுத்துக்களையே ஒருமுறை கூறினால் பாவங்கள் நீங்கி வாழலாம் என்ற பொருளமைப்பைத் தருகிறது.

நால்வர் நான்மணிப் பாடல் காம இன்பத்தை நீக்கத் திருநாவுக்கரசரை வழிபட்டால் போதும் என்று கூறுவது போல, வீரசைவ நோக்கில் வீரசைவக் குருவாக விளங்கும் சிவஞான பாலய சுவாமிகளை வணங்கியோ, அல்லது அவரின் பெயரில் இருக்கின்ற இரண்டு எழுத்துக்களாகிய சி,வ என்ற எழுத்துகளைக் கூறியோ, பெண்ணாசை என்ற பாவத்தை நீக்கிக் கொள்ளலாம் என்பது

பெறப்படுகிறது. எனவே இப்பாடல் வீரசைவ நோக்கில் ஒப்பிட்டுக் காணக்கூடிய பாடலாக விளங்குகிறது எனலாம்.

அருஞ்சொற் பொருள்

துடை - பெண்களின் தொடை, அல்குல் - பெண்மை உறுப்பு, நச்சு - விரும்புதல், உரகம் - பாம்பு.

பாடல் - 27

அரசன் பரிமேல் வரநெடுநல்
யானை எருத்தத்து அமர்ந்துபோய்
வரதன் கயிலைமலை அடைந்த
மணியே மணிநீர் இடுபசும்பொன்
திரைசங்கு எறியும் குளத்துவரச்
செங்கல் செம்பொனாப் பாடும்
பரிசு இன்று எனக்குஉன் செம்பவளத்
திருவாய் மலர்ந்து பகர்வாயே.

இப்பாடல் சுந்தரமூர்த்தியாரைப் போற்றிப் பாடிய விருத்தப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

சேரமான் பெருமாள் நாயனார் குதிரைமேல் அமர்ந்து தன்னை வணங்கி வர, உயர்ந்த நல்ல வெள்ளை யானையின் பிடரிமேல் அமர்ந்து சென்று வரங்கொடுப்பதில் வல்லவனாகிய சிவபெருமானுடைய திருக்கயிலை மலையை அடைந்த மாணிக்க மணியே, (சுந்தரமூர்த்தி) விருத்தாசலத்தில் இறைவன் அருளால் கிடைத்த பொன்னை மணிமுத்தாற்றில் போட்டு திருவாரூர்க் குளத்தில் வருமாறு பாடவும், திருப்புகலூரில் இரண்டு செங்கற்களை எடுத்துத் தலையணையாக வைத்துத் துயிலும் பொழுது, செங்கற்கள் செம்பொன் ஆயின. இத்தகைய செயல்கள் நிகழுமாறு பாடவும் நீ அமைத்துக் கொண்ட முறையாது? என்பதைத் தாங்களே எனக்குத் தங்கள் செம்பவளம் போன்ற திருவாயால் சொல்லி அருளுக.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடலில் சுந்தரமூர்த்தியாரின் வரலாற்றில் நிகழ்ந்த வியக்கத் தக்க அருட்செயல்கள் கூறப் பெற்றுள்ளன.

1. வெள்ளை யானையின் மீது கயிலைக்குச் சென்றது.
2. ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தது.
3. தலையணைச் செங்கல்லைப் பொன் கல்லாக மாற்றியது.

இத்தகைய அருட்செயல்கள் சுந்தரமூர்த்தியார் வாழ்க்கையில் நிகழ, அவர் எத்தகைய பணியைச் செய்தார் என்று சிவப்பிரகாசர் கேட்பது போல் அமைந்துள்ளது. இப்பாடலின் அடிப்படைக் கருத்து, சுந்தரமூர்த்தியார் செய்த செயல்கள் திருவருள் துணையோடு கூடிய அருட்செயல்களாகும்.

வீரசைவ சமய ஞானகுருவாக விளங்கும் சிவஞான பாலய சுவாமிகளும் அரிய செயல்களை இறையருளுடன் செய்திருக் கிறார்கள். நம் பொம்மபுரத் திருமட வரலாற்று நூலில், சிவஞானி செய்த அருஞ்செயல்களாகக் காஞ்சிபுரத்தில் விடம் தீண்டி இறந்தவனை உயிர்ப்பித்தமை, காஞ்சிபுரப் பகுதியை ஆண்ட நவாபுவின் மனைவிக்கு ஏற்பட்ட சூலை நோயைத் திருநீற்றால் போக்கியமை, செய்யூருக்குச் சென்ற பொழுது அங்குள்ள சிலர் கல்லும் மணலும் கலந்து வைத்த குடத்தைக் கொடுக்க, சுவாமிகள் அதைச் சர்க்கரை உள்ள குடமாக ஆக்கியமை, மதுரையில் தையல்காரன் மனைவியுடன் பிள்ளைப்பேறு இன்றி இருந்து, வயது முதிர்ந்த காலத்தில் சுவாமியை வணங்கி இளமையை மீண்டும் பெற்றுக் குழந்தை பெற்றமை என்பன போன்ற அருஞ்செயல்கள் குறிக்கப் பெறுகின்றன. இத்தகைய செய்திகளைத் தவிர, சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத் தமிழில் சிவஞானி செய்த அருஞ் செயல்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் சிவப்பிரகாசர்.

பெருமுடக் கானிமிர்ந் ததுகூன் நிமிர்ந்தது பிணிகள்பல பலபோயின
பிடித்திருந் தெவரானும் அகலாது துயர்செய்த பேயகன் றிட்டதம்மா!
அருமகப் பெற்றுவந் தணமிடி யகன்றனம் அகிலம் புரக்கவருமோர்
அரசெய்தி னஞ்சென்று வென்றெய்து தற்குமிக அரியபகை
வென்றெய்தினம்" (சிவ.பிள்ளைத்தமிழ் 15)

இப்பாடற் பகுதியில் சிவஞானி கால்முடங்கலை நிமிர்த்தியிருக்கிறார், உடல் கூனை நிமிர்த்தியிருக்கிறார், பல நோய்களைத் தீர்த்திருக்கின்றார், மனிதனைப் பிடித்த பேயை ஓட்டியிருக்கிறார், குழந்தைப்பேறு கிடைக்கச் செய்திருக்கிறார், வறுமையைப் போக்கியிருக்கிறார், நல்ல அரசாட்சியைப் பெற

வைத்திருக்கிறார் என்றெல்லாம் மக்கள் கூறி ஆரவாரம் செய்ததைக் குறிப்பிடுகிறது.

எனவே சைவத் தலைவர் சுந்தரமூர்த்தியார் செய்த அருஞ் செயல்களைப் போல வீரசைவ ஞானாசிரியராக விளங்கும் சிவஞான பாலய சுவாமிகளும் பல அரிய செயல்களை நடத்தி, வீரசைவப் பெருமையை நிலைநாட்டியிருக்கிறார் என்பதை அறிய முடிகிறது. எனவே இந்த நால்வர் நான்மணிப்பாடலை ஒத்த செய்தியை வீரசைவக் குருவிடமும் காண முடிகிறது என்பதால், வீரசைவப் பெருமை புலப்படுகிறது எனலாம்.

அருஞ்சொற் பொருள்

அரசன் - சேரமான் பெருமாள் நாயனார், பரிமேல் - குதிரை மேல், எருத்தத்து - பிடரி, வரதன் - வரம் தருகின்றவன், நீர்இடும் - ஆற்று நீரில் இடும், திரை - அலை, குளத்து - திருவாரூர்க் குளத்து, பாடும் - பாடிய திறம், பகர்வாய் - கூறுவாய்.

பாடல் - 28

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரின் அழுங்கி
நெஞ்ச நெக்குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந்து உள்ளக் கவலை தீர்ந்தேனே
அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கை
வாதவூர் அன்ப ஆதலாலே
தெய்வப் புலமை திருவள் ளுவனார்
நன்று அறிவாரில் கயவர் திருவுடையார்
நெஞ்சத்து அவலம் இலர் எனுஞ்
செஞ்சொல் பொருளின் தேற்று அறிந்தேனே.

இப்பாடல் மாணிக்கவாசகரைப் போற்றும் விருத்தப்பா ஆகும்.

முன்னை உரையாசிரியர் உரை

அன்னங்கள் விளையாடுவதற்கு ஏற்ற பெரிய வழிகள் அமைந்த பொய்கையை உடைய திருவாதவூரில் அவதாரம் செய்த அன்பரே! மூன்றாம் பிறையானது தவழும் நிலையுடையதும்,

பவளம் போல் செம்மை வாய்ந்ததும், நீண்டதும் ஆகிய சடையை உடைய சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றிருந்தும், பெறாதவர்களைப் போல வருந்தி, மனம் ஒடிந்து உருகி நின்று கொண்டிருக்கின்றீர். ஆனால் உலக வாழ்வை விடாமல் பிடித்துக் கொண்டு உழல்வதில் பேய் போலும் தன்மை உடைய நான், அவனது திருவருளைச் சிறிது கூடப் பெறாதிருந்தும், பெற்றவர் போலவே பெருமகிழ்ச்சியில் திளைத்து, மனதில் எத்தகைய துயரமும் இல்லாது ஒழிவேன். ஆகையால் தமக்கு உறுதியானவை இவை, உறுதி பயவாதவை இவை என்பனவற்றை அறியும் அறிஞர்களை விட அவைகளை அறியாத கீழ் மக்கள் நன்மையுடையவர். ஏனெனில் அறிந்ததன் காரணமாகத் தோன்றும் கவலை அவர்களுக்கு இல்லை என்று தெய்வப் புலமை சான்றவராகிய திருவள்ளுவனார் கூறிய செஞ்சொல் தரும் பொருளை ஆராய்ந்து உணர்ந்தேன்.

பாடல் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

சிவப்பிரகாசர் திருக்குறளில் அளவற்ற பற்றும் பயிற்சியும் உடையவர். தன்னுடைய நூல்களில் திருக்குறளின் கருத்துக்களை இடம்பெறச் செய்வதோடு, திருக்குறள் பாடலை அப்படியே கையாளுகின்ற வழக்கமும் உடையவர். நால்வர் நான்மணி மாலையில் இரண்டு இடங்களில் திருக்குறள் மூலத்தை முழுமையாக இடம்பெறச் செய்துள்ளார்.

> நன்றுஅறி வாரின் கயவர் திருவுடையார்
> நெஞ்சத்து அவலம் இலர் (குறள் 1072)

என்ற குறட்பா இடம்பெற்றுள்ள இப்பாடல் ஒன்று. மற்றொன்று ஞானசம்பந்தரைப் போற்றும் பாடல் 33-இல்,

> அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
> பொறுத்தானோடு ஊர்ந்தா னிடை (குறள் 37)

என்று திருக்குறள் முழுமையாக எடுத்தாளப் பெற்ற இரண்டாவது பாடலாகும். இப்பாடலில் மாணிக்கவாசகரையும் தம்மையும் சிவப்பிரகாசர் ஒப்பிட்டுக் காணுகின்றார். மாணிக்கவாசகரை உயர்வாகச் சிறப்பித்துத் தன்னைப் பேயேன் என்று தாழ்த்தி, தன் பணிவைக் காட்டுகிறார். இப்பாடலின் கருத்தை ஆழ்ந்து நோக்கும் பொழுது, எந்த ஒரு ஆன்மா பணிவுடையதாக இருக்கின்றதோ

அந்த ஆன்மா இறைவனின் திருவருளைப் பெறும் என்ற கருத்தை வலியுறுத்துவதை உணரலாம். எவ்வாறென்றால் மாணிக்கவாசகர் அழுங்கி நெஞ்சம் நெக்குருகி நிற்கிறார் என்று கூறி, தான் களிப்பு மிகுந்து கவலை இல்லாது, தற்பவம் கொண்டவனாய்த் திரிவதாய்க் கூறி, மாணிக்கவாசகரின் பணிவுடைத் தன்மையையும், தன்னுடைய பணிவற்ற தன்மையையும் குறிப்பிடுகிறார் எனலாம். திருவள்ளுவப் பேராசான் எல்லார்க்கும் நன்றாம் பணிதல் என்று கூறுவது போல, மாணிக்கவாசகர் இறைவன் திருவருள் பெற்றும் பெறாதவரைப் போலப் பணிந்து நிற்கின்றார்.

நல்லாற்றூர் சிவப்பிரகாசர் தன்னைப் பேயேன் என்று கூறுவதிலும் கவிநயம் உள்ளது. பேய் என்பது கொண்டது விடாது. அதுபோல உலக வாழ்க்கையில் பற்றுக் கொண்ட தான் அதனை விடாது வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார்.

மாணிக்கவாசகர் பிறந்த ஊரைக் குறிப்பிடும் பொழுது, அன்னங்கள் விளையாடுகின்ற நீர்த்துறையை உடைய பொய்கை கொண்ட திருவாதவூர் என்று குறிப்பிடுகின்றார். இந்த வருணனையும் ஒரு குறிப்பைத் தருகிறது. அன்னப் பறவை பாலும் தண்ணீரும் கலந்திருந்தால், தண்ணீரை நீக்கிப் பாலை மட்டும் உண்ணும் என்று கூறுவர். அதுபோல மாணிக்க வாசகரும் தன்னுடைய பிறவிப் பயனால் தமக்கு வந்த தீவினைப் பயன்களை எல்லாம் நீக்கி, இறைவனின் திருவருளிலேயே அழுந்தி, நெஞ்சம் நெக்குருகி வாழுகின்றவர் என்ற குறிப்பும் பெறப்படுகிறது.

திருவள்ளுவரைக் குறிப்பிடும் பொழுது தெய்வப் புலவர் என்ற அடைமொழியைப் பாடலில் சிவப்பிரகாசர் கையாண்டுள்ளார். இது நான்கு வேதங்களை அளித்த சிவபெருமானின் தெய்வப் புலமை போல, திருவள்ளுவரும் தமிழுக்கு வேதநூல் போலத் திருக்குறளைத் தம் தெய்வப் புலமையால் தந்துள்ளார் என்ற குறிப்பு பெறப்படுகிறது.

மாணிக்கவாசகரை நினைக்கின்ற பொழுது, நன்றறிவார் என்று தொடங்கும் திருக்குறள் நினைவிற்கு வர, அக்குறட்பா வாழ்வின் அனுபவமான சொல் என்பதால், செஞ்சொல் என்று குறிப்பிட்டு அச்செஞ் சொற்பொருளைத் தன் வாழ்க்கையில்

அனுபவித்ததாகச் சிவப்பிரகாசர் கூறுவதும் நினைவு கூறத் தக்கதாம்.

வீரசைவ நோக்கில் பாடற்பொருள்

மாணிக்கவாசகர் உயர்ந்திருந்தும் தன்னைப் பணிவுடைய எளியவனாகக் காட்டிக் கொண்டிருப்பது இப்பாடலின் கருத்து என்பதால், இக்கருத்து வீரசைவக் கொள்கையோடு ஒப்பிடக் கூடியதாக அமைந்துள்ளது. வீரசைவக் கொள்கைகளில் சிறப்பிடம் பெறுவது ஐவகை ஒழுக்கமும் எண்வகைக் காப்புமாகும். இவை இரண்டையும் பற்றி திரு.வை.ரா. அவர்கள் தன் வீரசைவ நூலில் குறிப்பிடும் பொழுது,

“வீரசைவத் துறையில் ஐவகை ஒழுக்கம் முதற்படி. எண்வகைக் காப்பு இரண்டாம்படி. ஐவகை ஒழுக்கம் என்ற முதற்படியில் நின்று வெற்றி எய்தினால் சீவன் ஆத்மன் ஆவான். எண்வகைக் காப்பினால் அங்கனாம் நிலைமை பெறுகின்றான்” என்று குறிப்பிடுகிறார்.(ப.156) இவ் ஐவகை ஒழுக்கமாவன - இலிங்கா சாரம் -இலிங்கஒழுக்கம், சதாசாரம் - தன்நிறுத்தல் ஒழுக்கம், சிவாசாரம் - சிவஒழுக்கம், பிருத்யாசாரம் - தாழ்வு எனும் சைவ ஒழுக்கம், கணாசாரம் - கூட்டமைப்பு ஒழுக்கம் எனக் குறிப்பிடுவதுண்டு.

இதில் தாழ்வு எனும் தகைவு என்பது எல்லா உயிர்களிடத்திலும் பணிந்து பழகுதல் வேண்டும் என்ற ஒழுக்கமாகும். மேலும் உலக உயிர்களுக்குத் தான் ஒரு பணியாளனாக உணர்தல் வேண்டும். எல்லோரையும் சமமாகக் கருதுதல் வேண்டும் என்பவற்றை இவ்வொழுக்கத்திற்குரிய கொள்கைகளாகக் கூறுவர் (வீரசைவம், ப.153). இதன் அடிப்படையில் வீரசைவக் கோட்பாட்டில் தன்னைத் தாழ்த்திக் கொண்டு பிறருக்குப் பணிசெய்ய வேண்டும் என்ற கொள்கையை இப்பாடல் வலியுறுத்துவதாகக் கொள்ளலாம். பிரபுலிங்க லீலையில் அக்காப்பியத்தின் தலைவராகிய அல்லமப் பிரபு, கொக்கி தேவரிடம் தன்னை அறிமுகப் படுத்தும் பொழுது,

“பத்தர்தம் மனைதொறும் பக்தி பிச்சை கொண்டு
எத்திற வினையும் இன்றி இருப்பர் அல்லமன் உத்தமன் என்பெயர்”
(பிரபுலிங்க லீலை பா. 600)

என்று அல்லம தேவராகத் தன்னைக் காட்சிப் படுத்தும் பொழுது எளிமைத் தன்மை வலியுறுத்தப் பெறுகிறது. எனவே, இப்பாடலை வீரசைவ நோக்கில் காணும் பொழுது, மாணிக்கவாசகரின் எளிமைத் தன்மையைக் குறிப்பிட்டு, வீரசைவக் கொள்கையில் ஐவகை ஒழுக்கத்தில் ஒன்றான பிருத்தியாசாரத்தைச் சிவப்பிரகாசர் நினைவூட்டுகிறார் எனலாம்.

அருஞ்சொற் பொருள்

பகிர்மதி - குறைந்த மதி(பிறைச்சந்திரன்), அழுந்தி - வருந்தி, களி - மகிழ்ச்சி, துறை - நீர்த்துறை, திருவுடையார் - நன்மை உடையார், அவலம் - துன்பம்.

பாடல் - 29

தேன்ஏறு அலர்சூடிச் சில்பலிக்கு என்று ஊர்திரியும்
ஆன்ஏறி யாண்டுப் பெற்றான்கொல் நீ தான்ஏறும்
வெள்ளைமணி என்று வினாவுவோம் வாங்கியஅப்
பிள்ளையை யாம் காணப் பெறின்

இது திருஞானசம்பந்தரைப் போற்றும் வெண்பாப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

தேன் மேல்நோக்கி எழுந்து விழும் தன்மையுடைய கொன்றை மலர்களைச் சூடிக்கொண்டு, சிறு பிச்சையாக வீடு தோறும் திரிபவனும், காளையை வாகனமாகக் கொண்டவனும் ஆகிய அப்பரமன், தாங்கள் ஊர்ந்து வரும் வெண்முத்துச் சிவிகையை எங்கு பெற்றான் என்று அதனை வாங்கிய அத்திருஞான சம்பந்தப் பிள்ளையை யான் காணும் பேறு பெற்றால் கேட்போம்.

பாடல் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடலில் சில்பலிக்காக வீடுகள் தோறும் பிச்சை ஏற்கும் சிவபெருமான், திருஞானசம்பந்தருக்கு முத்துச் சிவிகையைக் கொடுத்தது வியப்பாக இருக்கிறது என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுவதைப் பொருளாகக் கொண்டுள்ளது எனலாம். அதாவது பிச்சை ஏற்கும் வறுமை உடையவர் செல்வச் செழிப்பான முத்துச் சிவிகை எவ்வாறு கொடுக்க இயலும்? என்று கேட்பது போல் அமைந்துள்ளது.

இப்பாடலில் இடம்பெற்ற சில் பலி என்பது சிந்தனைக்கு உரியதாகும். சில்பலிக்கு நேரான பொருள் சிறிய பிச்சை என்பதாகும். தாருகா வனத்து முனிவர்களின் செருக்கை அடக்குவதற்காகத் தன்னைப் பிச்சை ஏற்பவனாக மாற்றிக் கொண்ட சிவபெருமானின் சிறப்பு மிக்க தன்மையை அச்சொல் உணர்த்துகிறது. தாருகா வனத்து முனிப் பெண்களும் அடியவர்களுக்குப் பிச்சை அளிப்பதற்கு உரியவர்களாக வாழ்ந்தார்கள் என்பதும், அப்புராண வரலாற்றால் அறிய முடிகிறது. எனவே இந்தச் சில்பலி என்ற சொல், அடியவர்களுக்கு உணவிட்டு வாழ்தல் வேண்டும் என்பதையும், அடியவர்கள் சிவபக்தியை உடையவர் இல்லங்களில் பிச்சையாக உணவை ஏற்று உண்ணலாம் என்பதையும் வெளிப்படுத்துகிறது. எனவே அடியவர்க்கு உணவிடும் ஒழுக்கத்தை இப்பாடல் வலியுறுத்துகிறது.

மேலும் சிவபெருமான் தான் ஏறுவதற்கு இடபத்தைக் கொண்டவர் என்றாலும், தன் அருள் பெற்ற பிள்ளை திருஞானசம்பந்தர் முத்துச் சிவிகையில் ஏறிவர அருள் புரியும் உயர்ந்த கருணை உடையவர் என்பதும் பெறப்படுகிறது. சிவப்பிரகாசர் தனக்கு முன்னே வாழ்ந்த திருஞானசம்பந்தரை மீண்டும் காணவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் என்பதையும் இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

வீரசைவ நோக்கில் பாடற்பொருள்

இப்பாடல் பிச்சை இடுவதையும் பிச்சை ஏற்பதையும் உட்பொருளாக வலியுறுத்துவதால் இப்பாடலை வீரசைவ நோக்கில் காண்பது சிறப்புடைத்தாம். வீரசைவ மரபில் பிரசாத குண்டம் என்ற அமைப்புச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. பிரசாத குண்டம் என்பதற்குப் பிறர் உரை எவ்வாறாக இருந்தாலும், பிரபுலிங்க லீலை உரையாசிரியர் பேராசிரியர் அடிகளாசிரியரின் குறிப்புரை பெரிதும் நினைவு கொள்ளத் தக்கதாகும்.

"வீர சைவர்கள் உணவு உண்டபிறகு அதில் மீதி வைத்து வீணாக்கக் கூடாது என்ற அடிப்படையில் உண்ணும் உணவை முழுதாக உண்ட பிறகு, உண்கலத்தில் ஏதேனும் மிச்சமிருந்து வீணாகப் போகிறது என்று எண்ணி, அதில் தண்ணீரை ஊற்றிக் கழுவிக் குடித்து விடுகிற மரபு உண்டு.

எனவே பிரசாத குண்டம் என்பதற்கு உண்ட எச்சிலைச் சேகரித்து வைக்கும் குண்டம் என்று கொள்ளக் கூடாது. சங்கமராம் அடியவர்களுக்கு உணவு படைக்கப் பெற்று அவர்கள் உண்ட பிறகு, ஆக்கிய உணவில் மிச்சம் இருக்கும் உணவைச் சேகரித்து வைக்கும் பண்டமுடைய குண்டம்தான் பிரசாத குண்டம் என்று கொள்ள வேண்டும் என்று உரைத்திருப்பது படித்து அறியத் தக்கதாகும். (பா. 784)

பிரசாத குண்டம் பற்றிய பிரபுலிங்கப் பாடலை இங்கு நினைவு கொள்ளுவது சாலப் பொருத்தமாகும்.

தொழிலால் முயன்று நுகர்வம் எனில் துயர்
ஒன்று உயிர்க்கு விளையுமென
ஒழியா அமல சரமூர்த்தி
உண்ட மிச்சில் நுகர்வம் எனில்
பழியா துமிலை அன்றுபோம்
பவமும் என்னப் பிரசாதக்
குழியான அதனை அகலாமல்
கொண்டிங்கு இருந்தான் குணமிக்கான்.

(பிரபுலிங்க லீலை,பா.784)

இப்பாடலில் உழைத்துத் தேடிப் பெற்ற பொருளால் உணவு உண்ணும் பொழுது,(சாதாரண வாழ்க்கையில்) உடலுக்கு நோய் ஏற்படலாம். ஆனால் அமலசர மூர்த்தி எனப்படும் அடியவர்கள் உண்டு எஞ்சிய பிரசாத உணவை உண்டால் பழியேதும் இல்லை. மேலும் செய்த பாவங்களும் தீரும் என்பது வலியுறுத்தப் பெறுகிறது.

எனவேதான் பிரபுலிங்க லீலையில் ஒரு பாத்திரமான மருளசங்கர தேவர் என்பார் பிரசாத குண்டத்தைக் காத்துக் கொண்டு, அதனைத் தேவைப்படுகின்ற சமுதாய மக்களுக்குக் கொடுக்கின்ற தொழிலைச் செய்து வந்தார் என்ற செய்தி இடம் பெற்றிருக்கின்றது.

எனவே இப்பாடலில் சில்பலி என்ற பதம் மூலம் எண்வகைக் காப்பில் இறுதியான பிரசாதம் பற்றிய வீரசைவக் கொள்கை பிரசாத குண்டம் மூலமாக வெளிப்படுவது நினைவு கொள்ளத் தக்கதாகும்.

அருஞ்சொற் பொருள்

தேன்ஏறு - தேன்மிகுந்து மேற்பக்கம் துளிர்க்கும், அலர் - கொன்றைமலர், சில்பலி - சிறிய பிச்சை, ஆன் - இடபம், வெள்ளை மணி - வெண்மையான முத்துச் சிவிகை.

பாடல் - 30

பெற்றால் நினைப் பெற்றவர்போல் பெறலும் பிறப்பது உண்டேல்
நல் தாரணியில் நினைப்போல் பிறப்பது நல்ல கண்டாய்
செற்றார் புரம்எரி செய்த வில்வீரன் திருப்பெயரே
பற்றா மறிவெண் திரைக்கடல் நீந்திய பாவலனே.

இப்பாடல் திருநாவுக்கரசரைப் போற்றும் கட்டளைக் கலித்துறைப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

பகைவர்களுடைய திரிபுரங்களை எரித்த வில் வீரனாகிய சிவ பெருமானுடைய திருப்பெயராகிய திருஐந்தெழுத்தையே துணையாகக் கொண்டு, மதித்து வீசும் வெண்மையான அலைகளைக் கொண்ட சமுத்திரத்தைக் கடந்த பாவலராகிய திருநாவுக்கரசுப் பெருமானே, இப்பூவுலகில் பெற்றவர் என்ற நிலையில் நின்று புகழ் எய்த விரும்பினால், உம்மைப் பெற்றவர் என்ற பேற்றைப் பெறுதலும், பிறத்தல் என்ற நிலையில் புகழ்பெற விரும்பினால் உம்மைப் போலப் பிறத்தலும் சிறந்தன.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடலில் சிவப்பிரகாசர் ஆன்மீக உணர்வுடைய குழந்தைகளைப் பெற்று வாழவேண்டும், அதுபோலக் குழந்தைகளுக்கு ஆன்மீக உணர்வுடைய பெற்றோர்கள் அமைய வேண்டும் என்ற தன்னுடைய உள்ளக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் சைவத் திருமந்திரமாம் திருஐந்தெழுத்தைக் கூறி, உலக வாழ்வில் ஏற்படும் துன்பங்களை எல்லாம் தீர்த்துக் கொள்ளலாம் என்ற தமது அனுபவத்தையும் பாடலில் குறிப்பிடுகிறார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் சமண மதத்திலிருந்து சைவத்திற்கு மாறிய பொழுது, அவருக்கு நிறைவாகச் சமண அரசரால் அளிக்கப் பெற்ற தண்டனை கல்லில் கட்டிக் கடலில் எறிந்ததாகும். அந்தத்

தண்டனையில் இருந்து நற்றுணையாகும் நமசிவாயத்தை நவின்று கரையேறிய திருவருட் செய்தியைச் சிவப்பிரகாசர் குறிப்பிடும் பொழுது, நாவுக்கரசர் பாடிய அப்பதிகம் நம் நினைவிற்கு வரும். அதில் ஒரு பாடல்,

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க் கெலாம்
நலமிலன் நாடொறும் நல்குவான் நலம்
குலமிலன் ஆயினும் குலத்திற்கு ஏற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமசிவாயவே (நமசிவாயப் பதிகம் பா. 6)

சிவபெருமான் அனைத்து உயிர்களுக்கும் நலத்தைச் செய்வதால் சங்கரன் என்ற திருநாமம் பெற்று, தன்னுடைய ஐந்தெழுத்தைச் சொல்லுகின்ற ஆன்மாக்களுக்கு நலமிலன் என்ற நிலையில் ஆகாமிய வினையைத் தாராது அருள் புரிவான் என்ற உட்பொருளை இப்பாடல் கொண்டுள்ளது.

அதைப் போலவே சிவப்பிரகாசரின் இப்பாடலும் ஆன்மீக உணர்வுடைய மகவினையும், பெற்றோரையும் நினைவு படுத்தும் உட் பொருளைக் கொண்டிருக்கிறது. முப்புரங்களை எரித்த சிவபெருமான், வில்லை வளைத்து முப்புரங்களை எரிக்காது, தன் புன்சிரிப்பாலேயே முப்புரங்களை எரித்தவன் என்பது வரலாறு. என்றாலும் சிவப்பிரகாசர் சிவபெருமானைப் புரம் எரிசெய்த வில்வீரன் என்று குறிப்பிட்டிருப்பது நினைவு கூரத் தக்கதாகும்.

வீரசைவ நோக்கில் பாடற் பொருள்

ஐந்தெழுத்தின் பெருமையை இப்பாடல் குறிப்பிடுவதைக் கொண்டு, வீரசைவ நோக்கில் இப்பாடலுக்குப் பொருள் காணும்பொழுது, வீரசைவ மரபினர் மேற்கொள்ளும் எண்வகைக் காப்பில் அமைந்துள்ள மந்திரம் என்ற காப்பு அறிய வரும். வீரசைவ மரபில் ஐவகை ஒழுக்கம் முதற்படியாக அமைய, எண்வகைக் காப்பு என்னும் அட்டாவரணம் இரண்டாம் படியாக அமைந்து ஆத்மாவை அங்கன் ஆக்குகிறது. அதில் மந்திரம் என்ற மூன்றாவது காப்பு நினைப்பவரைக் காப்பது என்ற பொருளைத் தரும். சிவப்பிரகாசர் இம் மந்திரம் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

'பேதமாம் ஏழுகோடி மந்திரங்களின் பெரிதாம்
போத ஐந்தெழுத்தாகிய புனித மந்திரம்"

(வீரசைவம், திருமட வெளியீடு,ப.43)

என்று பதிவு செய்துள்ளார். ஐந்தெழுத்தைப் பற்றி வீரசைவ மெய்ப்பொருள் குறிப்பிடும் பொழுது, உச்சரிப்பு முறையில் நமசிவாய என்றே முதலில் ஓத வேண்டும், பின்னர் சிவாயநம என்று ஓதவேண்டும் என்று வரையறை செய்கிறது.

முன்னர் ஓதுக நமவென விளம்புறு மொழியை
பின்னர் ஓதுக சிவாய என்று

என்பது சித்தாந்த சிகாமணி கூறும் மரபாகும். இந்த மரபுப்படி வீரசைவர்கள் தம் வாழ்க்கையில் மந்திர உபதேசம் பெற்ற பிறகு, நமசிவாய என்று ஓதுதல் வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப் பெறுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகளும் கடலிலிருந்து கரையேறும் பொழுது சொல்லிய மந்திரம் நமசிவாயவே என்பது அப்பதிகத்தால் பெறப்படுகிறது.

எனவே இந்தப் பாடல் வீரசைவ மரபுப்படி நமசிவாய மந்திரத்திற்கு முக்கியத்துவம் தந்து பாடப் பெற்றிருப்பதால் வீரசைவ நோக்கில் நமசிவாய மந்திரத்தின் பெருமையைச் சொல்லுகின்ற பாடலாக இப்பாடலைக் கொள்ளலாம்.

அருஞ்சொற் பொருள்

தாரணியில் - உலகில், செற்றார் - பகைவர், வெண்திரைக் கடல் - வெண்மையான நுரைகளைக் கொண்ட அலைகளை உடைய கடல், பாவலன் - பாடலைப் பாடிய நாவுக்கரசு சுவாமிகள்.

பாடல் - 31

பாவாய்ப் பொழிந்த வான்அமுதப்
பவளத் திருவாய் நம்பிநீ
சேவாய்ப் பொருதும் தருமம்உடைத்
தேவன் மலைக்குப் போம்பொழுது
காவாய்ப் பயந்த தடக்கைமலர்க்
கழறிற்று அறிவார் கடாவிவரு
மாவாய்ப் பிறக்கக் கிடையாதே
மாவாய்ப் பிறக்குந் திருமாற்கே.

இப்பாடல் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் போற்றிப் பாடிய விருத்தப்பா ஆகும்.

முன்னை உரையாசிரியர் உரை

உயர்ந்த அமுதமாகிய முத்தி இன்பத்தைத் தேவாரப் பாடல்களாகச் சொரிந்த பவளம் போன்ற திருவாயினை உடைய வள்ளலாம் நம்பி ஆரூரர், இக்கலியுகம் முடியும் காலத்துக் குதிரை முக வடிவமாகப் பத்தாவது அவதாரத்தை மேற்கொள்ள இருக்கும் திருமாலுக்குத் , தாங்கள் தரும தேவதையைச் சண்டையிடும் வன்மை வாய்ந்த இடபமாக ஆக்கி, அதனைத் தனது ஊர்தியாக உடைய தேவனாம் சிவபெருமானின் மலையாகிய கயிலை மலைக்கு எழுந்தருளும் பொழுது, கற்பகத்தரு என வேண்டுவார்க்கு வேண்டியன நல்கும் பெருந்தகைமை வாய்ந்த, கை மலர்களை உடைய சேரமான் பெருமாள் நாயனார் செலுத்தி வரும் குதிரையாகப் பிறக்கும் பேறு கிட்டாது என்பதாம்.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடலில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பெருமையோடு, அவரது நண்பராக விளங்கிய கழறிற்றறிவார் என்னும் சேரமான் பெருமாள் நாயனாரின் சிறப்பையும் உடன் சேர்த்துக் கூறியுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் கயிலைக்குச் சீவன்முத்தர் வடிவத்தில் செல்லுவதை அறிந்த சேர அரசன் ,தானும் அவருடன் திருக்கயிலை சென்று முத்தி அடையவேண்டும் என்ற எண்ணத்தில், தான் செலுத்திய குதிரையின் காதுகளில் ஐந்தெழுத்தைக் கூறிட, அக்குதிரையும் திருக்கயிலை சென்று சேர்ந்தது. இது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்றுப் பகுதியாகும். பாடலின் பிற்பகுதியில் சிவப்பிரகாசர் திருமாலின் பத்தாவது அவதாரமான கல்கி அவதாரத்தைக் குறிப்பிட்டு, அதாவது குதிரை முகம் கொண்ட அவதாரத்தைத் திருமால் எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கும் பொழுது சேரமான் ஏறிச் செலுத்திய குதிரையைப் போலப் பெருமை கொண்ட குதிரை அவதாரத்தைத் திருமால் எடுக்க முடியாது என்று குறிப்பிடுகிறார்.

இதன் சிறப்பு சிவபெருமானின் அருள் பெற்ற அடியவரின் பெருமையை, சிவபெருமானின் ஆணை பெற்றுக் காத்தல் தொழிலைச் செய்யும் திருமால் பெறமுடியாது என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார். சிவபெருமானின் வாகனத்தைக் குறிப்பிடும் பொழுது, தருமதேவதை ஊழிக் காலத்தில் தானும் அழிய

வேண்டுமா என்று சிவபெருமானைக் கேட்ட பொழுது, அழியாது தன்னுடைய எருது வாகனமாக அமைந்திருப்பாய் என்று கூறிட, தருமதேவதை சிவபெருமானுக்கு வாகனமாக அமைந்து கயிலையில் வாழ்கிறது. ஆனால் அவரின் அருள் பெற்ற சேரமான் பெருமாள் ஏறிச் செலுத்திய வாகனம் சாதாரணக் குதிரையாகும். அக்குதிரை கயிலை செல்ல வலிமை பெற்றதற்குக் காரணம் ஐந்தெழுத்து மந்திரத்தின் ஆற்றலாகும். இதனைக் குறிப்பாகச் சிவப்பிரகாசர் உணரவைக்கிறார்.

மேலும் சேரமானின் சிறப்பைக் குறிப்பிடும் பொழுது காவாய்ப் பயந்த தடக்கை என்று குறிப்பிட்டுக் கற்பக மரத்தோடு கொடை உள்ளம் படைத்த சேரரை ஒப்பிட்டிருப்பது படித்து இன்புறத் தக்கதாகும். மேலும் இப்பாடலில் தேவாரம் பாடிய சுந்தரரின் திருவாயைப் பவளத்திருவாய் என்று குறிப்பிட் டிருப்பது நினைவுகூரத் தக்கதாகும். இவ்வாறு இப்பாடல் பொருள் நயத்தோடு அமைந்து சிவப்பிரகாசரின் கவித்திறனை வெளிப்படுத்துகிறது.

வீரசைவ நோக்கில் பாடற்பொருள்

இப்பாடலில் சிவனடியாரின் குதிரை பெற்ற பெருமை திருமால் பெறவில்லை என்று சிவப்பிரகாசர் குறிப்பிட்டிருப்பது வீரசைவ நோக்கில் பாடற் பொருளைக் கொள்வதற்கு இடந்தருகிறது. வீரசைவ மரபு ஒரே தெய்வம் சிவபெருமான் என்று நாளும் பணிந்து போற்றுகின்ற மரபுடையதாகும். சிவப்பிரகாசர் பல இடங்களில் திருமால் உள்ளிட்ட சிறு தெய்வ நிலைகளை உயர்த்திக் கூறமாட்டார். சிறு தெய்வ வழிபாட்டை ஆன்மாக்கள் வேண்டாது பரம்பொருளையே வேண்டி வணங்க வேண்டும் என்று பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார். சோணசைல மாலையில்,

பணிந்திடும் அயன்மால் பெருமைகள் அனைத்தும்
பறவை கொண்டு எழுதலாய் முடிந்து
தணிந்திட நிமிர்ந்து நின்றிடும் சோண
சைலனே கயிலை நாயகனே" (பா.98)

என்ற பகுதியில், வணங்கப் பெறும் பிரமன், திருமால் பெருமைகள் எல்லாம் அன்னப் பறவையும், கருடப் பறவையும் ஏந்திச்

செல்லுபவராய் அமைந்த குறையுடையது என்று குறிப்பிடு வதையும், சிவப்பிரகாச விகாசத்தில்,

மீண்டு படைப்பொரு காலம் எய்தின் எம்மான்
விளம்பல்உறு பகுதியின் காரியங்கள் ஆற்ற
நீண்ட திருமால் அயனைப் பயந்து அவர்க்கு
நிலையுதவும் என்று இசைப்பர் நெறியுணர்ந்தோர்" (பா.79)

என்ற பகுதியில் இறைவன் ஊழிக்காலத்திற்குப் பிறகு உலகைப் படைக்கும் பொழுது, அதற்குரிய தேவர்களாகச் சிவபெருமான் திருமாலையும், அயனையும் படைப்பான் என்று கூறுவதையும் இங்கு எடுத்துக் காட்டலாம். எனவே இப்பாடல் வீரசைவ மரபிற்கு ஏற்ப முழுமுதல் தெய்வமாம் சிவனைத் தவிர மற்ற தெய்வங்கள் எல்லாம் வணங்குவதற்கும், போற்றுவதற்கும் உரியதாக இருந்தாலும் அவைகள் சிவபெருமானின் பெருமைக்குள் அடக்கம் என்பதைக் குறிப்பிடுவதால், வீரசைவ நோக்கில் இப்பாடல் குறிப்பாக அமைந்துள்ளது.

அருஞ்சொற் பொருள்

வானமுதம் - முத்திஇன்பம், சே - எருது, தேவன்மலை - கயிலாயம், கா - கற்பகமரம், கடாவி - செலுத்தி, மா - குதிரை.

பாடல் - 32

திருஆர் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நீழல்வாய் உண்ட நிகர்இல் ஆனந்தத்
தேன்தேக்கு எறியும் செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத்து ஆதலின்
பொற்கலம் நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும் மதுர வாசகம்
ஓதின் முத்தி உறுபயன்
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே.

இப்பாடல் மாணிக்கவாசகரைப் போற்றும் ஆசிரியப்பா பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

திருவினை உடன்படுத்தும் திருப்பெருந்துறையில் செழித்த மலர்கள் நிறைந்த குருந்த மரத்தின் நீழலில் பருகிய ஒப்பற்ற

சிவானந்தத் தேனானது பெருக்கெடுத்து, உடலில் பொருந்தி உடல் வளப்பத்தையும் மாற்றுவதால், ஞான ஒழுக்கம் ஒழுகும் செம்மை அணிந்த மாணிக்க வாசகர் அருளிச் செய்த இனிமையான திருவாசகம். (இன்னார், இனியார் என்ற பாகுபாடு இல்லாமல்) யாவரும் ஓதுகின்ற இயல்பை உடையது. ஆதலால் யாவராலும் தொழுவதற்கு இயல்புடையதாகி பொன் பாத்திரம் போன்றது. நிலவுலகத்துத் தேவர்கள் என்று சொல்லப்பெறும் பிராமணர்களின் நான்கு வேதங்கள் யாவரும் ஓதும் இயற்கை உடையன அன்மையால் மட்கலம் போன்றவை. மேலும் இனிய திருவாசகத்தை ஓதினால் அடையும் பயன் முத்தி. வேதங்களை ஓதினால் அறத்தைப் பேணும் உள்ளம் அமைதலே பயன்.

பாடற்பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் வேதத்தை விடத் திருவாசகம் சிறந்தது என்பதை வலியுறுத்தும் பாடலாகும். அவ்வாறு சிறந்தமைக்குக் காரணம் தமிழ் அறிந்த எத்தகையோரும் திருவாசகத்தைப் படித்து இன்புறலாம். ஆனால் வேதமோ பிற மொழியில் அமைந்து பொருள்காணக் கடினம் ஆதலால், எல்லோராலும் அறிய முடியாது. எனவே திருவாசகமே உயர்ந்தது என்பதைச் சிவப்பிரகாசர் வலியுறுத்துகிறார். இப்பாடலுக்குப் பேராசிரியர் வை.ரா. அவர்கள் உரையில் திருவாசகம் பொன்கலம் என்றும் (தீட்டு இல்லாதது,) வேதம் மட்கலம் (தீட்டு உள்ளது) என்றும் பொருள் கொண்டுள்ளார்கள். இதை அனைத்து உரையாசிரியர்களும் ஏற்பதில்லை. இதை நாமும் ஏற்க இயலாது.

சிவப்பிரகாசர் உயர்ந்த பொருளாகச் சொல்ல வருகிறாரே தவிரத் தீட்டு உண்டு இல்லை என்று கூறவரவில்லை. பொன் பாத்திரம் என்பது உயர்ந்த பொருளுக்கு அடையாளமாகும். எல்லோராலும் பயன்படுத்தப்பட்ட பின்னும் பாதுகாத்து வைத்துக் கொள்ளக் கூடியது. ஆனால் மண் பாத்திரமோ பயன் படுத்திய பிறகு பாதுகாத்து வைத்துக் கொள்ளக் கூடியது அல்ல.

அதுபோலத் திருவாசகம் பயின்ற பிறகும் தெய்வப் பாடலாகப் போற்றக் கூடியது. ஆனால் மண்ணுலகத்து அந்தணர்களால் ஓதப்படுகின்ற வேதம் வேண்டும் பொழுது எடுத்துக் காட்டப் பயன்படுத்திய பிறகு விட்டுவிடுவது போன்றது என்ற அடிப்படையில்தான் பாடலில் பொற்கலத்தையும்

மட்கலத்தையும் சிவப்பிரகாசர் பயன் படுத்தியுள்ளார் என்று கருதலாம்.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் தமக்குக் கிடைத்த ஞானத்தைப் (ஆனந்தத்தை) பெற்று, அதனைத் தன்னிடத்தில் தேக்கி வைத்துத் திருவாசகத் தேனாகத் தந்தார் என்பதினாலே அதனை மதுர வாசகம் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார். இங்கு ஞானசம்பந்தர் தான் உண்ட ஞானப்பாலைத் தேக்கி வைத்துத் தேவாரமாகத் தந்தார் என்று கூறிய செய்தியையும் (பாடல் -1) நினைவு கொள்ளலாம்.

இங்கு இப்பாடலில் சிவப்பிரகாசர் வேதங்களைக் குறிப்பிடுகின்ற பொழுது, இறைவன் அருளிய வேதம் என்று கூறாமல், பூசுரர் வேதம் என்று கூறியிருப்பது மிக இன்றியமையாத தாகும். இறைவனால் கூறப்பெற்ற வேதம் ஒருபுறம் இருக்க, அதனை வடமொழியை ஏற்கும் அந்தணர்கள் உரைக்கும் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்று கூறும் நான்கு வேதங்கள் என்பதைக் குறிக்கப் பூசுரர் நான்மறை என்று குறிப்பிடுகிறார். அது போலத் திருவாசகத்தின் பயன் முத்தி என்பதும், வேதத்தின் பயன் அற எண்ணங்களே என்பதும் இப்பாடலில் படித்து இன்புறத் தக்க செய்திகள் ஆகும்.

வீரசைவ நோக்கில் பாடற் பொருள்

இப்பாடல் வேதத்தைச் சிறப்பிக்காத பாடல் என்று எண்ணுவது உண்டு. ஆனால் வீரசைவ நோக்கில் இப்பாடலை நோக்கும் பொழுது, வீரசைவத்தின் உண்மையான தத்துவக் கொள்கை வெளிப்படும். வீரசைவ மரபு வேதத்தை முழுமையாகப் புறந்தள்ளுவது இல்லை. சிவபெருமானால் உணர்த்தப்பட்ட ஆன்மீகத் தத்துவங்கள் பொதிந்த வேதத்தை ஏற்றுக் கொண்டு, மண்ணுலகில் சடங்குகளுக்காக அந்தணர்கள் பயன்படுத்திக் கொள்ளுகின்ற வேத முறைமையை ஏற்றுக் கொள்வதில்லை. குறிப்பாகச் சொன்னால் வேதச் சடங்குகளையும் உயிர்ப்பலி கொடுப்பதையும் வீரசைவ மரபு ஏற்றுக் கொள்ளாது, உண்மையான வேதத் தத்துவங்களை ஏற்றுக் கொள்கிறது என்பதுதான் உண்மை. பேராசிரியர் வை.ரா. அவர்கள் தன் வீரசைவ நூலில் பக்கம் 4-ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

'வேதத்தை முற்றாக எதிர்ப்பது வீரசைவத்தின் நோக்கம் அன்று. சாதி சமயக் கட்டுக்கோப்பு, உயிர்ப்பலி கொடுக்கும் யாகம் இவை போன்ற செயலுக்கு ஆதரவாக வேதக் கருத்துக்கள் கூறப்படுமானால், அவைகளை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்ப்பது வீரசைவக் கொள்கை" என்பார்.

வீரசைவ மரபு வேதத்தை ஏற்றுக் கொள்கிறது என்பதைச் சிவப்பிரகாசர் பல இடங்களில் வலியுறுத்திச் செல்வார். அதற்குச் சில எடுத்துக்காட்டுகள்:

'அங்க இலிங்கம் அயிக்கியம் இதுவென
மங்க லந்தரு மாமறை யின்முடித்
தங்கு றும்தத் துவமசி தண்பொருள்
பங்க மின்றிப் பகர்பவர் ஓர்சிலர்." (பிரபுலிங்கலீலை,பா.1067)

இப்பாடலில் எல்லா மங்கலப் பொருள்களையும் கொடுக்கின்ற வேதத்தின் முடிவான தத்துவமசி என்ற தொடர், அங்கம், இலிங்கம், அயிக்கியம் என்ற பொருளைத் தருகிறது என வீரசைவமக்கள் ஏற்றுக் கொள்ளுவதை வலியுறுத்துகிறது.

வேதத்தோடு கூடிய ஆகமத்தையும் வீரசைவர் ஏற்றுக் கொள்வர் என்பதையும் கீழ்வரும் பாடல் வலியுறுத்துகிறது.

'மனம்இ லிங்கம் மருவிலை யேலுடல்
தனிலி லிங்கம் தரித்தும் இலைஇலை
எனஇ யம்பும் இணையிலி ஆகமம்
நினைவ ரன்கழல் நிற்க நிறுத்தினாய் (பிரபுலிங்கலீலை.பா. 863)

இப்பாடல் சிவபெருமானால் கூறப்பெற்ற வேத ஆகமங்களை நினைவு படுத்துகிறது. வேத மந்திரங்களை இலிங்கமாக உருவகித்து அதனை அணிந்து கொள்ள வில்லையேல் உடம்பில் தரிக்கும் இலிங்கம் பெருமை யடையாது எனவும் கூறப்பெற்றுள்ளது. எனவே இறைவன் அருளிய வேத ஆகமங்களை ஏற்றுக் கொள்வதுதான் விரசைவ மரபின் உண்மையான வழிபாடாகும் என்பது பெறப்படுகிறது. தன் ஞானாசிரியரான சிவஞான பாலய சுவாமிகளைப் போற்றும் பொழுதெல்லாம் வேதமுதல்வனாகவே கருதிப் பாடுவதை உணரலாம். மேலும் திருவாசகம் போன்ற இறைவனுக்குரிய பக்திப் பாடல்களைப் பாடுவது சிறப்பு என்பதையும் வீரசைவம் ஏற்றுக் கொள்கிறது.

'பூசனைத்தொழில் பூண்பதில் எண்மடங்(கு)
ஈசனைத்துதித் தேற்றுதல் நன்றெனா" (பிரபுலிங்கலீலை.பா.56)

என்ற பாடற்பகுதி அதனை வலியுறுத்தும். இப்பாடலின் முடிவாக இறைவன் திருவருளால் கிடைக்கப் பெற்ற வேத ஆகமங்களே உயர்ந்தவை. இன்றைய அந்தணர்கள் சடங்கிற்காகக் கூறப்படுகின்ற வேத முறைமைகள் ஏற்றுக் கொள்ளத் தக்கன அல்ல என்பதையே வீரசைவக் கருத்தாக உணர்த்துகிறது எனலாம்.

அருஞ்சொற் பொருள்

செழுமலர் - சிறப்புடைய மலர், குருந்தின் - குருந்தமரம், தேக்கு - மனதில் தேக்கி, எறியும் - வெளிப்படுத்தும், பொற்கலம் - பொன்கலம், நிகர்க்கும் - ஒப்பாகும், பூசுரர் -அந்தணர்.

பாடல் -33

அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடையை மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்று
உந்தும் சிவிகையினை ஊர்ந்து.

இது திருஞானசம்பந்தரைப் போற்றுகின்ற வெண்பா ஆகும்.

முன்னை உரையாசிரியர் உரை

பெருமை பெற்றவர்கள் தானாகவே இயங்கும் சிவிகையில் அமர்ந்து ஊர்ந்து செல்லும் தேவர்களாய்த் திரிபவர்களே, கையினால் அவர்கள் தருமத்தின் பயன் இது என்று அளவையால் சுட்டிக்காட்ட வேண்டாம். சிவிகையில் அமர்ந்து செல்பவன் அறம் செய்தவன். தாங்கிச் செல்பவர்கள் அறம் செய்யாதவர்கள் என்பதைக் கண்ணால் காணும் காட்சி அளவையாகத் தெரிந்து கொள்க என்று கூறும் திருக்குறளை மறுத்தவர்கள் ஆனார்கள்.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் திருக்குறள் கூறும் காட்சி அளவைக்குக் கூறுகின்ற மறுப்பாகும். இப்பாடலில் திருக்குறள் முழுமையாகக் கையாளப் பெற்றிருக்கிறது.

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை (திருக்குறள் 37)

இக்குறளுக்குப் பரிமேலழகர் உரை - அறத்தாற்றின் பயன் இது என்று யாம் ஆகம அளவையால் உணர்த்தல் வேண்டாம். சிவிகையைத் தூக்குபவனோடு செலுத்துவானிடைக் காட்சி அளவை தன்னாலே உணரப்படும் என்பதாகும். அதாவது அறம் செய்தவன், செய்யாதவன் யார் என்பதற்கு வேத ஆகமங்கள் கூறுகின்ற உரை அளவைகளை எல்லாம் அறிய வேண்டுவதில்லை. கண்ணால் காணுகின்ற காட்சி அளவையால் அறம் செய்தவன் பல்லக்கின் மேல் இருக்கின்றான், அறம் செய்யாதவன் பல்லக்கைத் தூக்குகின்றான் என்பதால் உணர்க என்ற பொருள் கிடைக்கிறது.

இக்கருத்து ஏற்புடையதல்ல. அது மறுக்கப் பட்டிருக்கிறது என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார். அதாவது பல்லக்கைச் சுமக்கின்றவர்கள் அறம் செய்யாதவர்கள் என்பதை உணர்த்துகிறது என்பது ஏற்புடையதல்ல. ஏனென்றால் ஞானசம்பந்தரின் பல்லக்கைத் தூக்கியவர்கள் அறம்செய்து வான்புகழ் பெற்ற தேவர்களும், அப்பர் அடிகளும் ஆவார்கள். எனவே தூக்குகின்றவர்கள் அறம் செய்யாதவர் என்பதை ஏற்கமுடியாது என்று இப்பாடலில் சிவப்பிரகாசர் மறுக்கிறார். திருக்குறளில் பெரும் அன்பு கொண்ட சிவப்பிரகாசர் திருக்குறளை மறுப்பாரா? என்று எண்ணும் பொழுது, ஒரு குறிப்பு நமக்குள் தோன்றுகிறது. உரையளவை என்று சொல்லுகின்ற பொழுது வேத ஆகம உரையளவையைத் தான் உரையாசிரியர்கள் கொள்ளுகின்றார்கள். எனவே இந்தப் பாடல் வேதத்தின் உரையளவையைக் காட்சி அளவையால் மறுக்கின்றது என்றுதான் கொள்ளவேண்டும்.

எனவே திருக்குறள் வேதத்தின் அடிப்படையில் காட்டிய காட்சியளவை மறுக்கப் படுகிறது என்ற நிலையில் வேதக் கருத்து மறுக்கப் படுகிறது என்று கூறுவதும் உண்டு. முன் பாடல் உரையில் கூறியபடி வேத உரையளவையைத் தெரிந்து கொள்ளக் காட்சியளவை பயன்படுகிறது என்று கூறிய திருக்குறள் கருத்து மறுக்கப் படுவதால் வேதக் கருத்து மறுக்கப் படுகிறது என்று கொள்ளுவதில் தவறில்லை.

பாடலில் திரிகுவர் என்ற சொல் நினைவு கொள்ளத்தக்க சொல்லாகும். தேவர்கள் பாகனோ , அல்லது வாகனங்களோ இழுத்துச் செல்லாத அல்லது தூக்கிச் செல்லாது தானே செல்லக்கூடிய சிவிகையில் மேலே இருந்தவர்கள் சம்பந்தரின்

பல்லக்கில் கிழே இருந்து சுமக்கின்றார்கள். எனவேதான் வேதக்கருத்தின் காட்சியளவை மறுக்கப் பட்டது என்பதைக் குறிப்பதற்குத் திரிகுவர் என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அதாவது தன் இஷ்டம்போல் திரிபவர்கள் என்ற பொருள் தந்து அச்சொல் தேவர்களின் தன்மையைக் குறிப்பிடுகிறது . எனவே இப்பாடலின் கருத்து - வேதத்தின் கருத்தை வெளிப்படுத்தும் காட்சி அளவை மறுக்கப் படுகிறது என்று படிப்போர் பொருள் கொள்ள இடந்தருகிறது.

வீரசைவ நோக்கில் பாடற்பொருள்

இப்பாடல் திருக்குறள் கூறிய காட்சி அளவையை மறுக்கிறது என்பதால் வீரசைவத் தத்துவ நிலையில் காட்சி அளவைக்கு எத்தகைய இடம் இருக்கிறது என்பதை நாம் ஆய்தல் வேண்டும். காட்சி அளவையை வீரசைவ மரபு அடிப்படைத் தத்துவங்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்கிறது. சிவப்பிரகாசர் தன் ஞானாசிரியராகிய சிவஞானபாலய சுவாமிகளைச் சிவப் பேற்றை உணர்த்தும் வடிவாகவே கொண்டு காட்சியளவையைப் போற்றுகின்றார். அதுபோலப் பிரபுலிங்க லீலையில் வசவேசர் . அல்லமப் பிரபுவிற்கு உணவு படைத்தலைச் சொல்லும் பொழுது கீழ்வரும் பாடலை அமைத்துள்ளார்.

உலகில் ஒருவன் சிவயோகி உண்டது அம்ம சராசரமாய்
அலகில் உயிர்கள் எலாம்உண்டது ஆகும்என்ன மறைகூறும்
இலகும்உரையை காட்சியால் இன்றி இங்கு உணர உணர்த்தினான்
கலக வினைகள் தீர்க்குமருள் கண்ணன் திகழல் லமதேவன்.

(பிரபுலிங்கலீலை, பா. 1106)

இப்பாடல் உலகுக்கு ஒருவனாகிய சிவயோகி உண்டது சராசரமாம் அளவில் உயிர்கள் எல்லாம் உண்டதாகும் என்று வேதம் கூறும் கருத்தினை (உரையளவையை) அல்லமதேவர் காட்சியளவையால் இங்கு உணரவைத்தார் என்ற பொருளைத் தருகிறது. இது எதுபோல என்றால் அன்னை உண்ட உணவு கரு ஈண்டு மகவும் உண்ணல் போல(பா.1108) என்றும் சிவப்பிரகாசர் வலியுறுத்துவார்.

அதாவது கருவுற்ற தாய் உண்ட உணவு அவள் குழந்தைக்கும் எப்படி உணவாகிறதோ அதுபோலச் சிவயோகி உண்டது

உயிர்களுக்கு ஆயிற்று என்று சிவப்பிரகாசர் வலியுறுத்துகிறார். எனவே இப்பாடல் பகுதிகள் மூலம் வேதத்தின் உரையைக் காட்சி அளவையில் ஏற்பதும். வேதக் காட்சி அளவையை மறுப்பதும் சிவப்பிரகாசரின் தத்துவ நிலையாகும் என்பது பெறப்படுகிறது.

அருஞ்சொற் பொருள்

அறத்தாறு - அறத்தின்பயன், சிவிகை - பல்லக்கு, பொறுத்தான் - தாங்கியவன், ஊர்ந்தான் - பல்லக்கில் செல்பவன், பரித்தார் - தாங்கியவர், உந்தும் சிவிகை - தானே செல்லும் பல்லக்கு.

பாடல் - 34

ஊர்ந்து வரும் இளஏறு உடையான் தன் உளத்து அருளால்
சார்ந்து சமண் விட்டுறும் உனக்கே வரும் சைவநலம்
கூர்ந்து மிளிர்தரும் நாவரசே நல்குரவு முனம்
சேர்ந்து மருவினர்க்கே சிறந்து ஓங்குஉறும் செல்வமுமே.

இப்பாடல் திருநாவுக்கரசரைப் போற்றும் கட்டளைக் கலித்துறைப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

திருநாவுக்கரசுப் பெருமானே, வறுமை உடையவராய் அதன் துன்பங்களை உணர்ந்தவர்களுக்கே செல்வமும் சிறந்து வளர்தலாகிய செம்மையைப் பெறமுடியும். அது போலச் செலுத்துவதற்கு ஏற்புடையதாய், இளமை உடையதாய் அமைந்த காளை வாகனத்தை உடையவனாகிய சிவ பெருமானின் திருவுள்ளத்தில் எழுந்த திருவருளால் சமண சமயத்தைச் சார்ந்து அவ்வருளாலே அதனை விட்டு வெளியேறிய பெருமை அமைந்த தங்களுக்கு இடையூறு படாது வருகின்ற சைவமானது நன்மையால் வளர்ந்து ஒளியால் சிறப்புப் பெறும்.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடலில் திருநாவுக்கரசருக்கே சைவநலத்தை உணர முடியும் என்று குறிப்பிட்டு, அதற்கு ஒரு உவமையைச் சிவப்பிரகாசர் இடம்பெறச் செய்திருப்பது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். வறுமையை அனுபவித்த ஒருவருக்கே செல்வத்தின் பெருமையை அறிய முடியும். அது போலச் சமண சமயத்தைத்

திருநாவுக்கரசர் சார்ந்து பின், உடன் பிறந்தவரால் சமணத்தை விட்டுச் சைவ சமயத்திற்கு ஆட்படுத்தப் பெற்ற திருநாவுக் கரசருக்கே சைவத்தின் பெருமை தெரியும் என்கிறார் சிவப்பிரகாசர்.

அதனைக் குறிப்பிடுகின்ற பொழுது சிவப்பிரகாசர் பிறப்பில் சைவ சமயம் சார்ந்திருந்த திருநாவுக்கரசர் சமண சமயம் சார்ந்து, பின் இறைவன் திருவருளால் அச்சமயத்தை விட்டுச் சைவம் சார்ந்தார் என்று குறிப்பிடுகிறார். இதைப் பாடலில்

'அருளால் சார்ந்து சமண் விட்டுறும் உனக்கேவரும்'

என்ற தொடர் விளக்குகிறது.

சேக்கிழார் இந்த நிகழ்வைக் குறிப்பிடும் பொழுது, சமண சமயத்தைத் திருநாவுக்கரசுப் பெருமான் சேரும் பொழுது, கீழ்க்கண்ட பாடலை அமைப்பார்.

'நில்லாத உலகியல்பு கண்டு நிலை யாவாழ்க்கை
அல்லேன்என் றறத்துறந்து சமயங்க ளானவற்றின்
நல்லாறு தெரிந்துணர நம்பர்அரு ளாமையினால்
கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயங் குறுகுவார்."
(திருநாவுக்கரசு பா.37)

என்பது பாடலாகும். இப்பாடலில் திருநாவுக்கரசர் சமண சமயம் சேர்ந்ததற்குக் காரணம், சிவபெருமான் அருளாமையால் தான் என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். அதே சமயத்தில் சமண சமயத்தை விட்டுத் திருநாவுக்கரசர் சைவ சமயத்திற்கு வருவதற்குக் காரணம் இறைவன் அருள்தான் என்பதைக் கீழ்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

'மன்னுதபோ தனியார்க்குக் கனவின்கண் மழவிடையார்
உன்னுடைய மனக்கவலை ஒழிநீ,உன் உடன்பிறந்தான்
முன்னமே முனியாகி எனைஅடையத் தவம்முயன்றான்
அன்னவனை இனிச்சூலை மடுத்தாள்வன் எனஅருளி"
(திருநாவுக்கரசு பா. 48)

இப்பாடலின்படி திருநாவுக்கரசருக்குத் திருவாளன் திருநீறு கொடுத்து, உடன் பிறந்தார் சைவ சமயத்திற்கு மீண்டும் அவர் மாறக் காரணமாய் அமைந்தது சூலை நோயாகும். அந்தச் சூலை

நோயை இறைவன் தன் திருவருளால் கொடுத்தான் என்பதைப் பாடலில் 'சூலை மடுத்தாள்வன் "என அருளி என்று குறிப்பிடுகின்றார். எனவே சேக்கிழாரின் திட்டவட்டமான முடிவு திருநாவுக்கரசர் சமண சமயம் சார்வதற்குச் சிவபெருமானின் திருவருள் கிடைக்காமையே என்பதும், சமண சமயத்தை விட்டு அவர் சைவத்திற்கு மாறியதற்குக் காரணம் சிவபெருமானின் திருவருளே ஆகும் என்பதாகும். இதனை மனதில் கொண்டுதான் சிவப்பிரகாசர் , நால்வர் நான்மணி மாலையின் இப்பாடலில்,

'ஏறுஉடையான் தன் உள்ளத்து அருளால் சார்ந்து
சமண் விட்டுறும் உனக்கு"

என்று குறிப்பிடுகின்றார். மேலும் பாடலில் சைவ நலம் கூர்ந்து மிளிர்தரும் என்ற தொடர் இருபொருளைத் தருவதாக அமைந்திருப்பதும் நினைந்து இன்புறத் தக்கதாகும். அதாவது திருநாவுக்கரசரால் சைவத்தின் பெருமை உயர்ந்தது என்பதும், மற்றொரு பொருளாக உயர்ந்த சைவ சமயத்தைத் திருநாவுக்கரசர் மட்டுமே அறிய முடியும் என்பதுமாக இரு நோக்கில் பொருள் கொள்ள வாய்ப்புள்ளது.

வீரசைவ நோக்கில் பாடலின் பொருள்

இப்பாடலின் அடிப்படைக் கருத்து திருநாவுக்கரசுப் பெருமானால் சைவத்தின் பெருமை வெளிப்பட்டு வளர்ந்திருக்கிறது என்பதாகும். எனவே சிவப்பிரகாசர் சைவத்தின் பெருமையைத் திருநாவுக்கரசர் மூலம் பாடலில் குறிப்பிடுகிறார் எனலாம். எனவே திருநாவுக்கரசரால் சைவத்தின் சிறப்புக் கூறப்படுவது போலச் சிவப்பிரகாசரால் வீரசைவத்தின் பெருமைகளும், அவர்தம் நூல்களில் குறிக்கப் பெறுகின்றன என வீரசைவ நோக்கில் கொள்ளலாம்.

வீரசைவத்தின் பெருமையை விரிவாகத் தருவதற்கே பிரபுலிங்கலீலை என்ற காவியம் சிவப்பிரகாசரால் எழுதப் பெற்றது. அக்காவியத்தில் சிவப்பிரகாசர் வாய்ப்புக் கிடைத்த இடங்கள் தோறும் வீரசைவத்தின் பெருமையைக் குறிப்பிடுகிறார். அதிலும் அங்கத்தில் லிங்கத்தைக் காணுகின்ற நிலையில் வீரசைவத்தின் பெருமையை அழுத்தமாக வலியுறுத்துகிறார். எடுத்துக்காட்டிற்குக் கீழ்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

**'ஆவுறு பிணிகெட ஆவின் பால்கறந்து
ஆவினை ஊட்டல்போல் ஆண வங்கெட
ஆவியுள் அமலனை அங்கை தந்துபின்
ஆவியுள் அமைவுற ஆக்கும் ஆரியன்" (பிரபுலிங்க லீலை 810)**

இப்பாடலின் பொருள் - பசு ஒன்று அடைந்த நோய் கெடுமாறு, அப்பசுவின் பாலையே கறந்து அப்பிணிக்கு மருந்தாக , அப்பசுவிற்கு ஊட்டுதல் போல, உயிர் உற்ற ஆணவ நோய் கெடுமாறு உயிருக்குள் எழுந்தருளியுள்ள இறைவனை இட்டலிங்க வடிவாக உள்ளங்கையில் தந்து, பின்னர் அவ் இட்டலிங்கத்தை அவ்வுயிருக்குள் பொருந்துமாறு ஆக்குபவன் ஆசிரியன் ஆவான் என்பதாகும்.

எனவே இப்பாடலின் மூலம் ஒரு உயிர் முத்தியைப் பெறப் பெரும் துணை புரிவது வீரசைவ வழிபாடே என்பதை அறிய, வீரசைவத்தின் பெருமையை உணர முடிகிறது.

பிறிதோரிடத்தில் சிவப்பிரகாசர், வீரசைவ வழிபாட்டை விட்டு விட்டு வேறு தெய்வ வழிபாட்டை மேற்கொள்வதைக் கண்டித்து வீரசைவ வழிபாட்டை நிலை நிறுத்துகிறார்.

**'அங்கையின் அமர்தரும் அரனை விட்டொரு
வெங்கட வுளர்தமை விழைந்து போற்றுவார்
கங்கையை அகன்றுவர் கழியின் மூழ்குநர்
தங்களின் வேறலர் தரும மூர்த்தியே (பிரபுலிங்க லீலை, பா.825)**

இப்பாடலின் கருத்து - உள்ளங்கையில் எழுந்தருளி யிருக்கும் இட்ட லிங்கப் பெருமானை வழிபடுதல் விட்டு, வேறொரு கடவுளை விரும்பி வழிபாடு செய்பவர், சிறந்த கங்கா நதியை விட்டு உப்பங் கழியிடத்துச் சென்று நீராடுபவரை ஒத்தவராவார் என்பதாகும்.

எனவே நால்வர் நான்மணிமாலைப் பாடல் மூலம் சைவத்தின் பெருமை நாவுக்கரசரால் வெளிப்படுவது போல, வீரசைவத்தின் பெருமை சிவப்பிரகாசரால் பிரபுலிங்க லீலையில் வெளிப்படுவதை , இப்பாடல்கள் தரும் குறிப்புப் பொருளாகக் கொள்ளலாம்.

அருஞ்சொற் பொருள்

ஊர்ந்து - செலுத்தும், ஏறு - காளைவாகனம், விட்டுறும் - விட்டு வெளியே வரும், கூர்ந்து - மிகுந்து, மிளிர்தரும் - ஒளிவிடும்,

நல்குரவு -வறுமை, மறுவினர்க்கு - உணர்ந்தவர்களுக்கு, ஓங்கு - சிறந்து.

பாடல் - 35

செல்வநல் ஒற்றி ஊரன்
செய்ய சங்கிலியால் ஆர்த்து
மல்லல்அம் பரவை தன்னுள்
மால்குற அமிழ்த்து மேனும்
அல்லும் நண்பகலும் நீங்காது
அவன்மகிழ் அடியில் எய்தி
நல்லஇன்பு அடைந்து இருப்பன்
நம்பி ஆருரன் தானே.

இப்பாடல் சுந்தரமூர்த்தி மீது பாடப்பெற்ற ஆசிரிய விருத்தப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

இம்மைச் செல்வங்களையும், மறுமைச் செல்வங்களையும் வழங்கும் திருவொற்றியூர் நகரப் பெருமான், மாதர்கள் குலத்திற்கே செம்மை சான்றவராகிய சங்கிலி நாச்சியாரால் இறுகப் பிடித்து, வளமையும் அழகும் பொருந்திய பரவை நாச்சியாரிடத்து மயக்கத்தைப் பொருந்துமாறு, இல்லறப் பெருங்கடலுள் அமிழ்த்துவாராயினும், நம்பியாரூரர் இரவு பகல் ஆகிய இருபோதும் எந்த இறைவன் இவைகளைச் செய்தானோ அவனுடைய மகிழ்ச்சி நிறைந்த திருவடிகளை நீங்காமல் பற்றியிருந்து, நல்ல இன்பு அடைந்திருப்பர் ஆவர்.

பாடற்பொருள் நயவுரை (பழ. முத்தப்பன்)

இப்பாடல் சுந்தரமூர்த்தியாரின் வரலாற்றை மேலோட்டமாக அறிகின்றவர்களின் மனதில் எழுகின்ற ஒரு வினாவிற்கு விடை தருவது போல் அமைந்துள்ள பாடலாகும். அதாவது இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டுத் திருவருள் பெற்று, இறைவனுடைய பேரின்பத்தை நுகரக் கூடிய சுந்தர மூர்த்தியாருக்கு, பரவையாரைப் பார்த்ததும், சங்கிலியாரைப் பார்த்ததும் சிற்றின்பம் தோன்றலாகுமோ? என்ற வினா எழும். அதற்கு விடை கூறுவது போலச் சிவப்பிரகாசர் இப்பாடலை அமைத்துள்ளார் எனலாம்.

உயிர்களுக்குள் உயிராய் விளங்கும் இறைவன், சுந்தரரைச் சங்கிலியாரால் கட்டி, பரவையார் மோகத்தில் அமிழுமாறு செய்தாலும், சுந்தரர் அவ்விருவரின் இன்பத்தையும் சிற்றின்பமாகக் கருதாது, பேரின்பமாகவே துய்த்தார் என்ற குறிப்பைத் தந்திருக்கிறார்.

எவ்வாறெனில், பாடலின் பிற்பகுதி அதனை வலியுறுத்துகிறது. இரவும் பகலும் நீங்காது இறைவன் திருவடியில் மனதைச் செலுத்திப் பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டே, இவ்விருவருடனும் வாழ்ந்தார் என்பதை இப்பாடலின் பிற்பகுதியில் சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார்.

அதாவது சங்கிலியாரிடத்தும், பரவையாரிடத்தும் செயல் நிலையில் சிற்றின்பத்திற்கு உரியவர் என்றாலும், மனதில் எப்பொழுதும் இறைவன் நினைவு இருப்பதால், அது சிற்றின்பமாகத் தோன்றாது பேரின்பமாகவே நினைந்து சுந்தரர் வாழ்ந்திருக்கிறார் என்பதைச் சிவப்பிரகாசர் பதிவு செய்கிறார் எனலாம். எனவேதான் பாடலில் அல்லும் நண்பகலும் நீங்காது என்ற தொடரைச் சிவப்பிரகாசர் அமைத்திருக்கிறார்.

சுந்தரரின் மனதில் ஒரு சிறிதுநேரம் கூட நீங்காது, இறைவனின் திருவடி நினைவு நிலைத்திருப்பதால் மனதில் சிற்றின்பம் நுழைவதற்கே இடமில்லை. பேரின்பமே நிறைந்திருந்து செயல் முறையில் சிந்தை பற்றில்லாமல் அனுபவிக்கப் பட்டது தான் அவர்களின் உறவு என்பதைச் சிவப்பிரகாசர் தெளிவு படுத்தி விடுகிறார்.

வீரசைவ நோக்கில் பாடலின்பொருள்

இப்பாடல் தரும் உட்கருத்துச் செயலுக்கு முக்கியத்துவம் இல்லை. எண்ணத்திற்கே முக்கியத்துவம் என்பதாம். செய்யப்படும் செயல் எத்தகையதாக இருந்தாலும் நினைவு தூய்மையாக இருந்தால், செயலின் குற்றம் குற்றமாகக் கருதப்படுவது இல்லை. இந்த அடிப்படையில்தான் தமிழகத்தில் வாழ்ந்த சிவனடியார்களின் செயல்கள் அத்துணையும் நிகழ்ந்தன.

சிந்தையில் சிவச்சிந்தனை நிறைந்திருப்பதால் மகனைக் கறி சமைத்ததோ, மனைவியின் கையை அறிந்ததோ. இறந்த மகனைப் பாயில் இட்டு வைத்ததோ குற்றமாகக் கொள்ளாது குணமாகக்

கொள்ளப் பெற்றது. இதனையே சுந்தரர், அடிப்படையாகக் கொண்டு கீழ்வருமாறு பாடலைப் பாடுகின்றார்.

நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக்கு அரையன் நாளைப் போவானும்
கற்ற சூதன் நல்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்லன் என்றுஇவர்கள்
குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டு நின்குரைகழல் அடைந்தேன்".
(பதிகம் 83, பா.4)

என்பது அவர்தம் வாக்காகும். இதனை அடிப்படையாகக் கொண்டுதான் சிவப்பிரகாசர் சிற்றின்பக் குற்றம் நிகழ்ந்தாலும் நினைவால் அது பேரின்பமாகும் என்பதைத் தன் பாடலில் பதிவு செய்துள்ளார்.

வீரசைவ மரபில் இனம், சாதி, ஏற்றத்தாழ்வு இவற்றை நோக்காது, அங்கத்தில் லிங்கத்தைப் பெற்றிருக்கும் சிவச்சிந்தனை நினைவையே முதன்மையாகக் கொள்வது அடிப்படையாகும். சிவஞான பாலய சுவாமிகள் கலம்பகத்தில், சிவப்பிரகாசர் யான், எனது என்ற எண்ணங்களை நீக்கி, ஞானகுருவாகிய சிவஞானபாலய சுவாமிகளை நினைந்து அணுகினால் தான் பொல்லாப் பிறவி நோய் நீங்கும் என்று குறிப்பிடுகின்றார்.

பிறவி நோயாகிய செயல் நீங்க, குருவாகிய சிவஞான பாலய சுவாமிகளை நினைந்தாலே போதும் என்ற குறிப்பு அப்பாடலில் அமைந்துள்ளது.

யானென தென்னு மிவைகழன்று வந்துசிவ
ஞான குருவை நணுகிலா மானுடர்தம்
பொல்லாப் பிறவிநோய் போமோ வரினுநிலத்
தெல்லாக் கடவுளரு மின்று. (பா.32)

இப்பகுதியில் யான், எனது என்ற தற்பவத்தை நீக்கி, ஞானச் சிவத்தை நினைப்பவர்க்குப் பிறவித் துன்பம் இல்லை என்று கூறுவதால், நினைவே பேரருள் கிடைக்க ஏதுவாகும் என்பது புலனாகின்றது.

இதை வலியுறுத்துவது போலப் பிரபுலிங்க லீலையில் காப்பியத் தலைவர் இறைவராம் அல்லமாப் பிரபு கொலை

செய்யும் தொழிலைக் கொண்ட வேடருக்கு நயன தீட்சை அளித்து, அவன் மனம் திருவருளை நாடச் செய்தார்.

அத்துடன் அல்லாது பக்குவம் பெற்ற கண்ணப்பருக்குப் பேரின்பம் கிடைக்கச் செய்வதை விட, வன்குணம் உடையவனாம் வேடனுக்கு அருள் செய்வோம் என்று பெருமான் சென்றதாக 952-ஆவது பாடலில் குறிப்பிடுகிறார்.

எனவே இப்பாடலின் வழிச் செயல் எவ்வாறாக இருந்தாலும், வீரசைவ மரபுப்படி லிங்கத்தை அங்கத்திலே தாங்கி எப்பொழுதும் சிவச் சிந்தனையோடு இருந்தால் சிவம் தன்னை விட்டு அங்கத்தில் பிரியாத காரணத்தால் பிறவிச் செயல்கள் எவையாயினும் அது குற்றமாகாது என்ற வீரசைவ அடிப்படை பாடலில் இடம்பெற்றுள்ளது.

அருஞ்சொற் பொருள்

ஆர்த்து - பிணித்து, மல்லலம் - அழகு பொருந்திய, மாழ்குற - மயக்குற, அல்லும் - இரவும், அடி - திருவடி.

பாடல் - 36

தானே முத்தி தருகுவன் சிவன்அவன்
அடியன் வாத ஊரனைக்
கடிவுஇல் மனத்தால் கட்ட வல்லார்க்கே.

இப்பாடல் மாணிக்கவாசகரைப் போற்றிய அகவற்பா ஆகும்.

முன்னை உரையாசிரியர் உரை

சிவன் அவனுடைய அடியவன் ஆகிய மாணிக்கவாசகப் பெருமானை நீக்கமில் நினைந்த உள்ளத்தால் பிடிக்கக் கூடிய ஆற்றல் உள்ளவர்களுக்கு, அவர்கள் கேட்பதற்கு முன்னம் தானே முந்திக்கொண்டு வந்து முத்தியின்பத்தைக் கொடுப்பான்.

பாடல் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் ஆசிரியப்பாவிற்குச் சிற்றெல்லை மூன்றடிகள் என்பதை அறிவுறுத்துவது போல் அமைந்தது. ஒரு ஆன்மா இறைவனின் திருவருளாகிய சத்திநிபாதம் கிடைப்பதற்குரிய காலம் நமக்கு விளைந்தால், இருவினை ஒப்புக்கு ஆட்பட்டுச்

சிவப்பேறினைப் பெறும் என்ற தத்துவத்தின் அடிப்படையில், முத்திப்பேறு கிடைப்பதற்குரிய வழியைக் காட்டுவதாகும்.

எல்லாம் வல்ல சிவபெருமான் சிவநேசச் செல்வர்களுக்கு அருள் புரிய மானுடச் சட்டை தாங்கி ஆசிரிய வடிவத்தில் வருவார். ஞானாசிரியரை அடையாளம் கண்டு ஒரு ஆன்மா அவரின் திருவடிகளைத் தலைமேற் கொண்டால், இறைவன் தானே வந்து தலையளித்து ஆட்கொண்டு அருளுவான். இப்பாடல் மாணிக்கவாசகராம் ஞான ஆசிரியரை நீங்காத நினைவோடு தன் மனதால் கட்டினால், தானே முத்தி கிடைக்கும் என்ற செய்தியைக் குறிப்பிடுகிறது.

நம்மால் அறியப்படுகின்ற சிவனடியார்களில் கணநாதர் , சம்பந்தரையே போற்றி முத்தியடைந்தார். சோமாசிமாறரும் பெருமிழலைக் குறும்பரும் சுந்தரர் தாள் பணிந்து முத்தி யடைந்தனர். அப்பூதி அடிகள் திருநாவுக்கரசர் திருத்தாள் போற்றி முத்தியடைந்தார்.

இத்தகைய செய்திகளை அறிகின்ற நமக்கு மணிவாசகரை நினைந்து முத்திப்பேறு பெற்றவர் யாரோ? என்று எண்ணுகின்ற பொழுது, நாமே மாணிக்கவாசகரை நினைந்து போற்றி வழிபட்டால் சிவபெருமான் முத்தி அளிப்பார் என்ற ஒரு வழியைச் சிவப்பிரகாசர் இப்பாடலில் தருகிறார். மாணிக்கவாசகரைச் சிவத் தொண்டர் என்று குறிப்பிடப் பாடலில் அவன் அடியான் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார்.

மனத்தால் அவரைக் கட்ட வல்லார்க்குச் சிவபெருமான் தானே வந்து முத்தி தருவார் என்பதைக் குறிப்பிடப் பாடலில் தானே முத்தி தருவன் சிவன் என்கிறார்.

வீரசைவ நோக்கில் பாடலின் பொருள்

இப்பாடலின் உட்கருத்துச் சிவனடியார்களை நீங்கா நினைவோடு மனதில் வழிபடுவார்க்குச் சிவன் தானே முத்தி தருவான் என்பதாகும். இந்த அடிப்படையை விளக்கும் சங்கமரின் வழிபாடு, வீரசைவக் கொள்கைகளில் குறிப்பிடத் தக்கதாகும். சிவனருள் பெற்ற சிவஞான தேசிகரை வழிபட்டால் வீடுபேறு கிடைக்கும் என்பதைச் சிவப்பிரகாசர் சிவஞான பாலய சுவாமிகள் பற்றிய நூல்களில் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

1. முற்றிலா முலைமாதரால் வரு மயலறா
   முத்தி சேர்வுறு மாறு தீதறு துணிவ (பிள்.தமிழ்,பா.60)
2. நாதாந்தன் வீடு உதவும் ஞானவிநோதன் தெளிந்த
   வேதாந்தன் கைம்மாறு வேண்டாதான். (தூது 1516)
3. நையும் மனிதர் நினது திருநாமத்து எழுவாய் எழுத்திரண்டும்
   பைய ஒருகால் இயம்பி உய்யப் பெற்றார். (கலம், 28)

இத்தகைய எடுத்துக்காட்டுகள் அடியவர் வணக்கம் முத்திப் பேற்றைத் தரும் என்பதை வலியுறுத்துவதாகும். எனவே இப்பாடல் எண்வகைக்காப்பில் வீரசைவ அட்டாவரணத்தில் ஆறாவதாக அமைந்த சங்கம வழிபாட்டின் பயனை எடுத்துக் கூறுவதால் வீரசைவ நோக்கில் இப்பாடலை உணர்ந்து மகிழலாம்.

அருஞ்சொற் பொருள்

அடியவன் - அடியவர், வாதவூரன் - மாணிக்கவாசகர், கடிவு இல் - நீக்கமில்லாத, கட்ட - பிணிக்க.

பாடல் - 37

வல்லார் பிறப்பு அறுப்பர் வண்மை நலம்கல்வி
நல் ஆதரவு இன்ப ஞானங்கள் எல்லாம்
திருஞான சம்பந்தன் சேவடியே என்னும்
ஒருஞான சம்பந்தம் உற்று.

இப்பாடல் திருஞானசம்பந்தரைப் போற்றிய வெண்பா. ஆகும்.

முன்னை உரையாசிரியர் உரை

வள்ளல் தன்மையை அடைவிக்கும் பொருளும், பொருளைக் கொடை வழியில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான மனப் பண்பை உண்டாக்கும் அறக்கோட்பாடுகளும், அவ் அறம் செய்தலே முத்திக்கு வழி என்பதை அறுதியிட்டு நிலைநாட்டும் கல்வியும், இந்த ஏழையானவன் இன்று வந்து, நான் அறம் செய்வதற்குத் துணையாக நின்றானே என்று அவன்மேல் உருகி ஓடும் நல்ல அன்பும், அவனுக்குக் கொடுத்தலால் வரும் இன்பமும், அதன்வழி வந்த ஞானமும் ஆகிய எல்லாம் பிறப்பை அறுத்து, முத்தியை அளிக்கும் என அறநூல்கள் உரைக்கின்றன. ஆனால் இவை

எல்லாவற்றிலும் வல்லவர்கள் திருஞானசம்பந்தப் பெருமானின் செம்மை சான்ற திருவடிகளே என்று சிறப்பிக்கப் பெறும் ஒப்பற்ற சிவஞான சம்பந்தத்தைப் பொருந்தித்தான் அத்தகைய பிறப்பினை அறுத்து எறிவர் என்பதாம்.

பாடற்பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடல் தரும் கருத்தைச் சுருக்கமாகக் கூறினால் பின்வருமாறு கூறலாம். திருஞான சம்பந்தர் சேவடிகளாகிய ஞானசம்பந்தத்தை ஒருவர் பெற்றால் (அதாவது திருஞான சம்பந்தரின் வாழ்வை அறிந்து அதன்வழித் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால்) கொடைத்தன்மை, அதற்குரிய பொருள், அதனை உணர்ந்து கொண்ட நல்ல கல்வி, இரவலர் பால் ஆதரவு, இரவலர்க்குக் கொடுத்தலால் பெறுகின்ற இன்பம், இத்தகைய செயல்களால் கிடைத்த ஞானத்தைப் பெற்று, வரும் பிறவிப் பிணியை அறுப்பர்.

இன்னும் இதைச் சுருக்கிச் சொன்னால் திருஞானசம்பந்தரின் வாழ்க்கையை அறிந்து அவரையே ஞானாசிரியராகக் கொண்டு வாழ்பவர் பிறப்பை அறுப்பர் எனலாம். எனவே இப்பாடலின் கருத்து நமக்கு முன் வாழ்ந்த இறையருள் பெற்ற சீவன்முத்தர்களாகிய அருளாளர்களின் வாழ்க்கையை ஏற்று அவர்களோடு நாம் சம்பந்தம் கொண்டால், அதாவது அடியவர்களைப் போற்றினால் பிறவியை அறுக்கலாம் என்பதாகும்.

சிவசம்பந்தம் உடைய சைவத்தின் அடிப்படைக் கோட்பாடு ஒரு ஆன்மா ஞானாசிரியர் மூலமாக ஞானம் பெற்றால்தான் பிறவியை அறுத்து முத்தியைப் பெறலாம் என்பதாகும். இந்த அடிப்படைக் கருத்தை வீரசைவ மரபும் ஏற்றுக் கொள்கிறது. சிவப்பிரகாசர் இப்பாடலில் ஞானங்கள் என்று பன்மையில் குறிப்பிட்டிருப்பதை நினைவுகூற வேண்டும். அந்தப் பன்மை வண்மை முதலாகிய குணங்களைக் குறிப்பிடுகின்ற பன்மையாக இருந்தாலும், ஒரு ஆன்மா இயல்பாகப் பெறுகின்ற இந்தக் குணங்களை ஆன்மீகத் துறையில் வளர்த்து, ஞானாசிரியரின் வழிகாட்டுதலில் பிறர் நலத்திற்கு உரிய குணங்களாக வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற குறிப்பை இந்தப் பன்மைச் சொல்லால் உணர்த்துகிறார் எனவும் கொள்ளலாம்.

எடுத்துக் காட்டாகக் கொடை வண்மை தமக்கு உரியவர்கள்பால் வாழ்வின் முதலில் அமைந்து, அது ஆன்மீக நிலையால் முன்பின் தெரியாத ஒருவருக்கு அமையும் பொழுது, ஞானக் கொடையாக அமைகிறது. இந்த உலகத்தை அச்சுறுத்தி வரும் கரோனா நோய் பாதிக்கப் பெற்றிருக்கின்ற சீன மக்களுக்கு அவர்கள் யார்என்று தெரியாது உதவ வேண்டும் என்ற நிலையில், இந்தியநாடு அவர்களுக்குரிய மருந்து முதலிய உதவிகளைத் தனி ஒரு விமானத்தில் அனுப்பிய மனிதநேயத்தைக் குறிப்பிடலாம்.

அதுபோலக் கல்வி என்று வரும்பொழுது உயிரின் அறிவை வளர்க்கும் கல்வி நிறுவனங்கள் அளித்திடும் கல்வியை ஆன்மீகத் துறையில் சென்று உயிருக்கு நலந்தரும் கல்வியை ஞானக் கல்வியாகக் குறிப்பிடலாம். ஆதரவு என்பது எளியவர்க்கு அமைந்து அது வளர்ந்து சிவனடியார்களுக்கு ஆதரவாக அமைகின்ற பொழுது ஞான ஆதரவாகப் பயன் தருகிறது.

இன்பம் என்பது உடலுறவுச் சிற்றின்பமாகப், போகப் பொருள் சிற்றின்பமாக அமைந்தவை வளர்ந்து, இறையருளாகிய பேரின்பத்தை அடையும் ஞான இன்பமாகப் பெருமை பெறுகிறது. இவ்வாறு அடிப்படை ஞானம் ஆன்மீகத்தால் ஞானாசிரியர் வழிகாட்ட , ஞானக் குணங்களாக வளர்ச்சியுறும் பொழுது அதில் வல்லமை பெற்றால் பிறவியை அறுக்கலாம் என்ற விரிவு பாடலால் கிடைக்கின்றது.

எனவே இப்பாடலின் அடிப்படைக் கருத்துத் திருஞான சம்பந்தராம் ஞானாசிரியரின் வாழ்வோடு சம்பந்தம் உற்றால் பிறவியை அறுக்கலாம் என்பதாகும். பாடல் ஞானாசிரியர் உறவைக் குறிப்பிடுகிறது என்பதே கருத்தாகும். அடுத்த பாடலோடு இக்கருத்துத் தொடர்புடையது என்பதால் இவ்விரண்டு பாடல்களையும் வீரசைவ நோக்கில் பொருள் காணும்பகுதி கட்டுரையின் பின்பகுதியாக அமைகிறது.

அருஞ்சொற் பொருள்

வல்லான் - வலிமை உடையவர், வண்மை - கொடைத்தன்மை, நலம் - பொருள்நலம், நல்ஆதரவு - பிறர்பால் காட்டும் அன்பு, சம்பந்தம் - தொடர்பு.

பாடல் -38

உற்றான் அலன் தவம் தீயில் நின்றான்அலன் ஊண்புனலா
அற்றான் அலன் நுகர்வும் திருநாவுக்கரசு எனும் ஓர்
சொல்தான் எழுதியும் கூறியுமே என்றும் துன்புஇல்பதம்
பெற்றான் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே.

இப்பாடல் திருநாவுக்கரசரைப் போற்றுகின்ற கட்டளைக் கலித்துறைப் பாடலாகும்.

முன்னை உரையாசிரியர் உரை

சுந்தரமூர்த்தி சுவாமிகளால் ஒருநம்பி அப்பூதி என்று சிறப்பித்துச் சொல்லப் பெற்ற மேன்மை அடைந்தவராம் அப்பூதி அடிகள், முத்தியை அடைவதற்காக மேற்கொள்ளப் பெறும் தவம் எதையும் ஒன்றிச் செய்யவில்லை. நெருப்பின் நடுவில் நின்று உடம்பை வாட்டி மனதை நிலைநிறுத்தினார் இல்லை. தண்ணீரையே உணவாகக் கொண்டு மற்ற பொருள்களை வெறுத்து விரதம் மேற்கொண்டார் இல்லை. ஐம்புல இன்பங்களை ஆரத் துய்த்துக் கொண்டே இருந்தும், திருநாவுக்கரசு என்ற சொல்லை எழுதியும், சொல்லியும் முத்தி என்று சொல்லப்பெறும் துன்ப மில்லாத இன்பநிலையைப் பெற்றார்.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

முன்பாடல் திருஞான சம்பந்தரின் தொடர்பாம் சம்பந்தத்தைப் பெற்றால், பிறப்பை அறுத்து முத்தியைப் பெறலாம் என்று கூறியது போல, இப்பாடல் திருநாவுக்கரசு என்ற பெயரை எழுதவும் சொல்லவும் செய்தால் முத்தியைப் பெறலாம் என்று குறிப்பிடுகிறது. எனவே இரண்டு பாடல்களும் ஞானாசிரியரைத் தெய்வ வடிவமாகக் கண்டு போற்றினால் முத்தியைப் பெறலாம் என்பதை வலியுறுத்துகின்றன.

இப்பாடலில் அப்பூதி என்ற தவமுனிவரின் செயல்களைச் சொல்லும் பொழுது, தவம் செய்யவில்லை. வேள்வி செய்ய வில்லை, விரதம் இருக்கவில்லை, திருநாவுக்கரசு என்ற பெயரை எழுதியும் சொல்லியும் முனிவர்கள் பெறுகின்ற முத்தியைப் பெற்றார் என்று குறிப்பிடுவது நினைந்து இன்புறத் தக்கதாகும். எனவே இல்லற வாழ்வை விட்டுவிட்டு முனிவர்கள் போல் தவம்

செய்வதை விட, இல்லற வாழ்வில் ஐம்புல உணர்வோடு திருநாவுக்கரசு என்னும் ஐந்தெழுத்தை எழுதியும் கூறியும் முத்தியைப் பெறலாம். பாடலில் தீயில் நின்றார் என்பது தீயில்நின்று தவம் செய்யவில்லை என்பதைக் கூறுவதோடு, தீயை வளர்த்து வேள்வியும் செய்யவில்லை என்பதையும் குறிப்பதாகக் கொள்ளலாம். நுகர்வு என்பது அனுபவிப்பது என்ற பொருளைத் தந்து இல்லற வாழ்வை அனுபவித்துக் கொண்டே ஞானாசிரியரின் பெயரோடு சம்பந்தம் கொண்டால் முத்தியைப் பெறலாம் என்ற குறிப்பினையும் தருகிறது.

வீரசைவ நோக்கில் இரு பாடல்களின் பொருள்

ஞானசம்பந்தர் பாடல் ஞானசம்பந்தரின் தொடர்பால் முத்தியைப் பெறலாம் என்று கூற, அடுத்த திருநாவுக்கரசு பாடல் அவரின் பெயரான ஐந்தெழுத்தை எழுதிக் கூறினால் முத்தியைப் பெறலாம் என்று குறிப்பிடுகின்றது. எனவே ஞானாசிரியர்களின் தொடர்பால் முத்தியைப் பெறலாம் என்பது இரண்டு பாடல்களின் அடிப்படைக் கருத்தாகும். வீரசைவத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்று எண்வகைக் காப்பு. இதனை அட்டாவரணம் என்பர். அட்டாவரணம் என்பது எட்டுக் கோட்டைகள். அதாவது தற்காப்பிற்கு அமைக்கப்படும் கோட்டைகள் என்று பொருள்படும். இந்த எண்வகைக் காப்போடு முதற்படியாக அமைவது ஐவகை ஒழுக்கமாகும். ஐவகை ஒழுக்கம் முதற்படி. எண்வகைக் காப்பு இரண்டாம்படி. ஐவகை ஒழுக்கத்தில் கிரியை மட்டும் மூலமாக நின்றது. எண்வகைக் காப்பில் கிரியையும் ஞானமும் இணைகின்றன.

ஐவகை ஒழுக்கம் மானிடர் அனைவர்க்கும் பொது. எண்வகைக் காப்பு வீரசைவர் என்ற தனித்தன்மை தரக்கூடிய சிறப்பு ஒழுக்கங்களாகும்.

குரு	இலிங்கம்
சங்கமம்	பாதோதகம்
பிரசாதம்	திருநீறு
அக்கமணி	திருமந்திரம்

என்பவை எண்வகைக் காப்பாகும். எண்வகைக் காப்பில் முதலில் அமைவது குரு என்பதாகும். குரு என்பவர் பக்தனுக்குச்

செம்பொருள் காட்சியை வழங்குபவர் ஆவார். அகக் கண்ணைத் திறக்கும் அருள் தந்தையும் ஆவார். இறைவனே குருவாக அமைவார் என்பது மரபாகும். பக்தனின் பரிபக்குவ நிலையை அறிந்து, உள்ளிருந்து உணர்த்துகின்ற இறை மானுடச் சட்டை தாங்கிக் குரு வடிவாக வந்து ஞானத்தைத் தர, அந்த ஞானம் பெற்ற பக்தன் முத்தியைப் பெறுவான். பிறப்பை உண்டாக்கும் அஞ்ஞான இழிவைத் தன் சிவஞானத்தால் ஒழிப்பவன் குரு ஆவான்.

இத்தகைய குரு வடிவே இருபாடல்களில் அமைந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் வடிவங்களாகும். இக்குரு வடிவங்களோடு வாழ்வியல் தொடர்பு கொண்டால் முத்தி பெறலாம் என்ற கருத்துப் பாடல்களில் அமைந்திருப்பதால் வீரசைவத்தின் எண்வகைக் காப்பில் குரு என்ற முதற்காப்பை இப்பாடல்கள் வலியுறுத்துகின்றன எனலாம். சிவப்பிரகாசர் தாம் ஞானம் பெறுவதற்குத் துணையாக இருந்த சிவஞானபாலய சுவாமிகளைப் பலவாறு போற்றிப் பாடியுள்ளார். மேலும் பொதுவாகக் குருவழிபாட்டினால் தான் இறையருளாகிய முத்தியைப் பெறலாம் என்ற கருத்தைத் தம் நூல்களில் எங்கெங்கு கூறமுடியுமோ அங்கங்குக் கூறியிருக்கிறார்.

அருவாய் உருவமும் ஆம்வெங்கை வாணர் அரும்பதத்தைக் குருவால்
அடைபவர்போல் உயிர்ப்பாங்கியைக் கொண்டு மெல்லப் பெருவார்
(திருவெங்கைக் கோவை பா.72)

இப்பாடற் பகுதியால் குருவால் இறைபதத்தை, முத்தியைப் பெறலாம் என்று சிவப்பிரகாசர் வலியுறுத்துவதை எடுத்துக் காட்டலாம். குரு தந்திடும் ஞானம் தான் முத்தியைத் தந்திடும் என்பதைக் கீழ்வரும் பாடற்பகுதி குறிப்பிடுகிறது.

'அண்ணல் அருந்தவ முனிவீர் முத்திதரு
சிவஞானம் அளிக்க வல்ல
கண்ணுதலான் தலங்கள்" (திருக்கூவ புராணம் 694)

இப்பகுதியில் முத்திதரு சிவஞானம் என்பதால், ஞானா சிரியரின் சிவஞானம் தான் முத்திதரும் என்பது பெறப்படுகிறது.

இவ்விரண்டு எடுத்துக்காட்டுகளால் வீரசைவ மரபுப்படி ஞானாசிரியரால் சிவஞானம் பெற்று முத்தியடையலாம் என்பது பெறப்படுகிறது.

அப்பூதி அடிகள் திருநாவுக்கரசர் நாமத்தைக் கொண்டது போல, மயிலம் சிவஞானியின் நாமத்தைக் கொண்டால், முத்தியைப் பெறலாம் என்பதில் அழுத்தமான கொள்கை உடையவர் சிவப்பிரகாசர் என்பதைப் பல செய்யுட்கள் மூலம் அறியமுடிகிறது.

'தவஞானம் இல்லாதார் சாற்றினும்வீடு எய்தும்
சிவஞான தேஎனும்பேர்ச் செல்வன் (நெஞ்சு. தூது, 5152)

என்ற பகுதியால் சிவஞானியின் பெயரைக் கூறினால் முத்தி கிடைக்கும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

திருஞான சம்பந்தரின் சம்பந்தத்தால் முத்தி பெறலாம் என்று கூறப்பெற்றிருப்பது போல, குருவருளால் பக்தன் ஒருவன் தன்னுடைய உடற் பிறவியை நீக்கிக் கொள்வான் என்பதைச் சிவப்பிரகாசர் ஒரு அற்புதமான உவமையால் விளக்குகிறார்.

உணவு உண்டபின் எப்படி உண்ட எச்சில் இலையைத் தூக்கி எறிகின்றோமோ அதுபோல ஞானாசிரியரின் குருவருள் ஞானம் கிடைக்கப் பிறவியாகிய யாக்கை தூக்கி எறியப்படும் என்கிறார்.

ஒண்த ரைக்கண் ஒழிவில் அருள்உருக்
கொண்ட டுத்த குருவரு ளால்தனைக்
கண்ட மெய்த்தவன் காயம் தனைஅனம்
உண்ட நெட்டிலை ஒப்ப விடுப்பனால். (பிரபு.லீலை , பா. 631)

இப்பாடல் மூலம் ஞானாசிரியரால் தன்னுடைய உண்மை நிலையை அறிந்து கொண்ட ஒருவன், தன்னுடைய உடம்பாகிய பிறவியை உணவு உண்ட எச்சில் இலையைத் தூக்கி எறிவது போல், உடம்புப் பற்றை விட்டுவிடுவான் என்ற பொருளைச் சிவப்பிரகாசர் வலியுறுத்துகிறார். எனவே ஞானாசிரியர் மாணவனின் அடிமைத் தன்மையாம் ஞானத்தை உணர்த்த, ஞானம் பெற்ற மாணவன் உடம்புப் பற்றை விடுவான் என்பது பெறப்படுகிறது.

இங்கு எடுத்துக் கொள்ளப் பெற்ற இரண்டு பாடல்களும் ஞானாசிரியரின் உறவால் முத்தியைப் பெறலாம் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. இக் கருத்து வீரசைவத்தின் அடிப்படைக் கருத்தான எண்வகைக் காப்பில் முதற் கருத்தாய் அமைந்து பாடல்களை வீரசைவ நோக்கில் பொருள் உணர வழி வகுக்கிறது.

அருஞ்சொற் பொருள்

தீயில் - தீயின் நடுவில், ஊண் - உணவு, புனல் - நீர், துன்புஇல் பதம் - துன்பம் இல்லாத முத்தி, அப்பூதி - அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவர்.

பாடல் - 39

பெருமிழலைக் குறும்பர்எனும் பரம யோகி
பெரிதுஉவந்துஉன் திருவடித் தாமரையைப் போற்றி
விரைமலர்தூய் வந்தனை செய்கின்றான் என்றால்
விளங்கிழையார் இருவருரொடும் முயங்கலாமோ
உரைமதிநின் தனைவெறுப்பது என்கொல் நின்னை
உடையனுக்கு அடுத்தசெயல் உனக்கும் ஆயின்
சுரர்முனிவர் பரவல்உறும் பெருஞ்சீர்த் தொண்டத்
தொகை செய்தோய் அறம்முதல்நால் வகைசெய்தோயே

இப்பாடல் சுந்தரமூர்த்தி மீது பாடப்பெற்ற விருத்தப்பா ஆகும்

முன்னை உரையாசிரியர் உரை

தேவர்களும் முனிவர்களும் சிரமேற் கொண்டு வணங்குவதற்கு ஒத்த பெருஞ் சிறப்பினை உடைய திருத்தொண்டத் தொகை எனும் நூலைச் செய்தவரே, அறம் பொருள் இன்பம், வீடு, என்ற நான்கினையும், தேவாரங்களினால் எடுத்துக் காட்டியும், மக்கள் அனைவரும் உணருமாறு வாழ்ந்து காட்டியும், வகைப்படுத்திய பெரு வீரரே, பெருமிழலை என்னும் ஊரில் இருக்கும் குறும்பர் எனப் பெயர் பெறும் பரமயோகியானவர் மிகவும் மகிழ்ந்து, தமக்கு வாழ்வளிக்கும் புகலிடமாக மணம் பொருந்திய மலர்களைத் தூவி வழிபாடு செய்கின்றார் என்று சான்றோர் சொல்லக் கேட்டும், விளங்கும் அணி அணிந்த இரு தேவியரோடும் கலந்து, அணைந்து வாழ்வது தகுதியுடையதாமோ. உம்மை உடையவனாகிய சிவனுக்குப் பொருந்திய செயல் உமக்கும் பொருந்துமானால் உம்மை வெறுப்பதில் பயன் என்? தெளியச் சொல்லுவாயாக.

பாடற் பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

இப்பாடலில் இரண்டு கோணங்களில் பொருள்கள் அமைந்துள்ளன. ஒன்று - சுந்தரமூர்த்தியின் பெருமையைச்

சொல்லுகின்ற பகுதி. இரண்டாவது - அறிவியல் உலகில் சுந்தரமூர்த்தி வரலாற்றில் எழுப்பப் படுகின்ற கேள்வி. அதற்குரிய சமாதானம் என்பவை ஆகும். முதல் பகுதியில் சுந்தர மூர்த்தியின் பெருமைகள் கூறப்படுகின்றன. அதில் முதல் பெருமை அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவரான பெருமிழலைக் குறும்பர் மற்ற எத் தெய்வங்களையும் வணங்காது, சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவடிகளையே தமக்கு அடைக்கலமாகக் கொண்டு , அவருடைய திருவடிகளைப் போற்றி, மூன்று காலங்களையும் உணருகின்ற சித்தி கைவரப்பெற்ற தன்மை. இரண்டாவது - உலகத்தார் போற்றும் திருத்தொண்டத்தொகை என்ற அடியவர் வரலாற்றைத் தந்த பெருமை. மூன்றாவது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகைப் பொருளைத் தாம் இறைவன் மீது பாடிய தேவாரப் பாக்களால் விளக்கியமை என்ற மூன்று சிறப்புக்கள் அமைந்துள்ளன.

சிவப்பிரகாசர் நால்வர் நான்மணி மாலையைப் பாட நினைத்த பொழுது அமைத்துக் கொண்ட உட்பொருள் நால்வரைப் போற்றுவதாகும். அந்த அடிப்படையில் மூன்று பெருமைகளும் சுந்தரரின் பெருமைகளைப் பற்றிக் கூறுவதாகும். அடுத்து நால்வரின் வரலாற்றில் உலகத்தார் மனதில் எழுந்த சந்தேகங்களை அவ்வவர் பாடல்களில் எழுப்பி, அதற்கு ஒரு அமைதியையும் சுட்டிக் காட்டுவது அவரின் அடிப்படை எண்ணம் என்பதையும் இப்பாடல் தருகிறது, அதாவது சுந்தரரின் வரலாற்றில் சிவனடியாராக விளங்கும் பெருமான், சங்கிலி, பரவை என்ற இரு பெண்களை மனைவியாகக் கொண்டு வாழ்ந்தமை இறை நெறிக்குப் பொருந்துமோ என்ற வினாவும், அதற்கு அமைதியாக அவர் போற்றும் சிவபெருமானுக்கு உமையும், கங்கையும் இரண்டு பெண்கள் அமைந்திருப்பது போல, இவரும் தனக்கு இரு பெண்களை அமைத்துக் கொண்டார் . எனவே அதனைக் குறை கூற முடியாது என்று கூறுகின்ற சமாதானம் ஆகும்.

இப்பாடலின் அடிப்படைக் கருத்து - தெய்வ நெறியில் வாழுகின்றவர்கள் இல்லற நெறியில் வாழ்ந்து கொண்டு, சிற்றின்பத்தை இறையருளால் அனுபவித்துக் கொண்டு வாழ்வது எத்தகைய ஒழுக்கக் கேடும் அல்ல என்பதை வலியுறுத்துவதாகும். இந்த இல்லற நெறியைச் சாத்திரங்களும், பிற சங்க

இலக்கியங்களும், பிற தமிழ் இலக்கியங்களும் , சிவனடியார்களின் வரலாறுகளும் எடுத்து இயம்புகின்றன. சிவஞான சித்தியார் என்ற சாத்திர நூல், உலகில் உள்ள உயிர்கள் ஆண், பெண் வடிவம் கொண்டு இணைந்து வாழ்வது, சிவபெருமான் சத்தியோடு வாழ்வதினால் ஏற்பட்ட பேரின்ப நிலையாகும் என்பதைக் கீழ்வரும் பாடலால் தெளிவாக விளக்குகிறது.

'சத்தியும் சிவமும் ஆய தன்மைஇவ் உலகம் எல்லாம்
ஒத்துஒவ்வா ஆணும் பெண்ணும் ஆக உணர்குண குணியும் ஆகி
வைத்தனன், அவளால் வந்த ஆக்கம், இவ் வாழ்க்கை எல்லாம்
இத்தையும் அறியார், பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார்.
(சிவஞான சித்தியார், சுபக்கம், பா.89)

இப்பாடலின் கருத்துச் சுருக்கம் - இறைவன், தான் ,சத்தி. சிவம் என இரு தன்மையாய் இருப்பதால் அன்றோ, உலகம் முழுவதும் ஆண், பெண் என்ற இரு வடிவங்களை இறைவன் விளங்க வைத்தான். சிவமும் சத்தியும் ஒன்ற லிங்க வடிவம் அவ் இருவகையால் இருப்பதற்குக் காட்சி அளவைச் சான்றாகும் என்பதாம். எனவே உலக ஆண், பெண் வாழ்க்கை இறைவனால் படைக்கப்பட்ட வாழ்க்கையாகும். அதனால் எந்த உயிரும் ஆண், பெண்ணாச் சேர்ந்து வாழ்வது இறைவன் கட்டளையாகும். இதனையே திருக்குறள் வலியுறுத்தும் பொழுது,

'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்துஆற்றின்
போஒய்ப் பெறுவது எவன்" (திருக்குறள் 46)

குறள் தரும் குறிப்புப் பொருள்

நல்வழியில் இல்வாழ்க்கை நடத்தினால் , அத்தகைய வாழ்வில் உள்ளவன், பிற நெறியில் சென்று அடைகின்ற பயன் யாது? ஒன்றும் இல்லை என்பதாகும். எனவே இல்லறத்தில் வாழ்வதே பயனுடைய தாகும். துறவறம் போன்ற பிறதுறையில் வாழ்வது மானிட வாழ்வில் பயனற்றதாகும் எனக் குறிக்கப் பெறுகிறது.

எனவே சாத்திரங்களும் இலக்கியங்களும் மானிட வாழ்க்கை ஆண், பெண் உறவில்தான் பெருமை பெறுகிறது என்று வலியுறுத்து கின்றன. எனவே சுந்தரர் முன்பிறப்பு வினையால் இப்பிறப்பில் இரண்டு பெண்களோடு வாழ்வது பொருத்த முடையதே என்பது பெறப்படுகிறது.

சிவப்பிரகாசர் இதற்கு மேலும் ஒரு அமைதியைப் பாடலில் குறித்துள்ளார். அதாவது ஒரு மனைவியோடு வாழாது இரு மனைவியரோடு வாழ்வதும் தவறல்ல. ஏனென்றால் இறைவனே உமையவள், கங்கை என்ற இரண்டு பெண்களோடு உறவுடையவர் என்பதால் இறைவருக்கு அடுத்த செயல் அடியவருக்கும் ஆயிற்று என்று அமைதி தருகிறார். இறைவன் வாழ்ந்து காட்டியபடி சுந்தரரும் வாழ்ந்ததால் அவ்வொழுக்கத்தை வெறுக்கக் கூடாது என்கிறார்.

வீரசைவ நோக்கில் பாடற்பொருள்

வீரசைவத்தின் சமய மரபு மனிதப் பிறப்புத் தோன்றியவுடன், உலக இன்பங்களை வெறுத்து, துறவு வாழ்க்கைக்குச் செல்வது அல்ல, அங்கத்தில் லிங்கத்தை ஏற்று, இல்லறத்தில் வாழ்ந்து பின் அதில் வெறுப்பு அடைந்து இறைவனையே பற்றுக் கோடாக வாழ்வதுதான் வீரசைவ மரபாகும். இந்த மரபு இன்றுவரை வீரசைவ தனமுனிவர்களாலும் கையாளப் பெற்று வருகிறது. பிரபுலிங்கலீலை இலக்கியத்தில் கணவன் மனைவியாக வாழ்ந்து பெருமை பெற்ற அறிஞர்கள் தம் வாழ்க்கை இடம் பெற்றுள்ளதையும், அந்நூலில் இடம் பெற்றுள்ள கீழ்வரும் பாடலும் வலியுறுத்துவதை உணரலாம்.

மானிடப் பிறவி அரிது அதில் அரசர்
மக்களாகுதல் அரிது அதனில்
ஊனுறுப்பு அமைதல்அரிது அதில்அரிதால்
உணர்வொடு போகங்கள் நுகர்தல்
ஆறெனப் பெரியர் கூறலால் (பாடல் 298)

பாடலில் பொருத்தமான உறுப்புக்கள் அமைந்து, போகங்களைத் துய்த்தல் அரிதிலும் அரிது என்று கூறப் பெற்றிருப்பதால், உறுப்புக்களால் பெறுகின்ற இல்லற இன்பத்தை வீரசைவ மரபு முழுமையாக ஏற்றுக் கொள்ளுகிறது என்பதால் இப்பாடல் வீரசைவ நோக்கில் பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளது.

அருஞ்சொற் பொருள்

பரமயோகி - சிவனையே நினைக்கின்ற அன்பர், விரை - மணம், விளங்கிழையார் - அணிகலன்கள் அணிந்த பெண்கள்,

இருவர் - பரவை, சங்கிலி, உரை - கூறுவாயாக. உடையவன் - சிவபெருமான், சுரர் - தேவர், அறம் முதல் நால்வகை - அறம், பொருள், இன்பம், வீடு.

பாடல் - 40

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூர் அன்பர்
பா எனப் படுவது உன்பாட்டுப்
பூ எனப்படுவது பொறிவாழ் பூவே

இப்பாடல் மாணிக்கவாசகரைப் போற்றிய அகவற்பா ஆகும்.

முன்னை உரையாசிரியர் உரை

சிவந்த நீண்ட சடையினை உடையவரும், தெய்வங்களுக்கு எல்லாம் தத்தம் முடிகளில் இரத்தினமாக வைத்துக் கொண்டாடும் தலைமைத் தன்மை உடையவருமாகிய சிவபெருமானின் திருவடிகளை வணங்கித் துதிக்கும் அன்பர், திருவாதவூரில் திருஅவதாரம் செய்த அன்பர், மலர் என்று சிறப்பித்துச் சொல்லப் பெறுவது திருமகள் வாழ்கின்ற தாமரை மலர்தான். அவ்வாறே பாட்டு என்று சிறப்பித்துச் சொல்லப் பெறும் பெருமை வாய்ந்தது உம்முடைய பாட்டே ஆகும்.

பாடற்பொருள் நயவுரை [பழ. முத்தப்பன்]

மாணிக்கவாசகர் இறைவனையே எப்பொழுதும் நினைந்து வாழ்பவர் என்பதை இப்பாடல் குறிப்பிடுவதோடு, அவருடைய பாடல்தான் தெய்வப் பாடல்களில் எல்லாம் சிறந்தது என்ற செய்தியைத் தருகிறது.

மாணிக்கவாசகரின் பாடல் சிறந்தது என்பதை விளக்க வந்த சிவப்பிரகாசர், வயிணவக் கடவுளான இலக்குமியை உவமையாகப் பதிவு செய்திருப்பது நினைவு கூறத் தக்கதாகும். தமிழ் வழிபாட்டு முறையில் பண்டு தொட்டு இன்றுவரை சைவமும் வைணவமும் பாகுபாடு இன்றிக் கலந்திருக்கும் வழிபாடே ஆகும். சிவவழிபாட்டில் திருமாலும் அவருடைய சத்தியான இலக்குமியும் இடம்பெற வேண்டிய முறைமையில் இடம்பெற்று வருவது அறியத் தக்கதாகும்.

எனவே சமயக் கடவுளர் வேறுபாடு அற்ற ஒரு வழிபாட்டைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில், சிவப்பிரகாசர் இலக்குமியை அதாவது அருள்சத்தியை மாணிக்கவாசகரின் திருவாசக, திருக்கோவையாருக்கு ஒப்பிட்டுக் காட்டியிருப்பது நினைவு கூறத் தக்கதாகும்.

மாணிக்கவாசகரைக் குறிப்பிடும் பொழுது, பாதம் போற்றும் வாதவூர் அன்பர் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார். பாதம் என்பது சிவபெருமானின் திருவடிகளைக் குறிப்பதோடு, சிவபெருமானுடைய அருட்சத்தியைக் குறிப்பதாகும். எனவே தான் திருப்பெருந்துறையில் அம்பிகைக்குப் பதிலாக அம்பிகையின் பாதத்தையே உருவத் திருமேனியாக இன்றைக்கும் வழிபடுகின்ற முறைமை காணப்பெறுகிறது.

திருப்பெருந் துறையில் அம்மன் திருவுரும் திருவடிகள் அமைப்பிலேதான் அமைக்கப் பெற்றிருக்கிறது. மற்றும் ஒரு சிறப்புண்டு திருப்பெருந்துறைக்கு. மற்ற எல்லாத் திருத்தலங்களிலும் திருத்தேர் விழாவில், திருத்தேரில் சோமாஸ்கந்த மூர்த்தி எழுந்தருளி அருள்பாலிப்பார்.

திருப்பெருந்துறையில் மட்டும் திருத்தேரில் மாணிக்க வாசகரின் திருவுரும், அதாவது அடியார் திருவுரும் எழுந்தருளப் பெற்றுத் தேரோட்டம் நடைபெறுவது குறிப்பிடத் தக்கதாகும். எனவே சிவப்பிராகசார் மாணிக்கவாசகர் பாடலுக்குச் சிறப்புக் கொடுக்கும் பொருட்டுத் தலைமைப் பண்பையும். தெய்வப் பண்பையும் அளித்திருப்பது பாடலுக்குரிய சிறப்பாகும்.

வீரசைவ நோக்கில் பாடற் பொருள்

பாடலில் பாதம் என்ற சொல் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். வீரசைவ எண்வகைக் காப்பில் பாதோதகம் என்பது ஏழாவது காப்பு ஆகும். புது தேவரின் திருவடிகளை திருமஞ்சனம் ஆட்டிய நீரைச் சேகரித்து வைத்து உண்ணும் நீரோடு உண்ணுகின்ற வழக்கம் இன்றியமையாத தாகும். இதை ஞான நன்னீர் என்று குறிப்பிடுவார்கள்.

எனவே பாதம் போற்றும் வாதவூரர் என்பது , திருப்பெருந்துறையில் ஞானாசிரியராக எழுந்துருளி உபதேசம்

செய்த ஆத்மநாதரின் ஞான நீரைப் போற்றுகின்ற மாணிக்கவாசகர் என்ற குறிப்பைத் தருவது போல் பாதம் என்ற சொல் அமைந்திருக்கிறது.

எனவே வீரசைவ மரபிற்கேற்பத் தத்துவத்தை விளக்கும் பாடலாக இப்பாடலைக் கொள்வதற்கு இடமுள்ளது.


அருஞ்சொற் பொருள்

செய்ய - சிவந்த, பாதம் - திருவடி, பா - பாடல், பூ - மலர், பொறி வாழ் பூவே - இலக்குமி தங்கியுள்ள தாமரை,

திருச்சிற்றம்பலம்.

பாடல் முதற்குறிப்பு





பெண்ணிற்கு அரசு தானாக
என்பு பெரு நீற்றறை பிரச
வண்ணக் கமல மலர்ப் பொய்கை
யாகச் செங்கல் மாமழையாய்
நண்ணச் சிறிய நரிகண்
முடங்குளைய பரியாய் நகர்புகுதப்
பண்ணற்குரிய அமுது உறழ் முத்தமிழ்
நால்வரையும் பணிவோம்.

(பிரபுலிங்க லீலை.10)

9 789385 508110